விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 29 திங்கட்கிழமை (13.08.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 238

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

## தமிழர் பகுதிகளில் இருந்து இராணுவம் வெளியேற வேண்டும்

### டெசோ மாநாட்டில் தீர்மானம்

(சென்னை)

தமிழர் பகுதிகளில் மறுவாழ்வுப் பணிகளை கண்காணிக்க பன்னாட்டுக்குழு அமைக்க வேண்டும், தமிழர் பகுதிகளில் இருந்து இராணுவம் வெளியேற வேண்டும், தமிழ் அரசியல் கைதிகள் சிறைகளிலிருந்து விடுதலை செய்யப்பட வேண்டும் என டெசோ மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இலங்கைத் தமிழ் மக்களின் நலன்களை மேம்படுத்தும் வகையில் 14 தீர்மானங்கள் நேற்று நிறை வேற்றப்பட்டன. (20ஆம் பக்கம் பார்க்க)




தி.மு.கவின் ஏற்பாட்டில் நடைபெற்ற டெசோ மாநாட்டில் கலந்துகொண்ட வர்களை படங்களில் காணலாம்...

## ஈரானில் நிலநடுக்கம் 250 பேர் பலி

(தெஹறான்)

ஈரானின் வட மேற்குப் பகுதியில் நேற்று ஏற்பட்ட இரண்டு கடுமையான நில நடுக்கங்களால் பலியானவர்களின் எண்ணிக்கை 250 ஆக அதிகரித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

நில நடுக்கத்தால் இதுவரை இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகவும் 6 கிராமங்கள் முற்றிலும் சேதமடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)

## ஆர்ப்பாட்டத்திற்கு கண்டனம்!

(கொழும்பு)

சென்னையில் தமிழீழ ஆதரவு டெசோ மாநாடு நடைபெறுவதைக் கண்டித்து கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தின் முன்னால் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் இந்தியாவைக் கண்டித்தும் முன்னாள் முதல்வர் கருணாநிதி, கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனின் உருவைப் பொம்மைகளை எரித்தும் நடத்தப்பட்டிருக்கிற செயல் அநாகரிகமானது என கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் த.தே.கூட்டமைப்பு முன்னெடுத்து வரும் (02ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க. - த.தே.கூ. கிழக்கில் கூட்டாட்சி?

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இணைந்து கிழக்கு மாகாண சபை ஆட்சியை அமைக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடைபெறவுள்ள கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் மாகாணத்தின் தமிழ் பேசும் மக்கள் நிச்சயமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே வாக்களிப்பர். (02ஆம் பக்கம் பார்க்க)

## தவறான வாக்குறுதியை நம்பியே உண்ணாவிரதத்தை கைவிட்டேன்

### 2009ஐ நினைவு கூர்ந்த கருணாநிதி



(சென்னை)

2009ஆம் ஆண்டு தான் உண்ணாவிரதத்திலிருந்தபோது போர் முடிவிற்கு வந்துவிட்டதாக இலங்கை அரசு அறிக்கை ஒன்று வெளியிட்டது. அது தனக்கு மத்திய வெளியுறவு அமைச்சகத்தால் அனுப்பிவைக்கப்பட்டது. அவ்வறிக்கையை நம்பியே உண்ணாவிரதத்தைக் கைவிட நேர்ந்ததாக தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி கூறினார். டெசோ மாநாட்டில் உறையாற்றிய போதே இதனைக் கூறினார்.

ஈழத்தமிழர்களுக்காக இரண்டு முறை ஆட்சியை இழந்த தி.மு.க. எப்போதுமே அவர்களுக்கு ஆதரவாக இருக்கும் என்றும் அவர் அப்போது கூறினார்.

பல சர்ச்சைகளில் சிக்கியிருந்த தமிழீழ ஆதரவாளர்கள் அமைப்பின் டெசோ மாநாடு நேற்று திட்டமிட்டபடி சென்னையில் நடைபெற்றது. இந்த மாநாட்டை திட்டமிட்டபடி வை.எம்.சி.ஏ. அரங்கில் சில நிபந்தனைகளுடன் நடத்த சென்னை உயர் (19ஆம் பக்கம் பார்க்க)

## பள்ளிவாசல் தீக்கிரை அமைச்சர் பார்வையிட்டார்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு உன்னிச்சை, பாவற்கொடிச் சேனை கிராமத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை அதிகாலை தீக்கிரையாக்கப்பட்ட முஹைஹதீன் ஜும்ஆ பள்ளிவாசலை நீதி அமைச்சரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் மற்றும் பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா உள்ளிட்ட பலர் சென்று பார்வையிட்டுள்ளனர்.

அத்துடன் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையதாக கருதப்படும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுணதீவு பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த பள்ளிவாசல் தீக்கிரையாக்கப்பட்ட சம்பவம் தொடர் (02ஆம் பக்கம் பார்க்க)

## கருணாநிதி, சம்பந்தனுக்கு எதிராக இந்திய தூதரகம் முன் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

தமிழகத்தின் சென்னையில் நேற்று இடம்பெற்ற டெசோ என்ற ஈழ ஆதரவாளர்கள் மாநாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்து, கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

கொழும்பில் உள்ள இந்திய தூதுவரின் இல்லத்திற்கு எதிரில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தை தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் உள்ளிட்ட தேசியவாத அமைப்புக்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்தது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தமிழக முன்னாள் முதல்வர் கருணாநிதி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் ஆகியோருக்கு எதிராக கோஷங்களை எழுப்பியதோடு கொடும்பாவிகளையும் எரித்தனர்.

அவர்கள் (20ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமைகள் மாநாட்டுக்கு இலங்கைக்கு அழைப்பு இல்லை

### அமைச்சர் பீரிஸ் தகவல்

(கொழும்பு)

ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழு அமர்வில் கலந்து கொள்ள இலங்கை அரசாங்கத்திற்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முற்பகல் இடம்பெற்ற செய்தியாளர் (20ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மீண்டும் பயங்கரவாத அச்சுறுத்தல் முப்படைகளையும் பலப்படுத்தவேண்டும்

## முன்னாள் பிரதமர் ரட்ணசிறி தெரிவிப்பு

பயங்கரவாதம் மீண்டும் அச்சமூட்டி வருவதால், பொலிஸாரும் முப்படையினரும் நவீன ஆயுதங்களுடன் நிலைநிறுத்தப்பட வேண்டும் என முன்னாள் பிரதமரும் சிரேஷ்ட அமைச்சருமான ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

ஹொரணையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் அவர் இதனை கூறியுள்ளார். இலங்கையின் சுதந்திரத்திற்கு தடையேற்படுத்துபவர்கள் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் மிகவும் வேகமாக செயற்பட்டு வருகின்றனர்.

இலங்கையை இரண்டாக பிரிக்க வேண்டும் என இரு அரசியல் கட்சிகள் அண்மையில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றின. தமிழ் பேசுபவர்கள் தனிநாட்டை கோருகின்றனர்.

இது விளையாட்டு அல்ல. போர் தேவை கருதி முன்னர் நிதி ஒதுக்கீடுகளை செய்தமைக்கு ஈடான நிதி ஒதுக்கீடுகளை செய்து இராணுவத்தை பலப்படுத்த வேண்டும் எனவும் ரட்ணசிறி விக்கிரமநாயக்க கூறியுள்ளார். (எ-8)

# பணப்பரிமாற்றல் சேவை புங்குடுதீவு தபாலகத்தில் இல்லை

புங்குடுதீவு தபாலகத்தில் வெஸ்ரேன் யூனியன் பணப்பரிமாற்றல் சேவையினை பெறமுடியாதுள்ளதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அறிவித்தல் பலகை போடப்பட்டுள்ள போதிலும் வெஸ்ரேன் யூனியன் பணப்பரிமாற்றல் சேவை அங்கு நடைபெறுவதில்லை என சுட்டிக்காட்டப்பட்டது.

இச்சேவையினை பெறச் செல்கின்ற போதெல்லாம் கடவுச் சொல் வழங்கப்படவில்லை என தெரிவித்து திருப்பி அனுப்பப்படுவதாக குற்றஞ்சாட்டப்பட்டது.

புங்குடுதீவில் வங்கிகள் எவையும் இயங்கவில்லை. அங்கு வெஸ்ரேன் யூனியன் பணப்பரிமாற்றல் சேவையை தபாலகத்தில் மட்டுமே பெறமுடியும். ஆனால் அங்கும் அதனைச் செய்யமுடிபதில்லை.

பணப்பரிமாற்றலுக்குகென வேலணைப் பிரதேசத்துக்கே செல்லவேண்டியுள்ளது என பொதுமக்கள் விசனம் தெரிவித்தனர். (எ-8)

# மோட்டார் சைக்கிளில் சாகசம் வீதியால் சென்றோர் அவலம்

## அரசடி வீதியில் சம்பவம்

மோட்டார் சைக்கிளில் சாகசம் காட்டித் திரிந்த இளைஞர்கள்சிலர் அப்பகுதியைச்சேர்ந்த இளைஞர்களால் நையப்புடைக்கப்பட்டனர்.

இச்சம்பவம் நேற்றிரவு 9 மணியளவில் நல்லூர் அரசடி வீதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது;

நல்லூர் அரசடி வீதி வழியாக வீடு திரும்பிக் கொண்டருந்த பெண்களை இலக்கு வைத்து 10 மோட்டார் சைக்கிள்களில் வந்த குழு ஒன்று சாகச நடவடிக்கைகளைக் காட்டி, அவ்வீதி வழியாக வேகமாக சுற்றித் திரிந்தது.

இதனை அவதானித்த அப்பகுதியைச் சேர்ந்த இளைஞர்களும் அங்கு நின்ற இளைஞர்களும் அவர்களை மறித்துள்ளனர். இதன்போது மோட்டார் சைக்கிள் குழுவில் ஏனையோர் தப்பிவிட அவர்களில் இருவர்மட்டும் இளைஞர்களிடம்மாட்டிக்கொண்டனர்.

இதன்போது ஏற்பட்ட கருத்து மோதல் கைகலப்பாக மாறியது. மீண்டும் அங்கு வந்த மோட்டார் சைக்கிள் குழுவும் இளைஞர் குழுவும் அடிதடியில் ஈடுபட்டனர்.

இதனால் அவ்வீதியூடாக பயணித்த பக்தர்கள் பலர் பெரும் சிரமத்தை எதிர்நோக்கினர்.

• தற்செயலாக அவ்விடத்திற்கு வந்த போக்குவரத்து பொலிஸாரும் இவ்விடயத்தை பெரிதுபடுத்தாது அவ்விடத்தை விட்டு அகன்றுவிட்டனர்.

இதனால் இம்மோதல் சுமார் 1 மணி நேரம் வரை நீடித்தது.

பிறிதொரு இளைஞர் குழு ஒன்று வந்து மோதலுக்குள்ளான இரு குழுக்களையும் சமரசமாக்கிய பின்னரே அம்மோதல் தணிந்தமைகுறிப்பிடத்தக்கது. (எ-8,4)

# ஐ.தே.க...

எனவே கூட்டமைப்பு அதிக ஆசனங்களைப் பெறும் வாய்ப்புகள் உள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன் குறிப்பிட்டுள்ளார்.

சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தல் பிரசாரம் நேற்று யட்டியாந்தோட்டையில் இடம்பெற்றபோது யோகராஜன் உரையாற்றினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு; கிழக்கு வாழ் தமிழ் மக்களின் வாக்குகளை பெறுகின்ற அதே நேரம் சிங்கள மற்றும் முஸ்லிம்களின் வாக்குகளை ஐக்கிய தேசியக் கட்சி பெற்றுக் கொள்ள வாய்ப்புகள் உள்ளன.

எனவே கிழக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு -ஐக்கிய தேசியக் கட்சி கூட்டு ஆட்சி அமைய வாய்ப்புள்ளது.

இது எதிர்காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் ஆட்சியமைப்பதற்கான அடித்தளமாகவும் அமையும் என்று யோகராஜன் குறிப்பிட்டார். (எ-8)


டிஜிற்றல் பனர் பிரிண்டிங்

1 சதுர அடி 30/-

(C-746)

மூர்த்தி டிஜிற்றல்

62/17, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

021 222 1358


# சந்தேக நபர்கள் குறித்து தீர்மானம் எதுவும் இல்லை

## சட்டமா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

மன்னார் நீதிவானுக்கு விடுக்கப்பட்ட தொலைபேசி மூலமான அச்சுறுத்தல் தொடர்பான சந்தேக நபர்களுக்கு எதிரான நடவடிக்கை குறித்து தீர்மானம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என சட்டமா அதிபர் பாலித பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக அறிவுறுத்தல்களை கோரும் அறிக்கை ஒற்றை சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு குற்றப் புலனாய்வுத் திணைக்களம் கையளித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

நீதிமன்றத்தை தாக்கிய சந்தேக நபர்களை கைது செய்யுமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு நீதவான் உத்தரவிட்டுள்ளதாக சட்டத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன. எனினும் கைதுகள் எதுவும் இடம்பெறவில்லை. நீதவானுக்கு எதிரான அச்சுறுத்தல் மற்றும் நீதிமன்ற கட்டிடத் தொகுதி மீதான தாக்குதல் தொடர்பாக இருமுனை விசாரணைகள் நடைபெறுவதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹன கூறினார்.

மன்னார் நீதிவான் ஏ.ஜூட்ஸனுக்கு ஜூலை 18ஆம் திகதி விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் குறித்த விசாரணைகளை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் பூர்த்தி செய்துள்ளனர். எனினும் நீதிமன்றக் கட்டிடம் மீதான தாக்குதல் தொடர்பாக விசாரணைகள் தொடர்கின்றன.

தாக்குதலில் சம்பந்தப்பட்டதாக கூறப்படும் 26 சந்தேக நபர்களை செவ்வாய்க்கிழமை நீதிமன்றில் ஆஜராகுமாறு மன்னார் நீதவான் உத்தரவிட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் கூறினார்.

நீதிவானுக்கு அச்சுறுத்தல் விடுத்தவர் மற்றும் நீதிமன்றத்தை தாக்கியவர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தி ஜூலை18ஆம் திகதியிலிருந்து மன்னார் சட்டத்தரணிகள் தொடர்ந்தும் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். (எ-8)

# கிளிநொச்சியில் விபத்து இளைஞன் காயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் ஏற்பட்ட வாகன விபத்தில் இளைஞரொருவர் படுகாயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டார்.

நேற்று மாலை 5.20 மணியளவில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பளையிலிருந்து கிளிநொச்சி நோக்கி பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரின் அலுவலக வாகனம் வந்து கொண்டிருந்தபோது கிளிநொச்சி கொமர்ஷல் வங்கிக்கு முன்பாக, முன்னால் சென்ற முச்சக்கரவண்டி ஒன்று ஏ9 வீதியின் வலப்பக்கத்திற்கு செல்வதற்காக திரும்பியுள்ளது.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினரின் அலுவலக வாகனம் வேகத்தை குறைத்த வேளை பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டினை இழந்து பாராளுமன்ற உறுப்பினரின வாகனத்தின் பின்புறமாகவும் முச்சக்கர வண்டியிலும் மோதி விபத்திற்கு உள்ளாகியது.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த கிளிநொச்சி விவேகானந்த நகரைச் சேர்ந்த இரு இளைஞர்களில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். (எ-8)

# ஆர்ப்பா...

வடக்குக் கிழக்கு இணைந்த அலகின் அடிப்படையிலான தீர்வு நோக்கிய முயற்சியை கருத்தில் கொண்டு, த.தே.கூட்டமைப்பின் உயர்மட்டம் புறக்கணித்து, டெசோ மாநாட்டிற்கு செல்வதில்லையென தீர்மானம் எடுத்திருந்தது.

இந்த நிலையில் கூட்டமைப்பின் தலைவரின் உருவப் பொம்மையை எரித்தும் செருப்பால் அடித்தும் அசிங்கப்படுத்தியது மிகவும் அநாகரிகமானது. இந்திய அரசியலையும் கூட்டமைப்பையும் இணைத்து எதிர்த்தே தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தியுள்ளது.

சென்னையில் நடத்தப்பட்ட டெசோ மாநாட்டோடு கூட்டமைப்பை முடிச்சுப் போட்டு தமிழர்கள் தொடர்பாக இன்றைக்கும் மாற்றமடையாமல் இருக்கும் பேரினவாத சிந்தனைகளை, செயற்பாடுகளை சிங்கள மக்கள் மத்தியில் விதைப்பது நிரந்தர அமைதிக்கு வழிவகுக்காது என நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

# பள்ளிவாச...

பில் பொலிஸார் தொடர்ந்து விராணையை மேற்கொண்டு வருகின்றனர்.

தற்போது இந்த பள்ளிவாசல் மீளவும் இராணுவத்தினரால் புனரமைக்கப்பட்ட நிலையில் இராவணுத்தினரும் பொலிஸாரும் வழமை நிலையை ஏற்படுத்தியுள்ளனர்.

இதேவேளை நேற்று முன்தினம் இந்தக் கிராமத்தில் கோடரியினால் வெட்டப்பட்டு படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் பெண்மணியையும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் சென்று பார்வையிட்டார். (எ-8)


தென்மராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ-து)

கொடிகாமம்

பணிநிலை வெற்றிடம்

களஞ்சிய முகாமையாளர்

- பதவிகளின் எண்ணிக்கை :- 05
- சம்பள அளவுத்திட்டம் :- (கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் 66/2006 சுற்றுநிருபத்திற்கமைய 208/14 ஆவது சம்பளக்குறியீடு)

9700-11350

80X10-85X10

- வயது :- 18 தொடக்கம் 45 வரை (சங்கப் பணியாளருக்கு வயதெல்லை பொருந்தாது.)
- பிணை :- தெரிவு செய்யப்படுமிடத்து சங்கத்தினால் கோரப்படும் ஆதனப்பிணை, ரொக்கப் பிணை என்பவற்றை செலுத்தத் தயாராக இருத்தல் வேண்டும்.

தகைமைகள் :-

அ) கூட்டுறவுப் பணியாளரின் 15வது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 02 வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 16வது சம்பளத்திட்டத்தில் 04 வருடத்திற்கு குறையாத அனுபவம்

அல்லது

ஆ) கூட்டுறவுப்பணியாளர் (சாதாரணதரம்) பத்திரம்/ க.பொ.த (சாதாரண தரத்தில்) 02 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம்/ வர்த்தக கணிதம்/ தூயகணிதம், சிங்களம்/தமிழ் பாஷை என்பவற்றினை உள்ளடக்கிய 06 பாடங்களில் சித்தி.

சம்பந்தப்பட்ட துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

கணணி அறிவு முக்கியமானதாக கவனத்திற் கொள்ளப்படும்.

- விண்ணப்பிக்கும் முறை :- மேற்படி பதவிக்கான விண்ணப்பத்தினை சங்கத் தலைமைக் காரியாலயத்தில் பெற்றுப் பூரணப்படுத்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகளுடன் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "களஞ்சிய முகாமையாளர் 208/14 பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிட்டு "பொதுமுகாமையாளர் தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பருத்தித்துறை வீதி, கொடிகாமம்" எனும் முகவரிக்கு 27.08.2012 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரிலோ அல்லது பதிவுத்தபாலிலோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பதாரி சங்கப் பணியாளர் எனின் குறித்த சங்கத்தினூடாகவே விண்ணப்பிக்கப்படல் வேண்டும்.

பொது முகாமையாளர்

13.08.2012 (C-758)



கிளி/ கிளிநொச்சி இந்துக் கல்லூரி

சேவை நலன் பாராட்டும் பிறந்தநாள் வாழ்த்துக்களும்

எமது கல்லூரியில் மிக நீண்ட காலம் கடமையாற்றி இன்று ஓய்வுபெறும் சிரேஷ்ட ஆசிரியர்

செல்வி அமிர்தாஞ்சனி சிவசுப்பிரமணியம்



அவர்களின் சேவையைப் பாராட்டுவதுடன் பிறந்த நாள் நல்வாழ்த்தினையும் தெரிவிப்பதோடு அவரின் ஓய்வுக்காலம் சீரும் சிறப்புமாக அமைய வாழ்த்துகின்றோம்.

கல்லூரிச் சமூகம்
கிளி/ கிளிநொச்சி இந்துக் கல்லூரி
D-7, கிளிநொச்சி.

(211)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## மனம் ஒரு குரங்கு

ஒரு சந்நியாசி இருந்தார். அவரிடம் போய் ஒருவர்... "சுவாமி! உங்களுக்கு என்ன வேண்டுமோ கேளுங்கள்... உங்களுக்காக எதையும் செய்யத் தயாராக இருக்கிறேன்" என்றார்.

சந்நியாசி நிமிர்ந்து பார்த்தார்...

"எதையும் செய்யத் தயாராக இருக்கிறாயா?" என்று கேட்டார்.

"ஆமாம்!" என்றார் அவர்.

"வாக்குக் கொடுத்த பின்னர் தயங்கக்கூடாது"–"தயங்க மாட்டேன்" என்றார்.

"அப்படியென்றால் உன் குடும்பம், சொத்து, வீடு வாசல் அனைத்தையும் உதறிவிட்டு நாளைக்கு என் கூடவே வந்து விடு" என்றார்.

அந்த நபர் திகைத்துப் போனார். "சுவாமி... அந்த அளவுக்கு என் மனம் இன்னும் பக்குவம் அடையவில்லை. நான் இப்போது நடத்திக் கொண்டிருக்கும் வியாபாரத்தை ஏற்றுக் கொள்ளும் அளவுக்கு என் மகனும் இன்னும் பக்குவம் அடையவில்லை... அப்படி இருக்கும்போது..." என்று இழுத்தார்.

இப்போது அந்த சந்நியாசி ஒரு கதை சொன்னார். அந்தக் கதை இதுதான்.

ஒரு குரங்கு... சபையிலே ஓரமாக உட்கார்ந்திருந்து பிரசங்கம் கேட்டுக்கொண்டிருந்தது. உடனே அது தன்னுடைய மனம் பக்குவம் அடைந்து விட்டதாக நினைத்து, தோட்டத்துக்குப் போய் ஒரு பாறை மேலே உட்கார்ந்து ஒருநாள் பூராகவும் ஜெபம் செய்ய வேண்டுமென்று தீர்மானம் செய்தது. அதேமாதிரி போய் உட்கார்ந்து ஜெபம் செய்ய ஆரம்பித்தது. சற்றுநேரம் சென்றபோது... அதன் மனதில் ஒரு சந்தேகம் ஏற்பட்டது.

"ஒருவேளை நான் இப்படியே பட்டினி கிடந்தால், எனக்கு வேண்டிய இரையைத் தேட வெளியே போய் மரத்துக்கு மரம் தாவ முடியாமல் போய்விடுமோ... என்று சந்தேகம் கொண்டது.

அதனாலே அதற்கு தொடர்ந்து ஜெபம் செய்ய முடியவில்லை. உடனே என்ன செய்தது... ஓடிப்போய் ஒரு மரத்திலே இருந்த கனிகளையெல்லாம் பறித்து வந்தது. ஒரு மூலையிலே அதையெல்லாம் தயாராக வைத்துக்கொண்டது. அதன்பின் ஜெபம் செய்ய ஆரம்பித்தது.

சிறிது நேரம் சென்றதும் மீண்டும் மனதிலே ஒரு சந்தேகம்...

ஒருவேளை... பட்டினியால் என் உடம்பு மிகவும் பலவீனம் அடைந்து, மூலையிலே இருக்கும் அந்தப் பழங்களை எழுந்து நடந்து போய் எடுத்து சாப்பிட முடியாமல் போய்விட்டால், என்ன செய்வது அந்தப் பழங்களைப் பார்த்தே ஏங்கிப்போய் இறந்துவிடுவேன் போல ஆகிவிடுமோ? என்றெல்லாம் நினைப்பு ஏற்பட்டது.

இதற்கு பயமாகப் போய் விட்டது. அழுகை வந்து விட்டது. உடனே என்ன செய்தது தெரியுமா... எழுந்து ஓடிப்போய் அந்தப் பழங்களையெல்லாம் அள்ளிக் கொண்டு வந்து காலடியிலே வைத்துக் கொண்டது. மறுபடியும் ஜெபம் செய்தது.

சிறிதுநேரம் செல்ல மறுபடியும் மனதினுள் மீண்டும் ஒரு சந்தேகம்.

"ஒருநாள் பட்டினிக்குப் பின்பு... ஒருவேளை நம்மால் கையை நீட்டி பழங்களை எடுத்து சாப்பிடும் அளவிற்கு பலம் இல்லாமல் போய்விட்டது என்றால் என்ன செய்வது...?

உடனே தன்னை மறந்த நிலையில் ஒரு பழத்தை எடுத்து வாயிலே போட்டுக்கொண்டது.

இப்போது வாயை அசைத்து ஜெபம் செய்ய முடியவில்லை.

மனமும் அந்தப் பழத்தின் சுவையில் லயித்துப் போனதில் சாப்பிடத் தொடங்கியது. வாயில் இருந்த பழத்தைச் சாப்பிட்டு முடித்ததும் அந்தக் குரங்கு நினைத்துப் பார்த்தது... "எப்படியும் நாளைக்கு இந்தப் பழங்களை நான்தானே சாப்பிடப் போகிறேன்" அதை இப்போதே சாப்பிட்டு விட்டால் என்ன? பட்டினியுடன்தான் ஜெபம் செய்ய வேண்டுமென்று சட்டமா என்ன?"

இப்படியாக நினைத்துக் கொண்டே அந்தக் குரங்கு எல்லாப் பழங்களையும் எடுத்து வாயினுள் போட ஆரம்பித்தது. வயிறு நிரம்பியது... ஜெபம் செய்யும் எண்ணம் மறைந்து விட்டது. அந்த இடத்திலேயே படுத்து உறங்க ஆரம்பித்தது. இதுதான் அந்த சந்நியாசி கூறிய கதை.

அதனாலே மனதை கட்டுப்படுத்துவது என்பது அவ்வளவு சுலபமான விடயமில்லை. அது மிகவும் கஷ்டம். மனம் ஒரு குரங்கு மாதிரி என்று சொல்வது. இது இரண்டையுமே அடக்குவது சிரமமான காரியம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# ஊழியர்களின் பகிஷ்கரிப்புக்கு மின்சார சபை அனுமதி மறுப்பு

சம்பள முரண்பாடுகளை நீக்குவது தொடர்பாக இணக்கம் காணப்பட்டுள்ள நிலையில் அநீதியான கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு மின்சார சபை ஊழியர்கள் தொடர்ந்தும் பணி பகிஷ்கரிப்பில் ஈடுபடுவதை அனுமதிக்க முடியாது என இலங்கை மின்சார சபை வலியுறுத்தியுள்ளது.

சபையின் நிர்வாக நடவடிக்கைகளில் தலையீடு செய்வதற்கான சந்தர்ப்பம் தொழிற்சங்கங்களுக்கு வழங்கப்படமாட்டாது என இலங்கை மின்சாரசபையின் உபதலைவர் அனுர விஜேயபால தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தமது கோரிக்கைகளுக்கு உரிய தீர்வினை வழங்குவதாக தெரிவிக்கும் இலங்கை மின்சார சபை மறுபுறம் தொழிலாளர் உரிமைகளை மீறுவதாக மின்சார சபை தொழிற்சங்க ஒன்றியம் குற்றம் சுமத்தியுள்ளது.

ஒருசில ஊழியர்கள் நாசகார செயலில் ஈடுபடுவதாக சுமத்தப்படுகின்ற குற்றச்சாட்டுக்களை முற்றாக நிராகரிப்பதாகவும் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் ரஞ்ஜன் ஜயலால் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே நாட்டின் சில பகுதிகளில் நேற்று காலை மின்விநியோகம் தடைப்பட்டிருந்ததாக எமது பிராந்திய செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக இலங்கை மின்சார சபையின் உப தலைவர் அனுர விஜேயபாலவுடன் வினவியபோது பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் சிலரின் நாசகார செயல்களே அதற்குக் காரணம் என கூறினார். (ரு-2)

# இராசி பலன்

13.08.2012
(ஆடி 29, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
ஏகாதசி முன்னிரவு 7.56 மணிவரை
மிருகசீரிடம் பிற்பகல் 3.50 மணிவரை
இராகுகாலம் 7.35-9.05 மணிவரை
சுபநேரம் 12.05-1.35 மணிவரை
ஏகாதசி விரதம்,
அமிர்த சித்தம்.

**மேடம்** தைரியத்தோடு செயற்பட்டு சாதனை படைக்கும் நாள், உறவினர்களின் உதவிகள் கிடைக்கும், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், கௌரவமான நாள்.

**இடபம்** வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், வருமானம் திருப்தி தரும், புதிய முயற்சி ஒன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மிதுனம்** எப்படி நடக்குமோ என நினைத்த காரியம் நல்லபடியாக நடைபெறும், நண்பர்கள் சிலருடன் சேர்ந்து வெளியிடங்களுக்குச் செல்லும் சூழ்நிலை உருவாகும், கற்பனை மிகுதியான நாள்.

**கடகம்** பணப்புழக்கம் அதிகரித்தாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், பயணங்களால் அலைச்சல்கள் அதிகரித்தாலும் ஆதாயமும் பெறுவீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**சிங்கம்** தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், பயணங்கள் கைகூடும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கன்னி** திறமைகள் வெளிப்படும் நாள், அரைகுறையான பணிகளை மீண்டும் செய்து முடிப்பீர்கள், பிறர் உதவியுண்டு, செய்தொழிலை விருத்தி செய்ய அதிக பிரயாசை எடுப்பீர்கள்.

**துலாம்** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், சில கட்டுப்பாடுகளை எதிர்கொள்ள நேரிடலாம், கொடுக்கல்-வாங்கல்களில் ஏற்பட்ட வில்லங்கங்கள் விலகும், பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்** வரவும் செலவும் சமமாகும், குடும்பப் பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பதன் மூலம் மனநிம்மதி ஏற்படும், மனச்சஞ்சலமான நாள்.

**தனுசு** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், தேவைகள் பூர்த்தியாகும் நாள், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும்.

**மகரம்** கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், கடன் பிரச்சினைகள் சுமுகமாக அமையும், தொழில் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருந்தவர்கள் விலகுவர், தேவைகள் பூர்த்தியாகும்.

**கும்பம்** பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், தொழில் நலன் கருதி அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனை பெறுவீர்கள், சொத்துக்களால் நன்மையுண்டு.

**மீனம்** மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பேச்சில் கனிவு பிறக்கும், வாகன சுகமுண்டு, பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சுப செலவுகள் அதிகரிக்கும்.

வளவன்

# கசூரினா பகுதி மீனவர்களின் வலைகள் சேதமாக்கப்படுகின்றன

## உல்லாசப் பயணிகளால்தான் எனவும் குற்றச்சாட்டு

(காரைநகர்)

காரைநகர் கசூரினா கடற்கரைக்கு வரும் உல்லாசப் பயணிகள் கடற்தொழிலாளர்களின் மீன்பிடி வலைகளை அறுத்து நாசப்படுத்திச் செல்வதாக மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். இது தொடர்பான சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் நடைபெற்றது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

காரைநகர் கசூரினா கடற்கரைக்கு உல்லாசப் பயணிகளாக வருபவர்கள் கடலுக்குள் கடற்றொழிலாளர்கள் விரித்துள்ள வலைகளை அறுத்து சேதப்படுத்துகின்றார்கள். உல்லாசப் பயணிகளின் பயன்பாட்டிற்கென குறிப்பிட்டளவு எல்லை குறிக்கப்பட்டு அதற்கப்பால் கடற்றொழிலில் ஈடுபட்டால் அதனையும் தாண்டியே மீனவர்களின் வலைகள் அறுத்து சேதப்படுத்தப் படுகின்றன. இதற்கு முன்பும் பல தடவைகள் இவ்வாறு சேதப் படுத்தப்பட்டதாகவும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர். இச் சம்பவம் தொடர்பாக காரைநகர் பிரதேச கடற்றொழில் சங்கங்களின் சமாசத் தலைவர் ஜெயதீபன் கருத்துத் தெரிவிக்கையில்,

இவ்வாறு பல தடவைகள் கடற்றொழில் உபகரணங்கள் சேதப்படுத்தப்பட்ட போதும் காரைநகர் கசூரினா கடற்கரையை நிர்வகிக்கின்ற பிரதேச சபையிடம் முறைப்பாட்டிருந்தோம். இருந்த போதும் அவர்கள் இதுவரை எந்தவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லை. இந்நிலை தொடருமாக இருந்தால் காரைநகர் கசூரினா கடற்கரைக்கு உல்லாசப் பயணிகளின் வருகையை தடுப்பதற்கு ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட யோசித்து வருவதாகவும் தெரிவித்துள்ளார். (ரு-9-246)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 80-140 | 70 | 70 |
| பச்சமிளகாய் | 60 | 80 | 90 |
| தக்காளி | 50 | 50 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 35 |
| கோவா | 60 | 70 | 70 |
| கரட் | 100 | 100 | 160 |
| பூசணி | 30 | 40 | 50 |
| புடோல் | 40 | 50 | 50 |
| வாழைக்காய் | 60 | 60 | 40 |
| சின்ன வெங்காயம் | 50 | 70 | 70 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 | 80 |
| பாகற்காய் | 70 | 90 | 60 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 50 |
| கருணைக் கிழங்கு | 150 | 120 | -- |
| பயற்றங்காய் | 60 | 70 | 40 |
| லீக்ஸ் | 120 | 100 | 130 |
| பீற்றூட் | 40 | 40 | 60 |
| கறிமிளகாய் | 70 | 70 | 100 |
| முருங்கைக்காய் | 120 | 110 | 100 |
| போஞ்சி | 80 | -- | 120 |
| கத்தரிதம்புள்ள | 60 | 50 | -- |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 60 | 70 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 20 | 25 | 18-20 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்தி - 2011

## வடக்கின் பங்களிப்பு 3.7% மட்டுமே; வளர்ச்சியோ 27.1%

1) 2011ஆம் ஆண்டுக்கான மாகாண ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்தி (மா.மொ.உ.உ) தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் மதிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியினை பிரிப்பதன் அடிப்படையில் இலங்கை மத்திய வங்கியின் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் கணிக்கப்பட்டிருக்கிறது.

மாகாணங்களுக்கான மா.மொ.உ.உ மதிப்பிடும்போது மொத்த உள்நாட்டு உற்பத்தியிலுள்ள ஒவ்வொரு ஆக்கக்கூறு விடயத்தின் பெறுமதியும் மாகாண மட்டத்திலான பொருத்தமான குறிகாட்டிகளைப் பயன்படுத்திப் பகுக்கப்பட்டன.

2) 2011இல் நிலையான விலைகளிலான மொ.உ.உ (உண்மை நியதிகளில்) 8.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த அதேவேளை நடைமுறைசந்தை விலைகளிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி (பெயரளவு நியதிகளில்) 16.7 சதவீத்தால் வளர்ச்சி அடைந்து ரூ.6,543 பில்லியனை அடைந்ததுடன் தலைக்குரிய வருமானம் ரூ.313,511 (ஐ.அமெரிக்க டொலர் 2,836) ஆக விளங்கியது.

3) கடந்த காலங்களில் அவதானிக்கப்பட்ட போக்கைத் தொடர்ந்து, மொ.உ.உற்பத்தியில் மேல் மாகாணத்தின் பங்கு 2011இல் மேலும் குறைவடைந்து மாகாணங்களுக்கு இடையிலான ஏற்றத் தாழ்வை மேலும் குறைத்தது.

எனினும் மேல் மாகாணத்தின் மாகாண ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்தி தயாரிப்பு மற்றும் வர்த்தகத்தின் விரிவாக்கத்தால் பெருமளவு உந்தப்பட்டு 15.6 சதவீதம் என்ற ஆரோக்கியமான வீதத்தில் வளர்ச்சி அடைந்தது.

வட மாகாணம் உயர்ந்த பெயரளவு வளர்ச்சி வீதத்தைப் பதிவு செய்ததுடன் வேளாண்மை, மீன்பிடி, கட்டிடவாக்கம், போக்குவரத்து மற்றும் நிதியியல் பணிகள் என்பவற்றின் விரிவாக்கத்தால் உந்தப்பட்டு தேசிய பொருளாதாரத்திற்கு தனது பங்கினை அதிகரித்துக் கொண்டது.

அடுத்தபடியாக வடமேல் மற்றும் தென் மாகாணங்கள் உயர்ந்த வளர்ச்சி வீதங்களைக் கொண்டிருந்ததுடன் மொ.உ.உற்பத்திக்கு தமது பங்கினையும் அதிகரித்துக் கொண்டன.

இவ்விரு மாகாணங்களும் வர்த்தகம்,தயாரிப்பு, நிதியியல் பணிகள் மற்றும் போக்குவரத்தில் இருந்தான உயர்ந்த பங்களிப்பின் மூலம் நன்மையடைந்த அதேவேளை, தென் மாகாணம் கட்டிடவாக்கத் துறையிலான உயர்ந்த வளர்ச்சிப் போக்கின் மூலம் அதிக நன்மை அடைந்தது.

கிழக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களின் பேரளவு வளர்ச்சி வீதங்கள் மெதுவடைந்ததுடன் 2011 இன் முதல் காலாண்டில் நிலவிய மோசமான வானிலை நிலைமைகளைத் தொடர்ந்து வேளாண்மைத் துறை பின்னடைவைச் சந்தித்தன் காரணமாக மொ.உ.உற்பத்தியில் அவற்றின் பங்குகளின் வீழ்ச்சியைப் பதிவு செய்தன.

2011இன் பின்னரைப் பகுதியில் நீர்மின்வலு உருவாக்கத்திலான வீழ்ச்சியுடன் மத்திய மாகாணத்தின் மொ.உ.உற்பத்தியின் பெயரளவு வளர்ச்சி வீதம் குறைவடைந்ததுடன் அதன் பங்கும் வீழ்ச்சியடைந்தது.

**மாகாண ரீதியாக மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதங்கள்**

2011இல் அனைத்து மாகாணங்களும் அவற்றின் மாகாண ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இரட்டை இலக்க பெயரளவு வளர்ச்சி வீதங்களைப் பதிவு செய்தன.

2011இல் வட மாகாணம் பெயரளவு நியதிகளில் 27.1 சதவீதமான உயர்ந்தளவு வளர்ச்சி வீதத்தைப் பதிவு செய்தது.

வட மேல் மற்றும் தென் மாகாணங்களில் மாகாண ரீதியான மொ.உ. உற்பத்தி முறையே 21.9 சதவீதத்தாலும் 21.4 சதவீதத்தாலும் வளர்ச்சியடைந்தன.

எனினும் கிழக்கு, வட மத்திய, மத்திய மற்றும் சப்பிரகமுவ மாகாணங்களின் வளர்ச்சி வீதங்க்ள் 2010உடன் ஒப்பிடும்போதும் 2011 இல் மெதுவடைந்தன.

வட மாகாணத்திலான உயர்ந்த வளர்ச்சிக்கு பிரதான காரணம் வேளாண்மைத் துறையிலான முன்னேற்றமடைந்த செயற்பாடாகும்.

வட மாகாணத்தின் நெல் உற்பத்தி 2010உடன் ஒப்பிடும்போது 2011இல் 90 சதவீதத்தால் 210 மில்லியன் கிலோ கிராம்களுக்கு அதிகரித்தது.

வட மாகாணத்தில் நன்னீர் மற்றும் கடல் மீன் உற்பத்தி இரண்டிலும் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பும் 2011இலான உயர்ந்த வளர்ச்சிக்கு பங்களித்தது.

2011இல் வட மாகாணத்தின் கடல் மற்றும் நன்னீர் மீன்பிடி உற்பத்தி என்பன 38 சதவீதம் மற்றும் 165 சதவீதத்தால் முறையே 46,370 மற்றும் 2,150 மெற்றிக் தொன் அதிகரித்தது.

வட மாகாணத்தில் அவதானிக்கப்பட்ட இவ் உயர் வளர்ச்சி வீதமானது 2011-ல் உருவாக்கப்பட்ட 34 புதிய வங்கிக் கிளைகளுடன் விரிவுபடுத்தப்பட்ட வங்கித் தொழில் பணிகளினால் மேலும் ஆதரவு அளிக்கப்பட்டது.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலை, மத்தல விமான நிலையம் மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகம் உள்ளடங்கலான உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டங்கள் அதே போல் சுற்றுலாத்துறையிலான சிறந்த செயலாற்றம் என்பவற்றின் காரணமாக அதிகரித்த பொருளாதார நடவடிக்கைகள் தென் மாகாண மொ.உ.உற்பத்தியின் 21.4 சதவீத உயர்ந்தளவு வளர்ச்சிக்கு பெருமளவு பங்களித்தன.

தயாரிப்புத் துறை மற்றும் நிதியியல் துறையிலான குறிப்பிடத்தக்க வளர்ச்சி 2011-ல் வடமேல் மாகாணம் அதன் மொ.உ.உற்பத்தியில் 21.9 சதவீத வளர்ச்சியை பதிவு செய்வதற்கு உதவியது.

அதேநேரம் கிழக்கு, வட மத்திய, மத்திய, சப்பிரகமுவ மாகாணங்கள் 2011இல் அவற்றின் வளர்ச்சியில் சிறிதளவு மெதுவடைவைப் பதிவு செய்தன.

2011இன் முதல் காலாண்டில் நிலவிய பாதகமான வானிலை நிலைமைகள் கிழக்கு மற்றும் வட மத்திய மாகாணம் இரண்டிலுமான வேளாண்மைத் துறை செயலாற்றத்தை மோசமாகப் பாதித்தன.

2011இல் கிழக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களின் நெல் உற்பத்தி முறையே 39 சதவீதம் மற்றும் 3 சதவீத்தால் 650 மற்றும் 1,144 மில்லியன் கிலோ கிராம்களுக்கு வீழ்ச்சியடைந்தது.

மேலும் 2011இல் கிழக்கு மற்றும் வட மத்திய மாகாணம் இரண்டிலுமான மரக்கறி உற்பத்தி முறையே 33 சதவீதத்தாலும் 7 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்த அதேவேளையில் கிழக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களிலான உயர்நிலப் பயிர் உற்பத்தி முறையே 12 சதவீதத்தாலும் 33. சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தது.

2011இன் பின்னரைப் பகுதியில் நீர் மின்வலு உற்பத்தியில் அவதானிக்கப்பட்ட பின்னடைவு மத்திய மாகாணத்தின் செயலாற்றத்தை பாதித்தது.

மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள முக்கிய வலு உருவாக்கல் நிலையங்களில் இருந்து உருவாக்கப்பட்ட நீர்மின்வலு 21 சதவீதத்தால் 3,350 கி.மா.வ.இற்கு வீழ்ச்சியடைந்து மாகாணத்தின் தயாரிப்புத் துறையிலான பெறுமதி கூட்டலைக் குறைத்தது.

**2011இல் மொ.உ.உற்பத்தியில் மாகாண ரீதியான மொ.உ. உற்பத்தியின் பங்குகள்**

ஏனைய மாகாணங்களின் உயர்ந்த வளர்ச்சி செயலாற்றங்களை பிரதிபலித்து மொ.உ.உற்பத்திக்கான மேல் மாகாணத்தின் பங்களிப்பு 2010-ம் ஆண்டின் 44.8 சதவீதத்தில் இருந்து 2011இல் 44.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

2010இன் 10.7 சதவீதத்துடன் ஒப்பிடும்போது 2011இன் 11.1 சதவீத அதிகரிப்பை பதிவு செய்த தென் மாகாணம் 2ஆவது உயர்ந்த பங்களிப்புக்கு வகைகூறியது.

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான மூன்றாவது உயர்ந்த பங்களிப்பு முன்னைய ஆண்டின் 9.5 சதவீதத்துடன் ஒப்பிடும்போது 2011இன் 10 சதவீதமாக காணப்பட்ட வட மேல் மாகாணத்தில் இருந்து கிடைத்தது.


மொ.உ.உற்பத்திக்கான வட மாகாணத்தின் பங்களிப்பு 2010 இன் 3.4 சதவீதத்தில் இருந்து 2011 இல் 3.7 சதவீதத்திற்கு அதிகரித்தது.

எனினும் மத்திய, கிழக்கு, வட மத்திய, சப்பிரகமுவ மாகாணங்களின் பங்களிப்புகள் 2011இன் முறையே 9.8 சதவீதம், 5.7 சதவீதம், 4.6 சதவீதம் மற்றும் 6.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன.

ஊவா மாகாணத்தின் பங்களிப்பு 2011இல் மாற்றமின்றி இருந்தது.


மாகாணங்களின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (நடைமுறைச் சந்தை விலைகளில்) முக்கிய பண்புகள் - 2010[1] மற்றும் 2011[2]

| விடயம் / மாகாணம் | ஆண்டு | மேல் | மத்திய | தென் | வடக்கு | கிழக்கு | வடமேல் | வட மத்திய | ஊவா | சப்பிரகமுவா | தீவு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மொ.உ.உ (ரூ.பில்.) | 2010 | 2,513 | 563 | 599 | 190 | 334 | 535 | 267 | 253 | 351 | 5,604 |
| | 2011 | 2,905 | 644 | 727 | 241 | 375 | 652 | 300 | 292 | 406 | 6,543 |
| மொ.உ.உ வளர்ச்சி (%) | 2010 | 13.4 | 18.9 | 17.7 | 21.8 | 19.5 | 14.8 | 20.6 | 15.5 | 19.1 | 15.9 |
| | 2011 | 15.6 | 14.5 | 21.4 | 27.1 | 12.4 | 21.9 | 12.4 | 15.5 | 15.7 | 16.7 |
| மொ.உ.உ பங்கு (%) | 2010 | 44.8 | 10.0 | 10.7 | 3.4 | 6.0 | 9.5 | 4.8 | 4.5 | 6.3 | 100 |
| | 2011 | 44.4 | 9.8 | 11.1 | 3.7 | 5.7 | 10.0 | 4.6 | 4.5 | 6.2 | 100 |
| தலைக்குரிய வருமானம்[3] (ரூ. '000) | 2010 | 428 | 209 | 240 | 159 | 214 | 228 | 215 | 191 | 181 | 271 |
| | 2011 | 491 | 237 | 289 | 200 | 237 | 276 | 239 | 218 | 207 | 314 |
| தலைக்குரிய வருமான விகிதம்[4] | 2010 | 1.6 | 0.8 | 0.9 | 0.6 | 0.8 | 0.8 | 0.8 | 0.7 | 0.7 | 1.0 |
| | 2011 | 1.6 | 0.8 | 0.9 | 0.6 | 0.8 | 0.9 | 0.8 | 0.7 | 0.7 | 1.0 |










## கடந்த வாரம் பங்குச் சந்தை

கடந்த வார பங்குச் சந்தை நடவடிக்கைளில் தொடர்ச்சியான சரிவு காணப்பட்டதை அவதானிக்க முடிந்தது.

தொடர்ச்சியாக வட்டி வீதங்கள் அதிகரிக்கும் பட்சத்தில், நிலையான வருமானத்தை ஈட்டித் தரக்கூடிய மூலங்களில் தமது முதலீடுகளை மேற்கொள்வதில் முதலீட்டாளர்கள் தமது கவனத்தை திசைதிருப்பக் கூடும் என பங்கு முகவர்கள் கருத்துத் தெரிவித்திருக்கின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை பங்குச் சந்தை நடவடிக்கைகள் நிறைவடையும்போது, அனைத்து பங்கு விலைச் சுட்டெண் 4,854.22 ஆகவும், மிலங்கா விலைச் சுட்டெண் 4,370.88 ஆகவும், எஸ்.&பி சிறிலங்கா 20 சுட்டி 2,734.21 ஆகவும் அமைந்திருந்தன.

ஓகஸ்ட் 6-ம் திகதியுடன் ஆரம்பமான கடந்த வாரத்தின் இறுதியில் மொத்த பங்குப் புரள்வு பெறுமதியாக ரூ.1,775,727,276 அமைந்திருந்தது.

கடந்த வாரம் மொத்தமாக 19,665 பங்குக் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.




| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 130.42 | 133.44 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 203.27 | 208.97 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 159.52 | 164.70 |
| சுவிஸ் பிராங் | 132.57 | 137.46 |
| கனேடிய டொலர் | 130.66 | 135.25 |
| அவுஸ்திரேலிய டொலர் | 136.71 | 141.82 |
| சிங்கப்பூர் டொலர் | 104.08 | 107.58 |
| ஜப்பான் யென் | 1.64 | 1.70 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.38 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.92 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணதண்டனையை மீள அமுல்படுத்த அரசு தீர்மானம்

(கொழும்பு)

நாட்டில் மரணதண்டனையை மீண்டும் அமுல்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கொடூரமான மனிதப் படுகொலைகள் உள்ளிட்ட பாரிய குற்றச் செயல்களில் ஈடுபடுவோருக்கு மரணதண்டனை விதிக்க, மரண தண்டனையை நிறைவேற்ற அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இலங்கையில் மரண தண்டனை விதிக்கப்படுகின்ற போதிலும் 1976 ஆம் ஆண்டின் பின்னர் மரணதண்டனை நிறைவேற்றப்படுவதில்லை.

மரண தண்டனை நிறைவேற்றம் இரத்து செய்யப்பட்டுள்ள காரணத்தினால் குற்றவாளிகள் அச்சமின்றி பாரியளவில் குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. மரணதண்டனை விதிக்கப்பட்ட 237 கைதிகள் தற்போது இலங்கைச் சிறைச்சாலைகளில் தண்டனை அனுபவித்து வருகின்றனர்.

மரண தண்டனையை நிறைவேற்றுவது தொடர்பான இறுதித் தீர்மானத்தை எடுக்கும் முழு அதிகாரமும் ஜனாதிபதிக்கே காணப்படுகின்றது. தண்டனை நிறைவேற்றும் முதல் கட்ட நடவடிக்கையாக தூக்குமேடை பழுது பார்க்கப்பட்டுள்ளது. (ந-2)

# ரணிலே என்னை ஆளும் கட்சியில் இணைய தூண்டுகிறார்- தயாசிறி



ஆளும் அரசாங்க கட்சியில் தாம் இணையப் போவதாக வெளியான செய்தியை ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர மறுத்துள்ளார். தம்மை கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவும் அவரின் ஊடக மாபியா ஆட்களுமே ஆளும் கட்சியில் இணையத் தூண்டுவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

ரணில் விக்ரமசிங்கவின் ஊடகப் பிரிவு பல தனியார் ஊடகங்களையும் இணையத்தளங்களையும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது.

இந்த நிலையில் அந்த ஊடகங்களே கடந்த 10 ஆம் திகதி தாம் சுபநேரத்தில் தாம் அரசாங்கத்துடன் இணையப் போவதாக வதந்திகளை பரப்பியதாக தயாசிறி ஜயசேகர குற்றம் சுமத்தியுள்ளார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரது மகன் நாமல் ராஜபக்ஷவும் தம்முடன் எப்போதும் பேசக்கூடியவர்கள். ஏனெனில் அவர்கள் தமது நண்பர்கள் மட்டுமல்லாது சிறந்த அரசியல்வாதிகளும் ஆவர் என்று ஜயசேகர குறிப்பிட்டுள்ளார்.எனினும் எதிர்வரும் 18 ஆம் திகதி ஆளும் கட்சியின் பிரசாரம் உத்தியோகபூர்வமாக அநுராதபுரத்தில் ஆரம்பித்து வைக்கப்படும் போது ஜனாதிபதியுடன் தயாசிறி ஜயசேகர அந்த மேடையில் தோன்றுவார் என்று ரணில் விக்கிரமசிங்கவுக்கு நெருக்கமான தரப்புக்கள் குறிப்பிட்டுள்ளன. (ந-2)

# மல்லிகைத்தீவு மக்கள் மீள்குடியேற்றப்படவுள்ளனர்

யுத்தத்தால் இடம்பெயர்ந்து வவுனியா செட்டிக்குளம் நலன்புரி நிலையத்தில் வசித்து வரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் உள்ள மல்லிகைத்தீவு கிராமசேவையாளர் பிரிவைச் சேர்ந்த 174 குடும்பங்கள் (569 உறுப்பினர்கள்) இன்று திங்கட்கிழமை மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளனர்.

இதில் கதிர்காமர் நலன்புரி நிலையத்தில் இருந்து 96 குடும்பங்களைச் சேர்ந்த 297 உறுப்பினர்களும் ஆனந்தகுமாரசுவாமி நலன்புரி நிலையத்தில் இருந்து 78 குடும்பங்களைச் சேர்ந்த 272 உறுப்பினர்களும் மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளனர்.

இவர்கள் 12 பேருந்துகளிலும் இவர்களுடைய உடைமைகள் 20 பாரவூர்திகளிலும் எடுத்து வரப்பட்டு கைவேலி கணேசா வித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டு அன்றைய தினமே குடும்பப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட பின்னரே தமது சொந்த இடத்தில் மீள் குடியமர்த்தப்படவுள்ளனர்.

ஒரு குடும்பத்திற்கு 2 லீற்றர் மண்ணெண்ணெயும் மூன்று நாட்களுக்கு சமைத்த உணவும் உலர் உணவுப் பொதியும் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தால் வழங்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-3-267)

## இந்தியர்வை புறக்கணித்து

# கொழும்பு காணி சீனாவுக்கு விற்பனை

(கொழும்பு)

கொழும்பின் பிரதான காணி சொத்து ஒன்றை சீனாவுக்கு ஒதுக்கியுள்ளமை குறித்து இந்தியா இலங்கையிடம் தமது கடும் ஆட்சேபனையை வெளியிட்டுள்ளது.

புதுடில்லியில் உள்ள இந்திய வெளியுறவு அமைச்சு இலங்கை வெளியுறவு அமைச்சிடம் இந்த ஆட்சேபனையை வெளியிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பின் காலி வீதிக்கும் டுப்ளிகேசன் வீதிக்கும் முகப்பாக உள்ள விட்டால் ப்லூஸ்டெட் மற்றும் ஒரு நிறுவனம் சீனாவின் விமான உற்பத்தி நிறுவனமான CATIC இற்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் சொத்து விற்பனை தொகை குறித்து தகவல்கள் வெளியாகவில்லை. எனினும் குறித்த சொத்தை கொள்வனவு செய்வதற்காக இலங்கையில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகரகம் ஏற்கனவே உத்தியோகபூர்வமான ஆவண கைமாற்றல்களை மேற்கொண்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாம் உத்தியோகபூர்வமாக இந்த சொத்தை கொள்வனவு செய்ய அனுமதி கோரிய போதும் கடந்த ஒன்றரை மாதகாலமாக எவ்வித பதில்களும் இலங்கையால் வழங்கப்படவில்லை. இந்த நிலையில் இலங்கை உதாசீனம் செய்துள்ளதாக இந்தியா குற்றம் சுமத்தியுள்ளது.

இலங்கை அதிகாரிகளின் தகவல்படி குறித்த 250 பேர்ச் சொத்து பேர்ச் ஒன்று 7 மில்லியன் ரூபாய்கள் என்ற அடிப்படையில் சீன நிறுவனத்துக்கு 2009 மில்லியன் ரூபாய்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே காலிமுகத்திடலுக்கு முன்பாக உள்ள இடம் ஒன்றை சீனாவின் விமான உற்பத்தி நிறுவனத்துக்கு வழங்குவதாக இருந்து பின்னர் அதில் மாற்றம் ஏற்பட்டது.

எனவே அதற்கு கைமாறு செய்யும் வகையிலேயே தற்போதைய சொத்து சீனாவுக்கு வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை இந்த சொத்தை ஏற்கனவே இலங்கையில் உள்ள அமெரிக்க தூதரகமும் கொள்வனவு செய்ய முயற்சித்து பின்னர் பாதுகாப்பு காரணங்களுக்காக அந்த முடிவை மாற்றிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ந-2)

YARL Taxi
யாழ் குடாநாட்டின் எப்பகுதியில் இருந்தும் அழைக்க வேண்டிய ஒரே தொலைபேசி இலக்கம்
021 222 1919
MOB:-0759751919
முதல் Km-60/-
அடுத்த ஒவ்வொரு Km-40/-
முச்சக்கர வண்டி/கார்/வான்
7 a.m-11p.m வரை 7 நாட்களும் சேவை
மலிவானதும் நம்பகமானதுமான சேவை
நட்புடன் உதவும் சாரதிகள்.
எங்கள் ஓட்டோ எல்லாவற்றுக்கும் கட்டண மீற்றர் பொருத்தப்பட்டுள்ளது.
36,கச்சேரி - நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:-021 222 1919 , 075 975 1919
E.mail:-yarltaxi@gmail.com
(கு-727)

# விழிப்புணர்வு கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, யாழ்.மாவட்ட அலுவலகத்துடன் இணைந்து நடத்தும் சிறுவர் உரிமைகள், சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான விழிப்புணர்வுக் கண்காட்சி இம்மாதம் 15,16,17ஆம் திகதிகளில் காலை 8 மணி தொடக்கம் இரவு 10 மணிவரை நல்லூர் அரசடி வீதி, இல.308, ஜனசக்தி சிறுவர் பூங்கா வளாகத்தில் நடைபெறவுள்ளது. (ந-2)

# குடிநீரை பெறுவதில் பெரும் சிரமம் குழாய்க்கிணறு அமைத்து தாருங்கள்

## வரட்சியால் பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை

(றெட்பானா)

கடும் வரட்சி காரணமாக குடிநீரைப் பெற்றுக் கொள்வதில் வவுனியா மக்கள் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

வவுனியா தம்பனை புளியங்குளம் பகுதியிலேயே இந்நிலை காணப்படுகின்றது.

தற்போது நிலவி வரும் கடும் வரட்சி காரணமாக இப்பகுதிகளில் காணப்படுகின்ற கிணறுகள் அனைத்தும் நீர் வற்றி காணப்படுகிறது.

இதனால் இப்பகுதி மக்கள் குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் பாரிய சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். அத்துடன் இப் பகுதிகளில் பிரதேச சபையால் அமைக்கப்பட்டுள்ள கிணறுகள் ஓரிரு கிணறுகளாக காணப்பட்ட போதிலும் அக்கிணறுகள் பாவனைக்கு அந்த பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளது.

எனவே, இப்பகுதியில் பல குறைகள் காணப்பட்ட போதும் தற்போது ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இப் பகுதிகளில் புதிதாக குழாய்க் கிணறுகள் அமைத்து கொடுப்பதுடன் பாவனை அற்று காணப்படுகின்ற கிணறுகளை ஆழப்படுத்தி பாவனைக்கு உகந்த கிணறுகளாக மாற்ற வேண்டும் என்பதே இப் பகுதி மக்களின் வேண்டு கோளாகவுள்ளது. (ந-3-260)

## கல்யாண மாலை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:- 1978 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-அனுசம் 4<br>உயரம்:-5'7"<br>கி.பா:-13<br>தொழில்:-Computer Programmer (கனடா P.R) B/242 | பிறப்பு:- 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- அனுசம் 4<br>உயரம்: 5'4"<br>கி.பா:-52.50, 7 இல் செவ்<br>தொழில்:- வங்கி உதவியாளர் G/293 |
| பிறப்பு:- 1979 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-அவிட்டம் 1<br>உயரம்:-5'9"<br>கி.பா:-44, 1 இல் செவ்<br>தொழில்:-முகாமையாளர் தனியார் நிறுவனம் B/277 | பிறப்பு:- 1975 இந்து<br>நட்சத்திரம்:- விசாகம் 3<br>உயரம்: 5'2"<br>கி.பா:-47.75, 1 இல் செவ்<br>தொழில்:- பட்டதாரி ஆசிரியை<br>எ.பார்ப்பு :- குலம் மாறிச் செய்யவும் விருப்பம் G/295 |
| பிறப்பு:- 1980 இந்து<br>நட்சத்திரம்:- விசாகம் 2<br>உயரம்:-5'9"<br>கி.பா:-23, 8 இல் செவ்<br>தொழில்:-Msc Civil B/280 | பிறப்பு:- 1977 இந்து<br>நட்சத்திரம்:- புனர்பூசம் 1<br>உயரம்: 5'2'<br>கி.பா:- 55, 4 இல் செவ் G/291 |
| பிறப்பு:- 1981 இந்து<br>நட்சத்திரம்:-அனுசம் 1<br>உயரம்:-5'5"<br>கி.பா:-15 1/2<br>தொழில்:-சிவில் இன்ஜினியர் U.K B/118 | பிறப்பு:- 1976 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- மகம் 4<br>உயரம்: 5'2"<br>கி.பா:-32, 8 இல் செவ்<br>தொழில்:-ஆங்கில ஆசிரியை G/290 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com
ஊடக அனுசரணை வலம்புரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உரிமை கோரப்படாத

# கட்டாக்காலி மாடுகள் ஏலத்தில் விற்கப்படவுள்ளன

(சாவகச்சேரி)

மீசாலைப்பகுதியில் கட்டாக்காலிகளான இரு மாடுகளும் ஒரு கன்றும் பொதுமக்களால் பிடிக்கப்பட்டு சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவற்றிற்கு எவரும் உரிமை கோராத பட்சத்தில் எதிர்வரும் 22ஆம் திகதி புதன் கிழமை காலை 10 மணிக்கு சாவகச்சேரி நகரசபை வளாகத்தில் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

ஏலத்தில் பெறுபவர்கள் உடன் பணத்தைச் செலுத்தி எடுத்துச்செல்லவேண்டும் என சபைச் செயலாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-3-29)

### யாழ். மத்திய கல்லூரி

# நீச்சல் தடாக பராமரிப்பு குறித்து அமைச்சர் டக்ளஸ் நேரில் கண்டறிவு

(யாழ்ப்பாணம்)

மகிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ் நாளைய இளைஞர் அமைப்பினால் யாழ். மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்ட நீச்சல் தடாக நிலைமைகள் மற்றும் பராமரிப்பு தொடர்பான விடயங்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேரில் சென்று ஆராய்ந்துள்ளார்.

யாழ். மத்திய கல்லூரிக்கு நேற்று முன்தினம் சென்ற அமைச்சர், கல்லூரியின் விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர், கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் உள்ளிட்டோருடன் விரிவாகக் கலந்துரையாடி உரிய ஆலோசனைகளை வழங்கியதுடன் பராமரிப்புப் பணிகள் தொடர்பாக கேட்டறிந்து உரிய பணிப்புரைகளையும் வழங்கினார். குறிப்பாக நீச்சல் பயிற்சி மற்றும் போட்டிகளில் ஈடுபடுவோரின் உடைமைகளை பாதுகாப்பதற்கென உரிய பெட்டகங்கள் மற்றும் உடை மாற்றுவதற்குரிய உரிய வசதிகளை ஏற்படுத்துதல், நீச்சல் தடாகத்திற்குரிய குறியீடுகளை பார்வைப் படுத்துதல் போன்ற விடயங்கள் குறித்துத் தெரியப் படுத்தினார். (ந-2)

### தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த

# முன்பள்ளிகள்,பாடசாலைகளுக்கு வேலைத்திட்ட நிதியொதுக்கீடு

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த 6 முன்பள்ளிகளுக்கும் 7 பாடசாலைகளுக்குமான வேலைத்திட்டங்களுக்கான நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியொதுக்கீட்டில் இருந்தே மேற்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு மின்பிறப்பாக்கி கொள்வனவு செய்வதற்காக 2 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாவும் கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலைக்கு தளபாடக் கொள்வனவிற்கு 49 ஆயிரம் ரூபாவும் கச்சாய் அ.த.க.பாடசாலைக்கு தளபாடக் கொள்வனவுக்காக 24 ஆயிரத்து 500 ரூபாவும் கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயத்திற்கு பல்லூடக கருவிக் கொள்வனவிற்கு 98 ஆயிரம் ரூபாவும் சரசாலை சரஸ்வதி வித்தியாயலத்திற்கு பாண்ட் வாத்திய கருவிகள் கொள்வனவிற்கு ஒரு இலட்சத்து 98 ஆயிரம் ரூபாவும் சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கு ஆய்வுகூடம் அமைப்பதற்கு ஒரு இலட்சத்து 96 ஆயிரம் ரூபாவும் மட்டுவில் வடக்கு அ.த.க.பாடசாலைக்கு பாண்ட் வாத்தியக் கருவிகள் கொள்வனவிற்கு 98ஆயிரம் ரூபாவும் விடத்தற்பளை கிராம அபிவிருத்திச் சங்க முன்பள்ளிக்கு கிணறு அமைக்க 98 ஆயிரம் ரூபாவும் கரம்பைக்குறிச்சி மேற்கு முன்பள்ளி அபிவிருத்தி வேலைக்கு 98 ஆயிரம் ரூபாவும் நுணாவில் மேற்கு கலைமகள் முன்பள்ளி புனரமைப்புக்காக 24 ஆயிரத்து 500 ரூபாவும் சரசாலை வடக்கு முன்பள்ளி புனரமைப்புக்கு 49 ஆயிரம் ரூபாவும் கரம்பைக்குறிச்சி முன்பள்ளி கட்டட நிர்மாணித்தலுக்கு 98 ஆயிரம் ரூபாவும் கைதடி தென்கிழக்கு விநாயகர் முன்பள்ளி சிறுவர் பூங்கா அமைத்தலுக்கு 73 ஆயிரத்து 500 ரூபாவும் ஆக நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படிவேலைத்திட்டங்களுக்குநிதியொதுக்கீடு செய்யப்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள், முன்பள்ளிகளின் அபிவிருத்திச்சபையினர் ஆகியோரை தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-3-29)

# விடுமுறை நாட்களில் பாடசாலை ஆசிரியர்கள் பெரிதும் சிரமம்

### இலங்கை ஆசிரியர் சங்கம் கண்டிப்பு

(யாழ்ப்பாணம்)

விடுமுறை நாட்களில் பாடசாலைகளில் பரீட்சை நடத்துவதால் பெற்றோர்கள், ஆசிரியர்கள் பெரும் சிரமத்தினை எதிர்நோக்குவதாக குற்றஞ்சாட்டப்படுகிறது.

தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் முன்னோடிப் பரீட்சை ஒரு சில வலயங்களில் மட்டும் குறிப்பாக இது யாழ். வலயத்தில் ஞாயிற்றுக்கிழமையான நேற்று நடைபெற்றது.

விடுமுறை குறித்த தினமன்று பரீட்சை நடைபெற்றதனால் ஆசிரியர்கள் பெரிதும் சிரமத்தினை எதிர்நோக்கியிருந்தனர்.

இது தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவிக்கையில்,

பாடசாலை ஆசிரியர்கள் கிழமை நாள் முழுவதும் வேலை செய்துவிட்டு இறுதி இரு நாட்களிலும் வேலை செய்வது ஏற்றுக்கொள்ள முடியாததாகும்.

விடுமுறை நாட்களில் கருத்தரங்குகளோ பரீட்சைகளினை வைப்பதனையோ இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது என்றார்.

மாகாணமட்ட போட்டிப் பரீட்சைகள் முன்னைய காலங்களில் சனி, ஞாயிறு தினங்களில் நடத்தப்பட்டபோதும் அது இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலையீட்டால் நிறுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

எனினும் குறித்த புலமைப்பரிசில் முன்னோடிப் பரீட்சையானது நேற்றைய தினமே இறுதித் தினம் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (ந-4)

# பணிப்பாளர் வரவில்லை; பிக்கப் மட்டும் வந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் கொழும்பில் இருக்க அவரது பிக்கப் வாகனம் மட்டும் தனியே யாழிற்கு வந்துள்ளது.

யாழ்.போதனா வைத்திய சாலையில் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்ற மோசடிகள் தொடர்பிலான விசாரணைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் பவானி பசுபதிராஜா சுகாதார அமைச்சினால் தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டார்.

தனது சேவையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டும் அவர் முன்னைய யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமாரினால் வழங்கப்பட்ட பிக்கப் வாகனத்தினை கொழும்பிற்கு கொண்டு சென்று பயன்படுத்தி வந்துள்ளார்.

இதற்கு மருத்துவ சங்கத்தினர் கடும் எதிர்ப்பினைத் தெரிவித்திருந்தனர். குறித்த பணிக்காக வழங்கப்பட்டிருந்த வாகனத்தினை அவர் தற்போது அப்பணியில் இல்லாதபோது எவ்வாறு பயன்படுத்தமுடியும் என்வும் கேள்வியெழுப்பப்பட்டது.

இதனையடுத்து குறித்த பிக்கப் வாகனம் சுகாதார அமைச்சின் நடவடிக்கையினால் பிக்கப் சாரதியோடு யாழ்.போதனா வைத்திய சாலைக்கு திருப்பியனுப்பப்பட்டுள்ளது.

பிக்கப் வாகனம் யாழ். போதனா வைத்தியசாலைக்குத் திரும்பி வந்துள்ளதாக வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் பவானந்தராஜா உறுதிப்படுத்தியுள்ளார். (ந-4)





# அனுமதிப்பத்திரம் இல்லை கல்லுடைக்கும் ஆலைக்கு சீல்


### பொலீஸாரும் சுகாதார பகுதியினரும் நடவடிக்கை

(சாவகச்சேரி)

சுகாதார விதிமுறைகளுக்கு முரணாகவும் தொழில் நிலையம் நடத்துவதற்குரிய அனுமதிப்பத்திரங்கள் இல்லாத நிலையிலும் இயங்கிய கல்லுடைக்கும் ஆலை சுகாதாரப் பகுதியினர் மற்றும் பொலிஸார் இணைந்த குழுவால் சீல்வைத்து மூடப்பட்டது.

கடந்த 6ஆம் திகதி சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் சுகாதாரப் பகுதியினரும் பொலிஸாரும் இணைந்து நடத்திய கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட முடிவுக்கு ஏற்பவே கைதடியில் உள்ள மேற்படி ஆலை சீல்வைத்து மூடப்பட்டது. (ந-3-29)





சமரபாகு சீனா உதயகுமார் எழுதிய பகிர்வு நூல்வெளியீட்டு விழா அண்மையில் யாழ்ப்பாணம் கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் மூளாய் சைவப்பிரகாச வித்தியாலய அதிபர் திருமதி சிவமலர் சுந்தரபாரதி நூலினை வெளியிட்டு வைக்க முதற் பிரதியை பொறியியலாளர் த.தர்மசீலன் பெற்றுக் கொள்வதையும் நடுவில் நூலாசிரியர் நிற்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாண சபை ஆட்சியை அதிகளவில் கூட்டமைப்பு கைப்பற்றினால் அது திருப்புமுனை

## தமிழரின் மிகப்பெரிய பலமாக அமையும்- சம்பந்தன்

கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வெற்றிபெற்று ஆட்சியைப் பிடித்தால் அல்லது கூடுதலான ஆசனங்களைக் கைப்பற்றினால் அது ஒரு திருப்புமுனையாக அமையும் என்றும் மற்றும் எவரும் எம்மை உதாசீனம் செய்ய முடியாதநிலை ஏற்படும் என்றும் வெளிநாடு ஒன்றின் தூதுவருடனான சந்திப்பின் போது தெரிவித்தார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை புறநகர் பகுதியான பாலையூற்று முருகன் கோவில் வீதியில் நடத்தப்பட்ட தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் பேசுகையில் இத்தகவலை அவர் வெளியிட்டார்.

அந்த வெளிநாட்டு தூதுவருடனான சந்திப்பு தாம் கொழும்பிலிருந்து நேற்று முன்தினம் திருகோணமலக்கு திரும்புவதற்கு முன்பாக கொழும்பில் நடைபெற்றது என்றும் சம்பந்தன் தெரிவித்தார்.

இவ்வாறு சம்பந்தன் மேலும் கூறியதாவது,தென்னாபிரிக்க அரசின் தூதுக்குழு ஒன்றை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தூதுக்குழு சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியது. சர்வதேச சமூகம் எம் பின்னால் உறுதியாக நிற்கின்றது ஏன்றும் யுத்தத்தின் பின்னரான காலத்தில் நாம் நியாயமாக நடந்து கொண்டுள்ளோம் என்றும் எம் பக்கத்தில் நியாயம் இருப்பதாக சர்வதேச சமூகம் தெரிந்து கொண்டுள்ளது என்றும் அந்த நம்பிக்கையைப் பாதுகாத்து எமது பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டியது எமது கடமை என்றும் தென்னாபிரிக்க் தூதுக்குழு சந்திப்பின்போது தெரிவித்தது.


சர்வதேசம் எம்மீது வைத்திருக்கும் நம்பிக்கை எப்போதும் இருக்கும் என்று நம்பி விடக்கூடாது என்றும் எமக்குத் தெரிவிக்கப்பட்டது.

கிழக்கு மாகாண சபைத்தேர்தலில் தங்கள் நிலைப்பாடான சுயாட்சி அதிகாரங்களை பெற வேண்டும் என்பதில் தமிழ்மக்கள் உறுதியாக இருக்கின்றார்களா? என்பதை கிழக்கு மாகாண சபைத்தேர்தல் முடிவின் மூலம் அறிந்து கொள்வதில் சர்வதேசம் மிகவும் உன்னிப்பாக கவனிப்பதாகவும் ஆர்வத்துடன் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஜெனீவா ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கூட்டத்தில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பாக சர்வதேச சமூகத்தில் எழுப்பப்பட்டுள்ள அழுத்தம் தொடர்பான வினாக்களுக்கு விடையளிக்கக்கூடியதாக கிழக்கு தேர்தலில் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் அரசாங்கத்தின் பின்னால் நிற்கின்றார்கள் என்பதை உலகுக்கு வெளிப்படுத்தவே கிழக்கு மாகாண் சபைத் தேர்தல் நடத்தப்படுவதாக அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர் மைத்திரிபால சிறிசேன கொழும்பில் பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் இத்தேர்தல் தொடர்பாக ஏற்கனவே வெளிவந்த ஊகம் உண்மை என்பதை அவர் வெளிப்படுத்தியுள்ளார். எனவே, கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் அரசாங்கத்தை நிராகரிக்கின்றார்கள் என்பதை சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக் காட்டவேண்டும். ஆளும் கட்சியை சேர்ந்த தமிழ் வேட்பாளர் ஒருவர் கூட வெற்றியீட்டாத நிலையை ஏற்படுத்த வேண்டும்.

மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் உள்ள ஆசனங்களில் 4 இல் 3 பங்கை அதாவது 21 ஆசனங்களில் 13 ஆசனங்களையும் அம்பாறை மாவட்டத்தில் குறைந்தது 2 ஆசனங்களையும் பெற்று மாகாணத்திலேயே ஆகக்கூடுதலான வாக்குகளை பெற்ற பெரும்பான்மை கட்சி



என்ற அந்தஸ்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற வேண்டும்.

அப்போது கிடைக்கும் இரண்டு போனஸ் ஆசனங்களையும் சேர்த்தால் மாகாணத்திலேயே ஆகக்கூடுதலான ஆசனங்களை பெற்ற கட்சியாக கூட்டமைப்பு வரும். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கு கணிசமான ஆசனங்களும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஓரளவு ஆசனங்களும் கிடைக்கும் பட்சத்தில் கிழக்கு மாகாணத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைக்க கூடிய நிலை உருவாகலாம் . அவ்வாறு கிடைக்கக்கூடிய வாய்ப்பை நாம் இழந்து விடக்கூடாது என்றும் சம்பந்தன் தெரிவித்தார். (ந-8)

## மாணவர்களுக்கு மடிக்கணனி

அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் மடிக்கணனி வழங்கும் திட்டம் ஒன்றை செயற்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள் ளது.

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் யோசனைக்கு அமைய இந்த திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்பிரகாரம் எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு தொடக்கம் தரம் ஆறு முதல் உயர்தரம் வரையிலான மாணவர்களுக்கு மடிக் கணனிகளை பயன்படுத்தி கல்வி செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்பு கிடைக்கவுள்ளது.

இது தொடர்பான முதற்சுற்று பேச்சுவார்த்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக் தலைமையில் அலரி மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

இதன்போது கருத்து வெளியிட்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இத்தகையதொரு திட்டத்தை செயற்படுத்தும் ஆசிய நாடு என்ற வகையில் கல்வித்துறை அடையும் மிகப்பெரிய வெற்றி என தெரிவித்துள்ளார். (2)

## அதிவேக நெடுஞ்சாலையில் 323 விபத்து சம்பவங்கள்

தெற்கு அதிவேக நெடுஞ்சாலைகடந்த 2011ஆம் ஆண்டு நவம்பர் 30 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.அன்று தொடக்கம் இன்றுவரை 323 விபத்துக்கள் பதிவாகியுள்ள தெனபொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அதிவேக வீதி போக்குவரத்து விதிமுறைகளை மீறிய சாரதிகள் மீது 2 ஆயிரத்து 721 வழக்குகள் குறித்த காலத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் 3 வீதி விபத்துக்கள் பதிவாகியுள்ளன. அத்துடன் அதிவேக நெடுஞ்சாலையில் நடந்து சென்றமை குறித்து ஒருவர் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (2)

## தேர்தல் பாதுகாப்பு பணிக்கென பொலிஸ் திணைக்களத்துக்கு 100 மில்லியன்

### தேர்தல் செயலகம் வழங்கியது

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கென பொலிஸ் திணைக்களத்திற்கு 100 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளதென தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

தேர்தல் ஆணையாளர் நாயகம் மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கு இடையில் சமீபத்தில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையை அடுத்து குறித்த நிதியை வழங்க நடவடிக்கை எடுத்ததாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எம் ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும் போஸ்டர் உள்ளிட்ட தேர்தல் பதாகைகளை அகற்றவென 7.3 மில்லியன் ரூபா பொலிஸ் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை வாக்காளர் அட்டை விநியோகம் எதிர்வரும் 17 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை இடம்பெறும் எனவும் விடுமுறை தினமான 26 ஆம் திகதியும் வாக்காளர் அட்டை விநியோகிக்கப்படும் எனவும் தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது(ந-2)




## தேர்தல் பிரசாரத்திற்காக அரசாங்க சொத்துக்கள் பயன்படுத்தப்படுகின்றன

### பவ்ரல் அமைப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல் பிரசாரத்திற்காக அரச சொத்துக்கள் பயன்படுத்தப்படுவதாக பவ்ரல் அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

அரச சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட மாட்டாது என அளிக்கப்பட்ட உறுதி மொழியை மீறி அரச சொத்துக்கள் பயன்படுத்தப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அரசாங்கத்திற்கு சொந்தமான 30 வாகனங்கள் முற்று முழுதாக தேர்தல் பிரசாரப் பணிக்காக பயன்படுத்தப்பட்டு வருவதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியராச்சி தெரிவித்துள்ளார்.

வாகனங்கள் சோடிக்கப்பட்டுள்ளதாகவும் இது மோட்டார் போக்குவரத்து சட்டங்களை மீறுதலாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரச சொத்துக்கள் பயன்படுத்தப்படுகின்றமை தொடர்பில் தேர்தல் ஆணையாளருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக வட மத்திய மாகாணத்தில் சட்டவிரோத தேர்தல் பிரசார நடவடிக்கைககள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். (ந-2)

## உன்னிச்சை ஜும்மா பள்ளிவாசல் இனந்தெரியாத குழுவினரால் தீக்கிரை

மட்டக்களப்பு மாவட்டத்தின் மீள்குடியேற்ற பிரதேசமான உன்னிச்சை பலாக்கொடிச் சேனை கிராமத்திலுள்ள முஹைதீன் ஜும்மா பள்ளிவாசல் நேற்று அதிகாலை 2.45 மணிக்கு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது என வவுணதீவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உழவு இயந்திரமொன்றில் வந்த இனந்தெரியாத குழுவினராலேயே குறித்த பள்ளிவாசல் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன் குறித்த மீள்குடியேற்ற கிராமத்திலுள்ள நான்கு தற்காலிக குடிசைகள் மற்றும் ஒரு கடை ஆகியனவும் இதன்போது குறித்த இனந்தெரியாத குழுவினரால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன எனவும் வவுணதீவு பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை குறித்த கிராமத்தில் வசித்து வந்த 52 வயதான சபனோன என்ற பெண்மணி நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் கோடரியினால் வெட்டப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

தற்போது குறித்த பெண்மணி மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் மற்றும் இராணுவத்தினர் விசாரணைகளுக்காக குறித்த பிரதேசத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ளனர்.(ந-2)

## இப்தார் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

புனித ரம்ழான் இப்தார் (நோன்பு திறக்கும்) நிகழ்ச்சி சமய சமூக புரிந்துணர்வுக்கான ஒன்றுகூடல் இன்று திங்கட்கிழமை மாலை 5 மணி தொடக்கம் 6.30 மணிவரை யாழ்ப்பாணம், மானிப்பாய் வீதி, மொஹதீன் ஜும்மா பள்ளிவாசலில் நடைபெறவுள்ளதாக யாழ். மாநகரசபையின் கலாசாரப்பிரிவு அறிவித்துள்ளது. (ந-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படுகொலை செய்யப்படுபவர்கள் தமிழர்கள் அதனால்தான் நீதியான விசாரணை இல்லை

## சுரேஸ் எம்.பி. நிதர்சனப் பேச்சு



(கொழும்பு)

இறந்தவரின் உடலுக்கு சுதந்திரமாக இறுதியஞ்சலி செலுத்த அனுமதிக்காது, சுய் நினைவிழந்து கிடப்பவருக்கு காலில் விலங்கு பூட்டியிருக்கின்ற இந்த மோசமான அரசாங்கத்தின் கீழேதான் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எனினும் இதனை தொடர்ந்தும் நாம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

ஆனால், இந்தப் படுகொலைகள் எவற்றுக்கும் நீதியான விசாரணைகள் இடம்பெறவில்லை. இதற்குக் காரணம் படுகொலை செய்யப்படுகிறவர்கள் அனைவரும் தமிழர்கள் என்பதேயென தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் அக்கட்சியின் ஊடகப் பேச்சாளருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் உயிரிழந்த அரசியல் கைதியான டெல்றொக்சனின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு அஞ்சலியுரை ஆற்றும் போதே தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு உரையாற்றுகையில், இது அரசாங்கத்தினால் செய்யப்பட்ட ஒரு கொலை. வவுனியா சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகள் எல்லோரும் அடித்து துன்புறுத்தப்பட்டு இதன் பின்னர் அநுராதபுரம் சிறைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு வைத்தும் மிக மோசமான துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டு இருக்கின்றார்கள்.

கறுப்பு கொடிகள் கட்டக்கூடாது, வாத்தியங்கள் இசைக்க கூடாது என பல அழுத்தங்கள் போடப்படுகின்றன. எனவே, இந்த நாடு எப்போதும் ஜனநாயக சூழலில் இருப்பதாகத் தெரியவில்லை. ஒன்றில் இராணுவ நெருக்குவாரங்கள் இருக்கின்றன. அல்லது பொலிஸ் நெருக்குவாரங்கள் இருக்கின்றன. சாதாரணமாக வீட்டில் நடக்கின்ற நிகழ்வுகளுக்கும் கூட அனுமதி பெற வேண்டிய நிலையில் இன்று தமிழர்கள் இருந்து கொண்டிருக்கின்றோம்.

டெல்றொக்சனுடனிருந்த சக கைதிகளும் கடுமையாக தாக்கப்பட்டிருக்கின்றனர். பல கைதிகள் கைமுறிந்தும் கால் முறிந்தும் இன்னமும் சிறைச்சாலை வைத்தியசாலையில் இருக்கின்றார்கள்.

இவ்வாறான சம்பவங்கள் இனி இடம்பெறக் கூடாது. ஒருவேளை சரியான மருத்துவ வசதி கிடைத்திருந்தால் டெல்றொக்சன் உயிர் பிழைத்திருப்பார்.

கோமாநிலையில் இருந்த அவரை சாகும் வரை வைத்து வேடிக்கை பார்த்தது போல் இருந்தது. இதே போல் கைமுறிந்து கால் முறிந்தவர்களு க்கும் சரியாக வைத்திய வசதி கிடையாது, அவர் களுடைய அவயவங்கள் கழற்றப்படலாம்.

சர்வதேச மன்னிப்புச் சபை தொடக்கம் இந்த விடயத்தை கொண்டு செல்ல முயற்சிக்கப்படுகின்றது. இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தப்பட வேண்டும் என அரசை கேட்டுள்ளோம். இவ்வாறான சம்பவங்கள் சிறைச்சாலையில் குட்டிமணி, தங்கத்துரை தொடக்கம் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. கொல்லப்படுபவர்கள் தமிழர்கள் என்பதால் எந்த விசாரணையும் கிடையாது. இதற்கொரு நியாயம் தேடுவோம் என்றார். (ந-2)

## கோவில் மணி திருடப்பட்டது

(சிவநகர்)

கிளிநொச்சி அம்பாள்குள கிராமத்தில் உள்ள மனோன்மணி அம்மன் கோவில் கண்டாமணி திருடப்பட்டுள்ளது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் தெரிய வருவது, இக் கண்டா மணியை இக்கிராமத்தைச் சேர்ந்த ஒருவர் அன்பளிப்பாக வழங்கியுள்ளார். கடந்த 10 ஆம் திகதி இரவு 10 மணிக்கு இம் மணி அடித்து பூஜைகள் நடைபெற்றன. அதன்பின்னரே இம் மணி திருடப்பட்டுள்ளது.

இக்கோவிலுக்கு அருகாமையில் உள்ள குளத்தில் மக்கள் வந்து போவது வழக்கம். இத்திருட்டுச் சம்பவம் இடம்பெற்றமையால் அப்பகுதி மக்கள் மற்றும் ஆலய தலைவர் ஆகியோர் மிகவும் கவலையடைந்துள்ளனர். (ந-3-254)

## பதுளையில் ஆர்ப்பாட்டம்; பொலிஸார் களத்தில்

(கொழும்பு)

பதுளை வைத்தியசாலையின் பிரதான வீதியை இடைமறித்து வைத்தியசாலைக்கு முன்பாக நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பதுளை வைத்தியசாலையைச் சேர்ந்த சிற்றூழியர்களை கலைப்பதற்காக பொலிஸார் கண்ணீர் புகைப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்ற விபத்து தொடர்பாக வாகன சாரதியை பொலிஸார் கைது செய்ய வேண்டும் எனக் கோரி இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த விபத்தில் ஒருவர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

பொலிஸாரை ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்க ஆரம்பித்தபோது நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்காக பொலிஸார் கண்ணீர் புகைப் பிரயோகத்தை மேற்கொண்டதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

பதுளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இதன்போது காயமடைந்ததாகவும் அவர் கூறினார். (ந-8)

## நல்லூர் ஆலயச் சூழலில் சிறுவர் உரிமை சிதைக்கப்படுகிறது

### பலருக்கும் இது தெரியும்; ஆனால்...?

(யாழ்ப்பாணம்)

நல்லூர்ஆலயச்சூழலில்உள்ள விற்பனை நிலையங்களிலும் கர்ப்பூரம், தேங்காய் விற்பவர்களிலும் அதிகமாக காணப்படுவது 16 வயதுக்குட்பட்ட சிறுவர்களே! இது வருடம் தோறும் உற்சவ காலத்தில் நல்லூர் செல்லும் பக்தர்கள் காணுகின்ற ஒரு நெருடலான சம்பவமாகும்.

இச்சிறுவர்கள் பெரும்பாலும் வறுமையின் காரணமாகவே சிறு வருமானம் ஈட்டும் இத் தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். சைக்கிள் பாதுகாப்பு நிலையம் முதற்கொண்டு கர்ப்பூரம் விற்பவர்கள் வரை அதிகளவில் சிறுவர்களே ஈடுபட்டு வருகின்றனர்.

16 வயதுக்குட்பட்ட சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது சட்டத்தின்படி குற்றமாகும். அவ்வாறு வேலைக்கு அமர்த்துவது அவர்களுடைய சிறுவர் உரிமையினை மீறும் செயலாகும். இதுவும் ஒரு சிறுவர் துஷ்பிரயோகமே.

பெரிய கடைகள் முதற்கொண்டு சில்லறை வியாபாரிகள் வரை சிறுவர்களை வேலைக்கமர்த்திவிட்டு அப்பாலகர்களின் உழைப்பில் இந்த வியாபாரிகள் சுகம் காணுகின்றனர் என குற்றஞ்சாட்டப்படுகின்றது.

சிறுவர்களை வேலைக்கமர்த்தி அவர்களினால் வாடிக்கையாளர்களை அழைக்கும் போது பரிதாபத்திற்காக பொருள் வாங்குவார்கள் என்ற கீழ்த்தரமான வியாபாரத் தந்திரமும் சில வியாபாரிகளிடம் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சிறுவர்கள் இவ்வாறு வேலை செய்வதற்கு காரணம் அவர்களுடைய குடும்பத்தின் வறுமையே என்பது மறுக்க முடியாத உண்மை. சிறுவர் உரிமை, சிறுவர் துஷ்பிரயோகம் என பல்வேறு அறிக்கைகளையும் பேச்சுக்களையும் முன்வைக்கும் யாழில் பல அமைப்புக்கள் இத்தகைய சிறுவர்களை கண்ணுறவில்லையா? என்பதே இச் சிறார்களைக் கண்ணுற்ற மக்களின் கேள்வியாகவுள்ளது. (ந-4)

## வாய்க்கால்களை புனரமைத்து தருமாறு விவசாயிகள் கோரிக்கை முன்வைப்பு

(சிவநகர்)

அடம்பன் சோலை வயற்காணிகளின் உள்வீதி மற்றும் வாய்க்கால்களை புனரமைத்து தருமாறு விவசாயிகள் கோரிக்கை ஒன்றை முன் வைத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட சிவநகர் கிராம மக்களே மேற்குறித்த வயற்காணிகளில் கடந்த 84 ஆம் ஆண்டில் இருந்து விவசாயத்தினை மேற்கொண்டு வருகின்றனர்.


இவ் வயற்காணிகளின் உள்வீதி மற்றும் வாய்க்கால்கள் ஆகியவை புனரமைக்கப்படாமையால் விவசாயிகள் விவசாயம் தொடர்பான எந்தவொரு வேலைத்திட்டத்தை மேற்கொள்வதற்கும் இவ் வீதியால் செல்ல முடியாத அவலநிலை உள்ளது.


இதுதொடர்பாக பலமுறை உரியவர்களிடம் கோரிக்கை விடுத்தும் எந்த வித நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை. இவ் வயல் காணியின் நடுப்பகுதியில் உள்ள 12 ஆம் வாய்க்கால் பகுதியையாவது புனரமைத்து உதவுமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ந-3-254)

## தேவாரப் பண்ணிசை இலவசப் பயிற்சி

யாழ்ப்பாணம் வட இலங்கை சங்கீத சபையினதும் அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினதும் பாட விதானங்களுக்கு அமைவாக யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் ஒவ்வொரு சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 3 மணி தொடக்கம் இலவசத் தேவாரப் பண்ணிசைப் பயிற்சி வகுப்பினை அகில இலங்கை திருமுறை மன்றம் நடத்தி வருகின்றது.

இப்பயிற்சி வகுப்பை தாவடியூர் தேவார இசைமணி கே.எஸ். ஆர். திருஞானசம்பந்தன் நடத்தி வருகின்றார். இப்பயிற்சி வகுப்பில் ஆண், பெண் இருபாலாரும் பங்கு பற்றி பயன் பெறலாம். அத்துடன் புதிய மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுவர் என மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி அறிவித்துள்ளார். (ந-9)





வறுமையின் கரங்கள் அமைப்பினர் போரில் பாதிக்கப்பட்ட மாணவர்கள் மற்றும் நலிவுற்ற மாணவர்களுக்கான மருத்துவம், கல்வி ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை வழங்கி வருகின்றனர்.

இதனடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான கல்வி ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் கைதடி கண்டி வீதியிலமைந்துள்ள வறுமையின் கரங்கள் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நிறுவன முகாமையாளர் ப.தயானந்தன் மாணவி ஒருவருக்கு கொடுப்பனவை வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

07

# இலங்கையில் வரலாற்று உதயகால மன்னர்கள்



செங்கை ஆழியான்


கற்காலத்தில் மனித பயன்பாட்டில் இருந்த தூண்டில்


தனது இராச்சியத்துக்கு வடக்கேயுள்ள மணல் வெளியைப் பரிசாக அளித்தான் என அறியப்படுகிறது. பூநகரி சிங்கை நகராக இருந்தால்தான், இது சாத்தியம்.

விஜயகாலிங்க ஆரியச் சக்கரவர்த்தி சிங்கை நகரின் அரசனாக விளங்கியபோது, சிங்கை நகரிலிருந்து தலைநகரை மீண்டும் நாகதீபத்துக்கு (யாழ்ப்பாணக்குடா நாட்டுக்கு) இடம் மாற்றியபெருமைக் குரியனவாகின்றான். அவன் ஆணைப்படி அவனது மந்திரி புவனேகவாகு (கி.பி.1248 இல்) என்பவன், யாழ்ப்பாண நகரியைக் கட்டுவித்து நல்லைக்குலவிய கந்த வேட்குக் கோயிலும் புரிவித்தான். புதிய யாழ்ப்பாண நகரிக்கு மக்கள் தேவைப்பட்டார்கள். நிலவளத்திற்கு ஏற்ப மக்கள் வளம் குறைந்து காணப்பட்டது. யாழப்பாண இராச்சியத்தின் சமூக பொருளாதார அரசியற் படைப் பலத்தைக் குடியேற்றங்களை நிறுவுவது அத்தியாவசியமாகியது. அதற்காகத் தென்னிந்தியாவிலிருந்து மக்களை வரவழைத்


இலங்கையின் வரலாற்றை எதிர்வு கூறுகிற தமிழ்க் கல்வெட்டு கி.பி 1544 இற்குரியது-தென்னிந்தியாவில் விழுப்புரத்திற்கு அருகே தொல்லஞூரில் உள்ள விஷ்ணு கோவிலின் தூணில் காணப்பட்டது

தான் எனக் கைலாயமாலை, யாழ்ப்பாண வைபவமாலை முதலான நூல்கள் விபரிக்கின்றன. அவ்வாறு வரவழைக்கப்பட்ட மக்கள், திருநெல்வேலி, புலோலி, பச்சிலைப்பள்ளி, தொல்புரம், கோயிலாக்கண்டி, நெடுந்தீவு, பல்லவராயன்கட்டு, இணுவில், இருபாலை, தெல்லிப்பளை, மயிலிட்டி முதலான ஊர்களில் குடியேறினார்கள். குடியேற்றங்களை உருவாக்கினார்கள் அத்தோடு வன்னியர் குடியேற்றங்களும் நிகழ்ந்தன. கரிகட்டு மூலைப்பற்று, முள்ளியவளை மேல்பற்று, மேற்கு மூலை, கிழக்கு மூலை, திரியாய், கச்சாய், கட்டுக்களம், திருகோணமலை, தம்பலகாமம், கொட்டியாரம், துணுக்காய், இத்திமடு, நெடுங்கேணி, நொச்சிமுனை, புல்வெளி, தணிக்கல் முதலான உத்தரதேசத்தின் பகுதிகளில் குடியேறினார்கள்.

சிங்கை ஆரியனின் (விஜயகாலிங்கன்) காலத்து யாழ்ப்பாணக் குடா நாட்டிலும் வன்னிப்பிரதேசத்திலும் ஏற்பட்ட தமிழர் குடியேற்றத்தின் பிரதான கட்டங்களையே கைலாய


கி.மு.5,2 ஆம் நூற்றாண்டு என திகதி இடப்பட்ட பொம்பரிப்பு,இலங்கையில் வடமேற்குப் பகுதிகளில் காணப்பட்ட சாடி-தென்னிந்தியாவிலும் டெக்கானிலும் காணப்பட்ட சாடிகளை இது ஒத்திருக்கிறது

மாலை, வையாபாடல் ஆகிய நூல்கள் குறிப்பிடுகின்றன. இப்பிரதேசங்களின் ஆதிக்குடிகளான நாகர்களுடன் தென்னகத்திற்கும் ஈழத்துக்கு 'மிடையில் பல நூற்றாண்டுகளாக நிலவிய தொடர்பின் விளைவாகவே ஈழத்தமிழகம் உருவாகியது. தென்னாட்டிலிருந்து ஈழத்திற்கு வந்த வணிகர், சிங்கள மன்னரின் அழைப்பின் பேரில் வந்த தென்னாட்டுப் போர்வீரர்கள், முத்துக் குளிக்கவந்த பரவர் முதலிய மீனவர், தமிழ் நாட்டிலிருந்து படையெடுத்து வந்த போர்வீரர்கள் முதலியோரின் பிற்சந்ததியினரே ஈழத்தமிழ்க் குடிகள் ஆவார் என்பார் பத்மநாதன். இவ்வாறாக இலங்கைத் தீவில் குடிமக்களின் பரவல் ஏற்பட்டது.

### இலங்கையின் வரலாற்று உதயகால மன்னர்கள் நாகமன்னர்களும் இயக்கத் தலைவர்களும்

கி.மு.483 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையின் அரசியல் வரலாற்றை அறிவதற்குதவும் இலக்கிய ஆவணமாக மஹாவம்சம் விளங்குகின்றது. சிங்ஹல விஜயனதும் அவனது 700 தோழர்களதும் வருகையுடன் இலங்கை வரலாறு ஆரம்பமாகின்றது. ஆனால், கி.மு.3 ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் இலங்கையில் மக்களும் அவர்களுக்கான ஆட்சித்தலைவர்களும் இருக்கவில்லை எனக் கொள்ள முடியாது. கி.மு. 3 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கையில் ஏறக்குறைய 20 நாகர் குடியிருப்புகள் (நாவலந்தீவு நாகர் கோயில், மணிபல்லவம் நாகர்கோயில், மணற்றி, நாகபடுவான், பாலிவாவி, குருந்தன்குளம், பதி, மகாதீர்த்தம், மகாவில்லாச்சி, நாகபொக்கனை, குதிரைமலை, திரிகூடம், சூரியதுறை, நாகன்சாலை, நாகர்முனை, நாகதுமை, தேவேந்திரா நாகர்கோயில், நாகபர்வதம், நவிமானை, கல்யாணி) ஏறக்குறைய 12க்கு மேற்பட்ட இயக்கர் குடியிருப்புகளும் (பொம்பரிப்பு, தாமிரபரணி, திரிகூடம், அரித்தகிரி, யக்குரகல, சலாபம், நிகும்புலாவனம், தூமரக்கை, லக்கலை, விந்தனை, மகியங்கனை, சிறிஸ்துவத்து,கதிர்காமம்) காணப்பட்டிருக்கின்றன. இக்குடியிருப்புகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு குழுமத் தலைவன் இருந்திருக்க வேண்டும்.

ஆதிகால இலங்கையில் பல சிற்றரசுகளினதும் நிலக்குழுத் தலைவர்களினதும் ஆட்சி இருந்தமைக்குப்பல ஆதாரங்களுள்ளன. தென்னிந்தியாவில் கி.மு. 1 ஆம் நூற்றாண்டளவில் தோன்றிய திராவிட மக்களது பெருங்கற்காலப் பண்பாடேஇத்தகைய அரசுகளின் தோற்றத்திற்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது. இலங்கையிலும் இத்தகைய பண்பாடு இருந்தமைக்குச் சான்றுகளுள்ளன. சங்ககாலச் சிற்றரசர்களைக் குறிக்கும் வேள் (வேள), ஆய் (அய), பெருமகன் (பருமக) போன்ற பட்டப் பெயர்கள் இலங்கைப் பிராமிக் கல்வெட்டுகளில் வருவது சான்றாகும். மஹாவம்சக் குறிப்புகளிலிருந்து தென்னிலங்கையின் இயக்கத் தலைவியாகக் குவேனி என்பவள் விளங்கியுள்ளாள். சிறிஸ்தவத்துவின் இயக்க மன்னனாக க஌சேனன் என்பவன் விளங்கியுள்ளான். நாகதீபத்தில் மகோதரன், குலோதரன் என்ற இரண்டு அரசர்கள் ஆண்டதாக மஹாவம்சம் குறிப்பிடுகின்றது. அந்த இரண்டு மன்னர்களிடயே ஒரு சிம்மாசனம் குறித்து எழுந்த பிணக்கைத் தீர்க்க கௌதமபுத்தர் இங்கு விஜயம் மேற்கொண்டார் என மஹாவம்சம் தெரிவிக்கின்றது. மேலும் கல்யாணி இராச்சியத்தை மணியக்கியன் என்ற நாக மன்னன் ஆட்சி புரிந்ததாக அறியப்படுகின்றது. வளைவணன் என்ற நாகமன்னன் ஆண்ட நாடு நாகதீவு என மணிமேகலை குறிப்பிடுகின்றது.


வவுனியாவில் காணப்பட்ட பழமையான கல்வெட்டு

எனவே, இலங்கையின் முதல் மன்னானக விஜயன் அடையாளம் காணப்படுவதற்கு முதல் இலங்கையின் பல பகுதிகளிலும் சிற்றரசர்கள், குழுமத்தலைவர்கள் ஆட்சி நிகழ்ந்து வந்துள்ளது என்பது புலனாகின்றது.


கி.மு.1,2 ஆம் நூற்றாண்டு என திகதியிடப்பட்ட கறுப்பு, சிவப்பு மட்பாண்ட ஓடுகள் இலங்கையில் காணப்பட்டவை-இவை தென்னிந்திய மட்பாண்டங்களை ஒத்தவை

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

189

## தெனாலிராமன் கதைகள்

## அந்தணர் ஏமாந்த கதை

சுமார் நூறு அந்தணர்களுக்கு கையில் சூடு போட்டு அவர்களுக்கு வலியையும் வேதனையையும் உண்டாக்கி விட்ட தெனாலிராமனை அனைத்து அந்தணர்களும் தங்கள் மனத்துக்குள் திட்டியதோடு வெளிப்படையாகச் சபிக்கவும் செய்தனர்.

அந்த அந்தணர்களின் சாபத்தால் தெனாலிராமன் உடல் நலம் குன்றி படுத்த படுக்கையாகி விட்டான்.

அவன் மனைவி தன் கணவன் குணமடைய எல்லா கோயில்களுக்கும் சென்று அங்குள்ள தெய்வங்களை வேண்டினாள்.

ஒருநாள் அவள் வீதி வழியே சென்று கொண்டிருந்த போது தெனாலிராமனால் சூடுபட்ட அந்தணர் ஒருவர் எதிர்ப்பட்டார்.

தெனாலிராமனின் மனைவி எதிர்ப்பட்ட அந்தணரை வணங்கி தன் கணவன் தெனாலிராமன் குணமடைய ஏதாவது வழி இருந்தால் கூறுமாறு கேட்டாள்.

அந்தணர் தெனாலிராமனின் மனைவியைப் பார்த்து, அம்மா! நீ மிகவும் நல்லவள்.

ஆனால் உன் கணவனோ பொல்லாதவன்.

அவன் செய்த காரியத்தால் நிறைய அந்தணர்கள் கையில் சூடு பட்டு அது புண்ணாகி வேதனைப்பட்டுக்கொண்டுள்ளார்கள்.

உன் கணவனுக்கு வந்துள்ள வியாதி மொத்த அந்தணர்களின் சாபத்தால் வந்ததாகும். உன் கணவன் மேல் உள்ள சாபம் நீங்க ஒரு பெரிய பூஜை செய்ய வேண்டும்.

அதற்கு சுமார் இருநூறு பொற்காசுகள் தேவைப்படும் உன்னால் முடியுமா என்று கேட்டார்.

தெனாலிராமனின் மனைவியும் சற்று நேர யோசனைக்குப் பின் அந்தணரை நோக்கி ஐயா! என்னிடம் அவ்வளவு பணம் இல்லை. என் கணவர் பல நாட்களாக வெளியில் எங்கும் செல்லவில்லை.

நீங்கள் கேட்கும் பணம் நான் உங்களுக்குத் தர ஒரே ஒரு வழி தான் உள்ளது. எங்கள் வீட்டில் ஒரு குதிரை உள்ளது.

அதை விற்றால் சுமார் இருநூறு பொன் கிடைக்கும் என்று கூறினாள் தெனாலிராமன் மனைவி.

அவள் கூறியதைக் கேட்ட அந்தணர் முதலில் தெனாலிராமன் குணமாக பூஜை செய்



வதாகவும் பின்னர் குதிரையை விற்று பூஜைக்குப் பணம் பெற்றுக் கொள்வதாகவும் சொன்னார்.

அந்தணர் பூஜை செய்து முடிந்த சில நாட்களிலேயே தெனாலிராமன் குணமாகி நடமாட ஆரம்பித்தான்.

ஒருநாள் அந்தணர் தெனாலிராமனை வழியில் பார்த்து அவன் குணமானால் அவன் மனைவி தனக்கு இருநூறு பொன் தருவதாகவும் அதுவும் வீட்டில் உள்ள குதிரையை விற்று தருவதாகவும் கூறியதைக் கூறினார்.

தெனாலிராமனும் அந்தணரைப் பார்த்து ஐயா! நான் இன்னும் இரண்டு நாட்களில் குதிரையை விற்கும் சந்தைக்குச் சென்று போகிறேன்.

நீங்களும் என்னுடன் வந்தால் குதிரை விற்ற உடன் சந்தையிலேயே உங்களுக்குப் பணத்தைக் கொடுத்து விடுகிறேன் என்று கூறினான்.

தெனாலிராமன் கூறியதைக் கேட்ட அந்தணர் மிகுந்த மகிழ்ச்சியுடன் தன் வீட்டிற்கு சென்றார்.

இரண்டு நாட்களுக்குப் பின் குதிரையை விற்க சந்தைக்கு புறப்பட்ட தெனாலிராமன் குதிரையுடன் வீட்டில் இருந்த ஒரு பூனையையும் தூக்கிக் கொண்டு வழியில் அந்தணரையும் அழைத்துக் கொண்டு சந்தைக்குச் சென்றான்.

சந்தையில் ஒரு உயரமான இடத்தில் நின்று கொண்ட தெனாலிராமன் ஒரு கையில் குதிரையையும் மற்றொரு கையில் பூனையையும் பிடித்துக் கொண்டு சந்தையில் நின்று கொண்டிருந்த அனைவரையும் அழைத்தான்.

அழைத்தவர்கள் அருகில் வந்ததும் அவர்களை பார்த்து குதிரை விலை பத்து பொற்காசுகள் மட்டுமே, ஆனால் அருகில் என் கையில் உள்ள பூனை விலை முந்நூறு பொற்காசுகள் என்றான்.

குதிரை விலையைக் கேட்டவர்கள் நான் நீ என்று முந்திக் கொண்டு குதிரையை வாங்க வந்தார்கள்.

தெனாலிராமன் உடனே குதிரை வாங்க வந்தவர்களைப் பார்த்து நான் குதிரையை மட்டும் தனியாக விற்கப் போவதில்லை, முந்நூறு பொற்காசுகள் கொடுத்து யார் பூனை வாங்குகிறார்களோ அவர்களுக்கு மட்டும் தான் குதிரையை பத்து பொற்காசுகளுக்கு விற்பேன் என்றான்.

குதிரையின் தோற்றத்தையும் அதன் கம்பீரமான நடையையும் பார்த்த ஒருவன் பூனைக்கு முந்நூறு பொன்னும் குதிரைக்குப் பத்துப் பொன்னும் கொடுக்க முன் வந்தான்.

தெனாலிராமன் முதலில் முந்நூறு பொன்னை வாங்கிக் கொண்டு பூனையை விற்றான்.

பின்னர் அருகில் நின்று கொண்டிருந்த அந்தணரை அழைத்த தெனாலிராமன் ஐயா! முந்நூறு பொன்னுக்குப் பூனையை விற்றுவிட்டேன்.

நான் இப்போது பூனையை விற்றவர்க்கு குதிரையை விற்கப் போகிறேன்.

குதிரையை அவர் பத்து பொற்காசுகளுக்கு வாங்கப் போகிறார்.

அவர் கொடுக்கும் பத்து பொற்காசுகளை நீங்கள் குதிரை விற்ற காசாக எண்ணி வாங்கிக் கொண்டு செல்லுங்கள் என்று கூறினான்.

சந்தையில் கூடி இருந்த கூட்டத்தில் நின்று கொண்டிருந்த அந்தணர் வேறு வழி தெரியாமல் குதிரை விற்ற காசான பத்து பொற்காசுகளை பெற்றுக் கொண்டு தலை குனிந்தவாறு சந்தையில் இருந்து தன் வீடு நோக்கி நடந்தார்.

தெனாலிராமனும் பூனை விற்ற காசான முந்நூறு பொற்காசுகளை பத்திரமாக தன் மனைவியிடம் கொடுத்து பத்திரப்படுத்துமாறு கூறி நிம்மதியாகப் படுத்து உறங்கினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரமற்ற டீசல் விநியோகத்திற்கு அமைச்சரவைக் குழுவும் காரணம்

## பதவி விலகிய பணியாளர்கள் குற்றச்சாட்டு

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் இருந்து பலாத்காரமாக பதவி விலகல்களுக்கு ஆளான முன்னாள் பணிப்பாளர்கள் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட கேள்விப்பத்திர சபை மற்றும் அமைச்சரவை தொழில்நுட்ப குழு ஆகியவற்றின் மீது குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர்.

தரமற்ற டீசலை விநியோகம் செய்த குற்றச்சாட்டு தொடர்பிலேயே பெற்றோலிய கூட்டுத்தாபன பணிப்பாளர் சபை கடந்த வியாழக்கிழமை பதவி விலகியது. எனினும் உடனடியாகவே புதிய சபை அமைக்கப்பட்டது.

இந்தநிலையில் பெற்றோலியத்துறை அமைச்சரும் ஏனையவர்களும் தம்மீதான குற்றச்சாட்டுக்களை தவிர்க்கும் வகையிலேயே பழைய பணிப்பாளர் சபையின் மீது குற்றச்சாட்டை முன்வைத்ததாக பதவி விலகியவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இலங்கையில் தரமற்ற டீசல் விநியோகத்தினால் பல அரச வாகனங்களும் பாதைகளில் வைத்து செயலிழந்துப் போனமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-2)

## நல்லூர் ஆலயச் சூழலில்

# பாதணி பாதுகாப்புக்கு அதிக பணம்; மாட்டிக்கொண்டனர் இரு ஊழியர்கள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவத்தின்போது பாதணிகளை பாதுகாப்பதற்கு அதிக பணம் பெற முற்பட்ட இருவரை யாழ். மாநகர சபை நேற்று பணி இடைநிறுத்தம் செய்துள்ளது.

ஆலய வளாகத்தில் அடியவர்களின் பாதணிகளைப் பாதுகாப்பதற்கென யாழ். மாநகர சபையால் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் பணிபுரிந்த இருவரே இவ்வாறு அதிக பணத்தினை பெற முற்பட்டுள்ளனர்.

யாழ். மாநகர சபையின் அதிகாரிகளினால் நேற்று முன்தினம் காலை மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின் போதே இவர்கள் மீது மேற்படி குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் இவர்களை தொடர்ந்து பணியில் அமர்த்துவதா இல்லையா என்ற முடிபு எடுக்கப்படும் என யாழ். மாநகர சபையின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (எ-6)

# குடிவரவு குடியகல்வு சட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்தத் திட்டம்

இலங்கை குடிவரவு குடியகல்வு சட்டங்களில் பாரிய மாற்றங்கள் கொண்டு வரப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குடிவரவு குடியகல்வுச் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்படவுள்ளதாக குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் சூலானந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

நாட்டில் அண்மைக்காலமாக சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகள் உயர்வடைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளை தடுக்கும் நோக்கில் இவ்வாறு புதிய சட்டங்கள் அறிமுகம் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிரோதமான முறையில் நாட்டை விட்டு வெளியேற முயற்சிப்போருக்கும் அதற்கு துணை நிற்போருக்கும் எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கக் கூடிய வகையில் சட்டத் திருத்தங்கள் கொண்டு வரப்படவுள்ளன.

அண்மைக்காலமாக கடல் வழியாக அவுஸ்திரேலியா நோக்கி புகலிடம் கோருவோரின் எண்ணிக்கையில் உயர்வு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# நுரைச்சோலை அனல்மின்சார உற்பத்தி குறித்து சந்தேகம்

## மின்சார சபை அதிகாரிகள் விசனம்

நுரைச்சோலை அனல் மின்சார நிலையப் பணிகளை தொடர்ந்தும் பிரச்சினையின்றி முன்னெடுக்க முடியும் என்பதில் தமக்குச் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நுரைச்சோலை அனல் மின்சார நிலையம் 45 பில்லியன் ரூபாய்கள் செலவில் அமைக்கப்பட்டது. தற்போது இந்த நிலையத்தின் மின்பிறப்பாக்கியில் தற்போது ஏற்பட்டுள்ள தொழில்நுட்பப் பிரச்சினை காரணமாக மேலும் 4 பில்லியன் ரூபாய்கள் நட்டம் ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

தொழில்நுட்பப் பிரச்சினை சீர் செய்யப்பட்டு இன்று மின்பிறப்பாக்கி இயக்கப்படவுள்ளது. இதன்போது உரிய வகையில் அது செயற்படாது போனால் அதனைச்சீர்செய்ய மேலும் பல வாரங்கள் செல்லும் என்றும் மின்சாரசபை அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

நுரைச்சோலை அனல் மின்சார நிலைய உற்பத்திகள் பாதிக்கப்பட்டமை காரணமாக இலங்கையில் தற்போது மின்சார விநியோகத் தடை அவ்வப்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ந-2)




★ 1415-நூறு ஆண்டுப் போர்: இங்கிலாந்தின் ஐந்தாம் ஹென்றி மன்னன் 8 ஆயிரம் பேருடன் பிரான்சை அடைந்தான்.

★ 1516- புனித ரோமப் பேரரசன் ஐந்தாம் சார்ள்ஸ் நேப்பில்சையும் பிரான்சின் முதலாம் பிரான்சிஸ் மிலானையும் உரிமை கொண்டாட இரு நாடுகளுக்கும் இடையில் உடன்பாடு எட்டப்பட்டது.

★ 1536-ஜப்பானில் கியோட்டோவில் உள்ள என்றியாக்கு கோயிலின் பௌத்த மதகுருக்கள் கியோட்டோவில் இருந்து 21 நிச்சிரன் கோயில்களைத் தீக்கிரையாக்கினர்.

★ 1849-யாழ்ப்பாணம் பதில் மறை மாவட்டம் நிறுவப்பட்டது.

★ 1913-ஹரி பிறியர்லி துருப்பிடிக்காத எஃகுவைக் கண்டுபிடித்தார்.

★ 1920-போலந்து- சோவியத் ஒன்றியம் போர் ஆரம்பமாயிற்று. ஓகஸ்ட் 25 இல் முடிவடைந்த இப்போரில் செம்படையினர் தோற்றனர்.

★ 1937-ஷங்காய் சமர் ஆரம்பமானது.

★ 1954-பாகிஸ்தான் தனது தேசிய கீதத்தை முதன்முறையாக வானொலியில் ஒலிபரப்பியது.

★ 1960-மத்திய ஆபிரிக்கக் குடியரசு பிரான்சிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.

★ 1961-ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு பேர்லினின் கிழக்கு மற்றும் மேற்கு எல்லைகளை மூடி கிழக்கு ஜேர்மனியினர் தப்பிச் செல்லா வண்ணம் பேர்லின் சுவரைக் கட்ட ஆரம்பித்தது.

★ 2004-கறுப்பு வெள்ளி: மாலைதீவுகள் தலைநகர் மாலேயில் இடம்பெற்ற அமைதியான அரச எதிர்ப்புப் போராட்டம் இராணுவத்தினரால் முறியடிக்கப்பட்டது.

★ 2004-புருண்டியில் கடும்பா அகதிகள் முகாமில் இருந்த 156 டுட்சி இன அகதிகள் படுகொலை செய்யப்பட்டனர்.

★ 2004- 28 ஆவது ஒலிம்பிக் விளையாட்டுக்கள் எதென்ஸில் ஆரம்பமாகின.

★ 2006-யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டி தேவாலயத்தின் மீது நடத்தப்பட்ட எறிகணைவீச்சில் பல பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

### பிறப்பு

★ 1926-ஃபிடெல் காஸ்ட்ரோ, கியூபாவின் புரட்சியாளரும் ஜனாதிபதியுமாவார்.

### இறப்புக்கள்

★ 1917-எடுவர்டு பூக்னர், ஜேர்மனிய வேதியியல் அறிஞர் (பி.1860)

★ 1946-எச்.ஜி.வெல்ஸ், ஆங்கில எழுத்தாளர் (பி.1866)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### புளோரன்ஸ் நைட்டிங்கேல்



புளோரன்ஸ் நைட்டிங்கேல் நவீன தாதியியல் முறையை உருவாக்கிய இங்கிலாந்துத் தாதி. போரில் காயம்பட்ட வீரர்களுக்கு ஓய்வின்றி மருந்திட்டவர். தாதிகளுக்கான பயிற்சிப் பள்ளியையும் இவரே முதலில் ஆரம்பித்தவர். விளக்கேந்திய சீமாட்டி, கைவிளக் கேந்திய காரிகை (The Lady with the Lamp) என்று அழைக்கப்பட்டார். இவர் ஒரு எழுத்தாளரும் புள்ளியியலாளாரும் ஆவார்.

#### ஆரம்பகால வாழ்க்கை

பிரிட்டிஷ் செல்வம் பொருந்திய உயர் குடிக் குடும்பமொன்றில் இத்தாலி புளோரன்ஸ் நகரில் இவர் பிறந்தார். இவர் பிறந்த இடத்தின் பெயரைத் தழுவி இவருக்குப் பெயரிட்டார்கள். தந்தை பெயர் வில்லியம் எட்வர்ட் நைட்டிங் கேல். தாயார் பெயர் பிரான்செஸ் நைட்டிங்கேல்.

எம்ப்லீ பார்க் புளோரன்ஸ் நைட்டிங்கேலின் குடும்ப வசிப்பிடம் இப்பொழுது ஒரு பாடசாலையாகவுள்ளது. கிறிஸ்தவர் என்ற முறையில் தனக்கு இறைவனால் விதிக்கப்பட்ட பணியாக தாதியர் சேவையை அவர் உணர்ந்தார். 1837 ஆம் ஆண்டில் அவருக்கு ஏற்பட்ட இந்த உணர்வு அவரது வாழ்நாள் முழுவதும் நீடித்தது. பெற்றோரின் குறிப்பாகத் தாயாரின் எதிர்ப்புக்கும் துன்பத் துக்கும் மத்தியில் தாதியர் சேவையில் ஈடு பட வேண்டும் என்னும் தனது முடிவை புளோரன்ஸ் 1845 ஆம் ஆண்டு அறிவித்தார்.

புளோரன்ஸ் வறியவர்கள் மீதும் இயலாதவர் மீதும் அக்கறை கொண்டிருந்தார்.

தாதியர் சேவையில் முழுமையாகத் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதிலிருந்து திருமணம் தடை செய்யும் எனக் கருதி ரிச்சர்ட் மொங்க்டன் மில்ன்ஸ் எனும் அரசியல்வாதியுடனான தனது உறவை முறித்துக் கொண்டார்.

1851 ஆம் ஆண்டு 4 மாதங்கள் கெய்சர் ஸ்வர்த் மருத்துவமனையில் பெற்ற பயிற்சி மூலம் தாதியியல்பால் இவரது கவனம் தீவிர மடைந்தது.

மருத்துவ வசதிகளுக்கும் சுகாதார நுட்பங்களுக்கும் இடையிலான தொடர்புகள் குறித்த மருத்துவமனைகள் பற்றிய குறிப்புக்கள் அக் காலத்தில் தாதியர்களுக்கான மிகச் சிறந்த பாடநூலாகக் கருதப்பட்ட தாதியர்பணி பற்றிய குறிப்புக்கள் (8) உடல் நலத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் விடயங்கள் பிரித்தானிய இராணு வத்தின் மருத்துவமனை நிர்வாகமும் செயல் திறனும் என்பவை நைட்டிங்கேல் எழுதிய புகழ் பெற்ற நூல்களுள் சிலவாகும்.

புளோரன்ஸ் நைட்டிங்கேல் 1883 இல் விக்டோரியா அரசியிடமிருந்து அரசு செஞ்சிலுவை விருது பெற்றார். 1907 இல் ஓர்டர் ஒவ் மெரிட் எனும் விருதையும் இவர் பெற்றார். இவ்விருதைப் பெற்ற முதல் பெண்மணி இவராவார்.

குரோனிக் ஃபட்டீக் சின்ட்ரோம் (அதீத களைப்பு ஏற்படல்) எனும் நோய் இவருக்கு இருந்ததாக கருதப்படுகிறது. 1896 ஆம் ஆண்டளவிலிருந்து படுத்த படுக்கையானார். 1910 ஓகஸ்ட் 13 ஆம் நாள் தனது 90 ஆம் வயதில் மிகவும் அமைதியாக தனது அறையில் மரண மெய்தினர்.

இவர் இறந்த போது வெஸ்ட்மின்ஸ்டர் அபியில் புதைக்க அரசு முன்வந்த போதும் அவரது உறவினர்களால் அது மறுக்கப்பட்டது. புளோரன்ஸ் நைட்டிங்கேலின் உடல் ஈஸ்ட் வெலோவிலுள்ள புனித மார்கரட் தேவாலய இடுகாட்டில் புதைக்கப்பட்டுள்ளது.

#### நினைவு கூறல்

கே எல்.எம். விமான நிறுவனம் தங்கள் எம்.டி 11 விமானமொன்றிற்கு புளோரன்ஸ் நைட்டிங்கேலின் பெயரை இட்டிருக்கிறது. இஸ்தான்புல்லில் உள்ள மூன்று வைத்தியசாலைகள் இவர் பெயரைக் கொண்டுள்ளன.

உரோமில் உள்ள அகஸ்டினோ ஜெமெல்லி மருத்துவ நிலையம் (இத்தாலியின் முதல் பல்கலைக் கழகஞ் சார் மருத்துவமனை) தாதியியலில் புளோரன்ஸ் நைட்டிங்கேலின் பங்களிப்பைக் கௌரவிக்கும் முகமாக தாதியருக்கு உதவும் படுக்கையருகே வைக்கும் கம்பியில்லா இணைப்புக் கொண்ட கணனியொன்றிற்கு பெட்சைட் புளோரன்ஸ் எனப் பெயரிட்டுள்ளது.

# கிழக்கு மாகாணசபைத் தேர்தல்மீது சர்வதேசத்தின் கவனம் திரும்புகிறது

கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலுக்கு இன்னமும் ஒரு மாதமே உள்ள நிலையில், தேர்தல் பிரச்சாரங்கள் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளன. இந்தத் தேர்தலில் ஆட்சியைப் பிடிக்கப்போவது யார் என்ற கேள்வி பலமாக உள்ளது. ஆனால், ஒன்று மட்டும் உறுதியானது. இந்தத் தேர்தலில் முக்கிய போட்டியாளராக இருக்கின்ற மூன்று அணிகளில் எதனாலும் தனித்து ஆட்சியைப் பிடிக்க முடியாது என்பதே அது.



கிழக்கின் இனப் பரம்பல், தற்போதைய நிலையில் எவரையும் தனித்து ஆட்சியமைக்க இடமளிக்கப் போவதில்லை.

இங்கு ஐக்கிய மக்கள்சுதந்திர முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் தேசியக் கூட்டமைப்பு இந்த மூன்று கட்சிகளும்தான் வலுவான போட்டியில் உள்ள கட்சிகள்.

ஐ.தே.க, ஜே.வி.பி, தேசிய சுதந்திர முன்னணி, இடதுசாரிக் கட்சிகள் போன்ற மற்றெல்லாமே அடுத்தடுத்த கட்டங்களில் உள்ளவைதான். முதல் மூன்று நிலைகளில் உள்ள கட்சிகளில் எது அதிக ஆசனத்தை பிடிக்கப் போகிறது என்ற கேள்வியே முக்கியமானது. எந்தக் கட்சி அதிக ஆசனத்தைக் கைப்பற்றினாலும் ஆட்சி அமைப்பதற்கு பிற கட்சிகளின் ஆதரவைப் பெறவேண்டியிருக்கும். அப்படி ஆட்சி அமைப்பதற்கான கூட்டணி எது என்ற கேள்விதான் தொடர்கிறது. காரணம், முன்னதாக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியோடு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கூட்டணி அமைத்திருந்தது.

ஆனால், கட்சிக்குள் நிலவிய கடும் எதிர்ப்புகளை அடுத்து, கடைசி நேரத்தில் ஆளும் கட்சியுடன், இணைந்து போட்டியிடாமல் தனித்து போட்டியிட முடிவு செய்தது.

முன்னதாக இந்த தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்து போட்டியிட்டு ஆட்சியைப் பிடிக்கின்ற திட்டத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன் வைத்திருந்தது.

ஆனால், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதில் அவ்வளவாக ஆர்வம் காட்டவில்லை. காரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிடுவதனால், அரசாங்கத்தை எதிர்த்து நிற்க வேண்டும். அப்படி எதிர்த்து நிற்பதாயின் அரசாங்கத்திலிருந்து அமைச்சர் பதவிகளை விட்டுவிலக வேண்டும். அதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தயாராக இருக்கவில்லை. இதனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நெருங்கிச் செல்ல அது தயாராக இருக்கவில்லை. அரசு தரப்பினுடனேயே பேரம் பேசியது. கடைசியில் அரச தரப்பிலிருந்து விலகி தனித்துப் போட்டியிடுகிறது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆளும் கட்சியுடன் இணைந்து போட்டியிட முன்னர், முடிவு செய்தபோது, அதனால் அதிகம் வருத்தமடைந்தது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான். ஏனென்றால், கிழக்கு மாகாண சபையை தமிழ் பேசும் கட்சிகளின் கையில் வைத்திருக்க வேண்டும். அரசு தரப்பு பிடித்து விடக்கூடாது என்ற தனது கனவு சிதறிப்போய்விடுமே என்ற அச்சம் தான்.

தனித்துப் போட்டியிட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முடிவு செய்தபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு உள்ளூர மகிழ்ச்சி. அதை அவர்கள் வெளிப்படுத்தவும் தவறவில்லை.

தனித்துப் போட்டியிட முடிவு செய்த பின்னர் தேர்தல் பிரச்சாரங்களில் அரசாங்கத்தை எதிர்க்க மாட்டோம், விமர்சிக்க மாட்டோம் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கூறியது.

இது அமைச்சர் பதவிகளை தக்க வைத்துக்கொள்வதற்கான ஒரு உத்தியே யாகும். அதேவேளை, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடுவது ஒரு தந்திரமே என்றும், தேர்தல் முடிந்த பின்னர் கூட்டாக ஆட்சி அமைப்போம் என்றும் ஆளும் கட்சியின் அமைச்சர்கள் கூறிவருகின்றனர். இருந்தாலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ

## புதிய அரசியல் நகர்வுகளுக்கு வாய்ப்புள்ளதா?

இலங்கை முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்து ஆட்சியமைப்பதற்கு இன்னமும் கனவு கண்டுகொண்டுதான் இருக்கிறது.

ஏனென்றால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தத் தேர்தலில் தமக்கு கணிசமான ஆசனங்கள் கிடைக்குமென்று உறுதியா நம்புகிறது.

2010 நாடாளுமன்றத் தேர்தல், 2011 உள்ளூராட்சித் தேர்தலில் கிடைத்த வெற்றிகள் அதற்கு இந்த நம்பிக்கையை கொடுத்துள்ளன. ஆனால், தனித்து ஆட்சியமைக்கும் அளவுக்கு பெரும்பான்மைபலம் தமக்கு கிடைக்கும் என்றளவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. இந்தநிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்பார்ப்பது போலவே வெற்றிபெற்றால் ஒன்றில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து ஆட்சியமைக்க வேண்டும்.

அல்லது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுடன் கூட்டணி அமைக்க வேண்டும். ஆளும் கட்சியுடன் கூட்டணி ஆட்சியமைப்பது பற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால், நினைத்துக்கூடப் பார்க்க முடியாது. எனவே, அவர்களுக்கு இருக்கின்ற ஒரே தெரிவு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகத்தான் இருக்க முடியும்.

ஆனால், அதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒத்துழைப்பு வழங்க முன்வருமா என்ற கேள்வி உள்ளது. ஏனென்றால், கிழக்கில் தமிழ்த் தேசிக் கூட்டமைப்புடன் இணைந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சி அமைப்பதை அரசாங்கம் விரும்பாது. கிழக்கு, தமது கையவிட்டுப் போவதை அரசாங்கம் ஒருபோதும் விரும்பப் போவதில்லை. எப்படியாவது சலுகைகளைக் கொடுத்தோ, அல்லது வேறு பேரங்களைப் பேசியோ முஸ்லிம் காங்கிரசை தன்பக்கம் இழுத்துக் கொள்ளவே அரச தரப்பு முனையும் என்பதில் சந்தேகம் இல்லை.

ஏற்கனவே மத்திய அரசில் இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் இடம்பெற்றிருப்பது அதற்கு இன்னமும் சாதகமானது. இந்த கூட்டணி அமைவதானாலும்கூட முதலமைச்சர் விவகாரத்தில் ஒரு சிக்கல் இருக்கத்தான் செய்யும். அதை அரசாங்கம் எவ்வாறு தீர்க்கும் என்பது முக்கியமான விடயம். ஆனால், மீண்டும் ஆளும் கட்சிக் கூட்டணி, கிழக்கில் ஆட்சியமைப்பதை சர்வதேச சமூகம் விரும்புமா என்ற கேள்வியும் உள்ளது. கிழக்கில் இலங்கை முஸ்லிம் காங்கிரசும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இணைந்து ஆட்சி அமைப்பதில் அமெரிக்கா ஆர்வம் கொண்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

விரைவில் இலங்கை வரலாம் என்று நம்பப்படும் தெற்கு, மத்திய ஆசியப் பிராந்தியங்களுக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் றொபேர்ட் ஓ பிளேக், இதற்கான முயற்சிகளில் ஈடுபடக்கூடும் என்றும் தகவல்கள் உள்ளன.

முன்னதாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசையும் இணைத்து போட்டியிட வைக்க, நோர்வே அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகவும், அது தோல்வியில் முடிந்துள்ளதாகவும் சில ஊடகங்களில் செய்திகள் வெளியாகின. ஆனால், அதை நோர்வே அடியோடு நிராகரித்திருந்தது.



அதேவேளை, அமெரிக்காவின் ஆர்வம் தொடர்பாக செய்திகள் வெளியானபோது, நோர்வேயைப் போல அமெரிக்கா அதை நிராகரிக்கவில்லை. கிழக்கில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணைந்து ஆட்சி அமைப்பதை இந்தியாவும் கூட விரும்பலாம்.

எப்போதுமே வல்லரசு நாடுகள், தமது கவனிப்புக்குரிய நாடுகளில் எதிர்க்கட்சிகள் பலவீனமடைவதை விரும்புவதில்லை. ஆளும் கட்சி ஒட்டுமொத்த அதிகாரத்தையும் கையில் வைத்திருப்பது ஜனநாயகத்துக்கு ஆபத்தானது என்றே அமெரிக்கா போன்ற நாடுகள் கருதுகின்றன.

*கீரைக் கடைக்கும் ஒரு எதிர்க் கடை வேண்டும்* என்பது அவற்றின் உறுதியான நம்பிக்கை.

அதுவே, அந்த நாடுகளை தம் கைக்குள் வைத்திருப்பதற்கு உதவும் என்று அமெரிக்கா போன்ற நாடுகள் வலுவாக நம்புகின்றன.

ஜனாதிபதித் தேர்தலின்போது சரத் பொன்சேகாவுக்கு அமெரிக்கா ஆதரவு அளித்ததும் இந்தப் பின்னணியில்தான்.

அதேவேளை, கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசும் இணைந்து ஆட்சியமைப்பது பல பிரச்சினைகளுக்குத் தீர்வைத் தரும் என்று இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகள் நம்புவதாகத் தெரிகிறது.

**கே. சஞ்சயன்**

அதாவது, கிழக்கில் தமிழ்த் பேசும் மக்கள் ஒன்றிணைவதன் மூலம் அரசாங்கத்தை அரசியல் தீர்வு ஒன்றுக்கு இழுத்துவர முடியும் என்பது இந்த நாடுகளின் நம்பிக்கை.

அதற்கு இந்தத் தேர்தலை சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள அவை முனையலாம். ஆனால், எந்த நாடுமே கிழக்குத் தேர்தலில் தாம் ஆர்வம் காட்டுவதாக வெளிப்படையாக கூறவில்லை.

இருந்தாலும், இந்தத் தேர்தல் சர்வதேசத்தின் கவனத்தைப் பெற்றுள்ளது என்பது மட்டும் உண்மை.

கிழக்கில் இலங்கை முஸ்லிம் காங்கிரசும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்திருந்து ஆட்சியமைக்கின்ற ஒரு நிலை உருவானால், அதை அடிப்படையாக வைத்து அமெரிக்காவோ, இந்தியாவோ புதிய அரசியல் நகர்வுகளில் இறங்கக் கூடிய வாயப்புகள் இருக்கின்றன.

ஏனென்றால், அத்தகையதொரு நிலையானது, இலங்கை அரசாங்கத்தின் தற்போதைய உறுதியை உடைத்து விடக்கூடியதாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள அரசின் இனவெறிப் போக்கை சிறைக் கைதிகளின் படுகொலை நிருபிக்கிறது

## நீதிக்கான குரல் இங்கு நிலைக்காது - கஜேந்திரகுமார்

தன்னுடைய இனத்திற்காக சேவை செய்யும் நோக்கத்தில் செயற்பட்டதற்காக அவர் கைது செய்யப்பட்டிருந்தார். கைது செய்யப்பட்டிருந்தும் தன்னுடைய இனத்திற்கான விடுதலை நோக்கிச் செல்லவேண்டும் என்ற உறுதியான கொள்கையோடு நின்றிருந்தார்.

ஆனால் தங்களுடைய கட்டுப்பாட்டின் கீழ் வைத்துக் கொண்டு நீதியைக் கொடுக்காமல் கொலை செய்திருக்கின்றது. தமிழினத்திற்கு எதிராக காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்பட்டுவரும் வன்செயல்களின் ஒரு அங்கமாகவே நிமலரூபனதும் டெல்றொக்சனினதும் படுகொலைகளை நாங்கள் பார்க்க வேண்டும். இந்த படுகொலைகள் வெறுமனே ஒரு அரசாங்கத்தின் இனவாதப்போக்கை காண்பிக்கவில்லை.

மாறி மாறி ஆட்சிபீடமேறும் ஒட்டுமொத்த சிங்கள அரசாங்கங்களினதும் இனவாதப் போக்கையே இவை காண்பிக்கின்றன என தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

இதை நாங்கள் சரியாக புரிந்து கொண்டு இந்தப்பிரச்சினைகளை சரியான பின்னணியில் அணுகவேண்டும். அல்லாது போனால் நிச்சயமாக இந்தப் பிரச்சினைகளுக்கு ஒருபோதும் தீர்வு காணமாட்டோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

வவுனியா சிறைச்சாலை தாக்குதல் சம்பவத்தில் படுகாயமடைந்து கோமா நிலையிலிருந்தபோது உயிரிழந்த தமிழ் அரசியல் கைதி டெல்றொக்சனின் இறுதிக் கிரியைகள் நேற்று முன்தினம்இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு அஞ்சலியுரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.அவர்மேலும்தெரிவிக்கையில்.

டெல்றொக்சனின் கொலையின் உண்மையான ஆழமான நிலையினை சரியாக அறிந்துகொள்ளவேண்டும். இன்று இலங்கை தன்னையொரு ஜனநாயக நாடு என கூறிக் கொள்கின்றது. ஜனநாயகத்தின் முக்கியமான அம்சம் சட்டத்தின் ஆட்சி. அதாவது அந்த நாட்டின் சட்டத்திற்கு அமைவாகவே அனைத்து விடயங்களும் இடம் பெறவேண்டும்.

அந்த வகையில்தான் தன்னுடைய விடுதலையினை வாதாடி எடுக்க் தயாராக இருந்த போது அவர் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார். இதன் அர்த்தம் உண்மையில் இலங்கையில் ஜனநாயகம் என்பது இல்லை என்பதே. இதேபோல் இன்றுள்ள இந்த அரசுதான் இவ்வாறு செயற்படுகின்றது என்றில்லை.

வெலிக்கடையில் நடந்தபோது வேறு அரசாங்கம், வேறு கட்சி ஆட்சியிலிருந்தது. அதுபோலத்தான் காலத்திற்குக் காலத் தமிழினப் படுகொலைகளின் போது வேறு வேறு அரசாங்கங்களும் கட்சிகளுமே ஆட்சியிலிருந்தன.

எனவே இன்றுள்ள இந்த அரசாங்கத்தின் இனவாதப் போக்கை மட்டும் காட்டவில்லை. ஒட்டுமொத்தமாக சிங்கள அரசாங்கங்களினது இனவாதப் போக்கையே காட்டிக் கொண்டிருக்கின்றது.

இவ்வாறான படுகொலைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளியினை எம்மால் நிச்சயமாக வைக்க முடியாது. சரியான பின்னணியில் அணுகாவிட்டால் பிரச்சினைக்கு ஒருபோதும் தீர்வு காணமாட்டோம் . இதனை தமிழினத்



திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் வன்செயல்களின் அங்கமாகவே நாம்பார்க்க வேண்டும். ஆனால் எங்கள் பிரச்சினைகள் சரியாக அணுகப்படவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ந-2)

## கொழும்பு நடைபாதை வியாபாரத்தில் சீனர்கள்

இலங்கை நடைபாதை வியாபாரத்தில் சீனர்களும் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

கொழும்பில் சீனத் தயாரிப்பு கைத் தொலைபேசிகள் உள்ளிட்ட பொருட்களை சீனர்கள் நடைபாதைகளில் விற்று வருகின்றனர்.

சீனப் பெண்களும் கூட இந்த நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இலங்கை புடைவைகள், துணிகள் விற்பனையில் ஈடுபட்ட தமிழ்நாட்டு வியாபாரிகளை இலங்கைப் பொலிஸார் குடிவரவுச் சட்டங்களின் கீழ் கைது செய்து நாடு கடத்திய போதிலும் நடைபாதை விற்பனையில் ஈடுபடும் சீனர்கள் மீது எந்த நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ந-8)

## போலிநாணயத்தாளின் பாவனை வன்னிப் பகுதியில் அதிகரிப்பு

(கிளிநொச்சி)

வன்னிப்பிரதேசத்தில் போலி நாணயத்தாளின் பாவனை அதிகரித்துள்ளதாகவும் கடந்த ஒருவாரத்தில் மட்டும் மூன்று நபர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்துள்ளார்.

யாழ்.பொலிஸ் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி- பரந்தன் பகுதியில் அமைந்துள்ள விடுதியில் 50 ஆயிரம் ரூபாய் போலி நாணயத்தாள்கள் வைத்திருந்த நபர் ஒருவரும் பூநகரிப் பகுதியில் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வவுனியா ஓமந்தையில் 10 ஆயிரம் ரூபாய் போலி நாணயத்தாள்களைக் கைமாற்ற முற்பட்ட வேளை ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர்களிடம் தொடர்ந்தும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டுள்ளார். (ந-2)

## எரிபொருளை விநியோகிக்க முன்னர் இருமுறை பரிசோதனை நடக்கிறது

(கொழும்பு)

எரிபொருள் இறக்குமதி செய்யப்பட்ட பின்னர் அவற்றை சந்தைக்கு விநியோகிக்க முன்னர் கொலன்னாவை ஆய்வு கூடத்திலும் சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலைய ஆய்வு கூடத்திலும் இருமுறை பரிசோதனை செய்ய பெற்றோலிய கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவின் பணிப்புரைக்கு அமைய இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பெற்றோலிய வளத்துறை அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய விநியோகிக்கப்படும் எரிபொருளின் தரம் தொடர்பிலான சான்றிதழை சபுகஸ்கந்த,கொலன்னாவை ஆய்வு கூடங்களில் பெற்றுக்கொண்ட பின்னரே சந்தைக்கு விநியோகிக்கப்படும் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-2)

## புலிகளின் ஆதரவாளர்கள் கோத்தபாயவுடன் சந்திப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக செயற்பட்ட புலம்பெயர் தமிழர்கள் 22 பேர் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுடன் அண்மையில் விசேட சந்திப்பொன்றில் ஈடுபட்டனர்.

22 பேரைக் கொண்ட புலம்பெயர் தமிழ் பிரதிநிதிகளே இவ்வாறு பாதுகாப்புச் செயலாளரைப் பாதுகாப்பு அமைச்சில் வைத்து சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதில் அவுஸ்திரேலியா ,பிரான்ஸ், பிரித்தானியா, சுவிட்சர்லாந்து, சுவீடன், நோர்வே ஆகிய நாடுகளில் வாழும் புலம்பெயர் தமிழர்களே பாதுகாப்புச் செயலாளரைச் சந்தித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் குமரன் பத்மநாதனின் அழைப்பை ஏற்று இவர்கள் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளனர்.


இதன் யுத்த வலய தமிழ் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ புலம்பெயர் தமிழர்களிடம் உறுதியளித்துள்ளார்.


மனிதாபிமான விவகாரங்கள், வடக்கு கிழக்கு புனரமைப்பு, புனர்வாழ்வு போன்ற விடயங்கள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

தமிழ்கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை மற்றும் வடக்கு கிழக்கு மனிதாபிமான விவகாரங்கள் குறித்து புலம் பெயர் தமிழர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

யுத்தத்தின் பின்னர் அரசாங்கம் மேற்கொள்ளும் அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் சிலநாடுகள் பிழையான பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பாதுகாப்புச் செயலாளர் குற்றம் சுமத்தியுள்ளார். யுத்தம் காரணமாக ஏற்பட்ட காயங்களை ஆற்ற அனைத்து தரப்பினரினதும் ஆதரவு அவசியம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நூற்றுக் கணக்கான முன்னாள் விடுதலைப் புலி போராளிகள் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ளதாக அவர் இதன்போது குறிப்பிட்டுள்ளார். (ந-2)





வவுனியா சாஸ்திரி கூழாங்குளம் சிவன் கோயிலின் குப்பாபிஷேகம் அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வின் போது... (படங்கள்: பூந்தோட்ட செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நல்லூர் ஆலயச்சூழலில்...

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் மஹோற்சவத்தின் இருபத்தொராம் நாளாகிய இன்று திங்கட்கிழமை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் ஒரு திருமுருகன் எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவினை பேராசிரியர் சண்முகதாஸ் ஆற்றுவார்.

பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நடைபெறவுள்ள இந்நிகழ்வில் அராலி கோகுலம் அறநெறிப்பாசாலை, அளவெட்டி காமாட்சி அம்மன் அறநெறிப் பாடசாலை, நீர்வேலி ஸ்ரீ முருகன் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வும் விசேட நிகழ்வாக செல்வி கதிரவேலு சிவயோகராணி யின் பக்திப்பாமாலையும் நடைபெறும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★

நல்லூர் முருகன் ஆலய மஹோற்சவத்தின் இருபத்தொராம் நாளாகிய இன்று திங்கட்கிழமை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 7.45 மணி வரை பாட்டுக் கச்சேரி நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பாட்டு திருமதி வாஸபதி ரஜீந்திரன், வயலின் செல்வி பாக்கியலட்சுமி நடராசா, மிருதங்கம் எஸ்.மகேந்திரன்,கெஞ்சிரா ஆர்.சிவராமன் ஆகியோர் அணிசெய் கலைஞர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★

நல்லூர் முருகன் ஆலய மஹோற்சவத்தின் இருபத்தொராம் நாளாகிய இன்று திங்கட்கிழமை நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் மாலை 6.30 மணிக்கு கந்தபுராணம் பற்றிய தெய்வீகத் தொடர் இசைப் பேருரை நடைபெறவுள்ளது.

இப்பேருரையில் பானுகோபன் வதம் எனும் தலைப்பில் நல்லைக்குருமணியின் பிரதம வாரிசு கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்தசர்மா சொற்பொழிவாற்றுவார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★

நல்லூர் முருகன் ஆலய மஹோற்சவத்தின் இருபத்தொராம் நாளாகிய இன்று திங்கட்கிழமை நல்லூர் வடக்கு வீதியிலமைந்துள்ள நடராசா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் மாலை 6.30 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை தெய்வீக பேருரைகளும் கலைநிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் அச்சது பொடி செய்த அதிதீரா எனும் தலைப்பிலான சிறப்பு சொற்பொழிவினை விகடகவி மு.திருநாவுக்கரசு ஆற்றுவார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★

நல்லூர் முருகன் ஆலய மஹோற்சவத்தின் இருபத்தொராம் நாளாகிய இன்று திங்கட்கிழமை நல்லூர் மனோன் மணி அம்மன் ஆலய மண்டபத்தில் மாலை 6.45 மணிக்கு பிரதீபனின் இசைக்கச்சேரி நடைபெறும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★

நல்லூர்முருகன்ஆலய மஹோற்சவத்தின் இருபத்தொராம் நாளாகிய இன்று திங்கட்கிழமை நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள மகேஸ்வரன் மணி மண்டபத்தில் மாலை 7 மணி தொடக்கம் இரவு 7.45 மணி வரை ஆன்மீக அருளுரைகள் நடைபெறும்.

இந்நிகழ்வில் வெற்றிக்கு வழிகள்! வேலவனது திருவடிகள்!! எனும் தலைப்பிலான ஆன்மீக அருளுரையை பிரம்மச்சாரி ஜாக்ரத் சைதன்யா ஆற்றுவார். தொடர்ந்து சிவகுமார் கஜவதனனின் தமிழ் இசைக் கச்சேரி இடம்பெறும். இந்நிகழ்விற்கு மிருதங்கம் தமிழ் நாடு எஸ்.சத்தியநாராயணன், கடம் தமிழ்நாடு எஸ்.ஹரிஹரிசுப்ரமணியம் ஆகியோர் அணிசெய் கலைஞர்களாக கலந்து கொள்ளவுள்ளனர். (ந-9)

# உலகத் தமிழ்க்கல்வி மாநாடு சென்னையில் நடத்த ஏற்பாடு

## உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் நடத்துகிறது

(கொழும்பு)

உலகின் பல நாடுகளிலும் கிளைகளைக் கொண்டு இயங்கும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் ஏற்பாடு செய்துள்ள உலகத் தமிழ்க் கல்வி மாநாட்டை எதிர்வரும் 25,26 ஆம் திகதிகளில் சென்னையில் நடத்துவதற்கு மேற்படி இயக்கத்தின் தலைமைப்பீடம் நேற்று முன்தினம் முடிவெடுத்துள்ளது.

ஏற்கனவே புதுச்சேரியில் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டு அதற்குரிய ஏற்பாடுகள் அனைத்தும் திருப்திகரமாக செய்யப்பட்டிருந்த வேளையில் மாநாட்டை புதுச்சேரியில் நடத்துவதிலும் பார்க்க சென்னையில் நடத்துவதே சிறந்தது என்று பல நாட்டுக் கிளைகள் கேட்டுக் கொண்டமைக்கு ஏற்ப இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக உலகத் தமிழ் கல்வி மாநாட்டின் பொறுப்பாளரும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் கல்வித்துறை பொறுப்பாளருமான கனடா வாழ் வி.எஸ். துரைராசா தெரிவித்துள்ளார்.

மேற்படி இடமாற்றம் தொடர்பாக எழுந்துள்ள சில அவசியமான பணிகளை கவனிப்பதற்காக வி.எஸ். துரைராசா சென்னை சென்றுள்ளார்.

அங்கு அவர் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் சென்னை கிளையின் முக்கியஸ்தர்களோடு சேர்ந்து மாநாடு சிறப்பாக நடப்பதற்கு தேவையான பணிகளைக் கவனிப்பார் என்று கூறப்படுகின்றது.

மேலும் சென்னையில் நடைபெறவுள்ள உலகத் தமிழ்க்கல்வி மாநாடு தொடர்பாக இலங்கையில் செய்ய வேண்டிய சில பணிகளை ஆற்றுவதற்காக உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் நாயகம் ஜேர்மனி வாழ் துரை கணேசலிங்கம் ஏற்கனவே இலங்கை வந்துள்ளார்.

அவர் அங்கு தமிழ் அறிஞர்கள், கல்விமான்கள் ஆகியோரையும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்து மாநாட்டுக்கான அவர்களின் ஆதரவை பெற்றுக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

மேற்படி மாநாட்டின் ஏற்பாட்டுக் குழுவில் முக்கிய உறுப்பினர்களாக செயற்படும் சண்முகம்(மலேசியா), ஆர்.இராஜசூரியர் (ஜேர்மனி), மிக்கி செட்டி (தென்னாபிரிக்கா), ஆர். என்.லோகேந்திரலிங்கம் (கனடா), விசு செல்வராஜா (பிரான்ஸ்), எஸ். தியாகலிங்கம் (நோர்வே), தலைவர் வேல் வேலுப்பிள்ளை (கனடா) ஆகியோரும் இன்னும் சில நாட்களில் சென்னைக்கு பயணமாவார்கள் என்றும் வி.எஸ்.துரைராசா தெரிவித்துள்ளார். (ந-2)

# 6 இலட்சம் பெறுமதியான சிகரெட்டுகளுடன் கட்டுநாயக்கவில் ஒருவர் கைது

(கொழும்பு)


பாகிஸ்தானில் இருந்து இலங்கைக்கு சட்டவிரோதமான முறையில் கொண்டு வரப்பட்ட 6 இலட்சம் ரூபா பெறுமதியான சிகரெட் தொகையை கைப்பற்றியுள்ளதாக கட்டுநாயக்க சுங்க அதிகாரி ஜி.ஜி.பிரேமசிறி தெரிவித்துள்ளார்.

சார்ஜாவில் இருந்து வந்த விமானத்தில் பயணித்த பிரஜை ஒருவரே நேற்று அதிகாலை 4.30 அளவில் சிகரெட் தொகையுடன் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட நபர் வெல்லம்பிட்டிய பகுதியைச் சேர்ந்த 34 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் தொடர்பில் கட்டுநாயக்க சுங்க அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-2)

# நல்லூரான் திருவடிக்கு

## இன்று இருபத்தொராம் திருவிழா



## வினை போக்கிடும் வெற்றி வேலா



நல்லை நகரிலே
வீற்றிருக்கும்
நல்லைக்குமரா
முள்ளிவாய்க்காலில்
மடிந்த உயிர்களுக்கு
எப்போ விடிவு?...

*ப.காயத்திரி, யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி*

## குறை தீர்க்கும் குமரா...



நல்லை நகரிலே
அருள் பாலிக்கும்
நல்லைக்குமரா
பக்தர்கள் குறை தீர்க்க
புள்ளி மயிலேறி
வருக வருக...

*ப.காயத்திரி, மட்டுவில்.*

## வேறென்ன வேண்டுமிவ் வையகத்தே!



ஆறு திருமுகமும் பன்னிரு கரமும்
அழகிய விழியும்
நீறிட்ட நெற்றியில் வெற்றித் திலகமும்
மணிமுடியும்.
மாறுபடு சூரனை வதைத்த
வெற்றி வேலும் மணி மயிலும்
காணப்பெற்றால்
வேறென்ன வேண்டுமிவ் வையகத்தே...?

*ம.தவமணி.*

## வள்ளலே வாசம் செய்வீர்





தரிசி நெஞ்சில் தரிசி
பரிசி அன்பில் பரிசி
பூசிக்க கீர்த்திக்க
பூச்சூடிப் பார்த்துக்க
நல்லை கந்தனை நாடுவோம்
சொல்லை எந்தனை கூறுவோம்
குமரன் நல்ல வழி சமைக்க
கரம்பன் மெல்ல பொடி பறக்க
வந்தனம் செய்வோம்
வள்ளலே வாசம் செய்வீர்

*சி.ஜெகன், பெரியபுலோ.*

## சுந்தர வேலா நல்வரம் தாருமையா

முக்கண்ணன் நெற்றிக் கண் பொறியே
சரவணப் பொய்கையில் பிறந்தவனே
பங்கஜ மலர்கள் மீது தவழ்ந்தவனே
கார்த்திகைப் பெண்கள் மடியில் வளர்ந்தவனே
பார்வதி அன்னை அணைப்பில் ஆறுமுகமானவனே
ஊர் போற்றும் நல்லையம்பதியில் வீற்றிருப்பவனே
வார்த்தைகள் அடங்கா புகழ் பூத்த சுந்தரவேலா
பார் போற்றும் நல்லைக்கந்தா நல்வரம் தாருமையா

*த.கிருஷ்ணதாஸ், நல்லூர்.*






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டதாரி பயிலுநர் நியமனங்கள் குறித்து அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும்

## வேலையற்ற பட்டதாரிகள் சங்கத் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஆறு மாத கால பயிற்சியின் பின் பட்டதாரிகளின் நிலையானது கேள்விக் குறியாகவே காணப்படுகின்றது. ஆறு மாதகால பயிற்சி பெற்ற அனைவருக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படுமா? என்பது பற்றி இதுவரை எந்த உறுதிப்பாடும் வழங்கப்படவில்லை. இந் நிரந்தர நியமனம் தொடர்பாக மிகவிரைவில் அரசு பட்டதாரி பயிலுநர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என்பதோடு அவ்வாறு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டால் அது எவ்வித முறைகேடோ அரசியல் தலையீடோ இன்றி ஆண்டடிப்படையில் வழங்கப்பட வேண்டுமென பட்டதாரிகள் எதிர்பார்க்கின்றனர் என வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் தம்மிக்க முனசிங்க தெரிவித்துள்ளார்.

பட்டதாரி பயிலுநர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தற்போது இலங்கை பூராகவும் பட்டதாரிகளுக்கு ஆறு மாத காலம் பயிலுநர் பட்டதாரியாக நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதில் சில மாவட்டங்களில் ஆறு மாத காலப்பயிற்சி முடிவடையும் தறுவாயில் உள்ளன. சில மாவட்டங்களில் ஆறு மாத காலப்பயிற்சி முடிவடைந்துள்ளன.

இந்நிலையில் இப்பயிலுநர் பட்டதாரிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளாவன,

1. பயிற்சிக்காலத்தில் மாதம் ஒன்றிற்கு வழங்கப்படும் 10 ஆயிரம் ரூபாவானது அடிப்படைத் தேவைகள், போக்குவரத்துக்கு போதுமானதாக இல்லாதிருக்கும் போது அவர்களை வெளிக்கள பணியாளர்களாக அனுப்பும் போது அவர்களின் போக்குவரத்து செலவுகளால் செலவுகள் இரட்டிப்பாகின்றன. இதனால் பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

2. அதுமட்டுமன்றி குறிப்பாக சில மாவட்டங்களில் அக்கொடுப்பனவுகள் உரிய நேரத்திற்கு இதுவரை வழங்கப்படவில்லை.

3. பட்டதாரிகள் பயிற்சிக்காக அனுப்பப்பட்ட சில அலுவலகங்களில் அவர்கள் தரக்குறைவாக நடத்தப்படுகின்றனர். அதாவது அவர்களை சக ஊழியராக நோக்காமல், பழகாமல் அவர்களை தனிமைப்படுத்தும் நிலையும் சில நேரங்களில் கேலிகளுக்கும் உள்ளாகின்றனர். இதனால் பட்டதாரிகள் உடல் ரீதியாகவும் பாதிக்கப்படுகின்றனர்.

4. சில அலுவலகங்களில் பயிற்சி நெறிக்கு சம்பந்தம் இல்லாத விடயங்களில் பட்டதாரிகள் பயன்படுத்தப்படுகின்றனர். இதனால் அவர்களது கௌரவம் பாதிக்கப்படுகின்றன.

5. சில அரசியல்வாதிகள் தங்களது அரசியல் தேவைக்காக பட்டதாரிகளை பயன்படுத்த முற்படுகின்றனர்.

அதாவது தற்போது இடம்பெறவுள்ள மாகாண சபைத் தேர்தலுக்காக பயிலுநர் பட்டதாரிகளின் நிரந்தர நியமனம் தொடர்பாகவும் அரசியல் இலாப பிரசாரங்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

6. ஆறுமாத கால பயிற்சியின் பின் பட்டதாரிகளின் நிலையானது கேள்விக் குறியாகவே காணப்படுகின்றது. ஆறுமாத கால பயிற்சி பெற்ற அனைவருக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படுமா என்பது பற்றி இதுவரை எந்த உறுதிப்பாடும் வழங்கப்படவில்லை.

இந்நிரந்தர நியமனம் தொடர்பாக மிக விரைவில் அரசு பட்டதாரி பயிலுநர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என்பதோடு அவ்வாறு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டால் அது எவ்வித முறைகேடோ அரசியல் தலையீடோ இன்றி ஆண்டடிப்படையில் வழங்கப்பட வேண்டும் என பட்டதாரிகள் எதிர்பார்க்கின்றனர் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (ந-2)

## கொக்குவில் பகுதியில் திருடன் பிடிக்கப்பட்டான்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பகுதியிலுள்ள வீடொன்றில் உள்நுழைந்து திருட முயன்ற திருடனை அப்பகுதி அயலவர்கள் மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் இடம்பெற்றது. வீட்டினுள் யாரும் இல்லாத நேரம் பார்த்து வீட்டு வளவினுள் இறங்கிய திருடன் அங்கு திருட முயற்சித்துள்ளான்.

என்னும் அயலவர் ஒருவர் குறித்த திருடனைக் கண்டுபிடித்ததோடு கள்ளன் கள்ளன் எனக்கூச்சலிட்டுள்ளார்.

கூக்குரல் கேட்ட அயலவர்கள் அவ்விடத்தில் சென்று கூடி குறித்த திருடனை மடக்கிப் பிடித்துள்ளனர். பிடிபட்ட திருடனுக்கு உரிய கவனிப்புகள் வழங்கப்பட்டு யாழ். பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டான்.

பொலிஸ் விசாரணையின் மூலம் குறித்த திருடன் பிரபல சைக்கிள் திருடன் எனத் தெரிய வந்துள்ளது. (ந-4)

## "இயற்கையின் வலிமையூடான ஒருமைப்பாடு" நிகழ்ச்சித் திட்டம் யாழில் ஆரம்பம்

இலங்கை கள பறவையியல் குழு (Fogsl) விலங்கியல் துறை கொழும்பு பல்கலைக்கழகத்தின் வழிகாட்டலின் கீழ் இலங்கை நண்பர்களுக்கான நோர்வே மன்றத்தின் அனுசரணையுடன் கல்வி அமைச்சினால் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் ஆகியவற்றின் பங்களிப்புடன் சிறுவர் மகிழ்வகம் இயற்கையின் வலிமையூடான ஒருமைப்பாடு என்ற நிகழ்ச்சித் திட்டத்தை யாழ்.மாவட்டத்தில் பாடசாலைகள், சிறுவர் கழகங்களுக்கிடையே நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இத்திட்டத்தின் ஒரு பிரதான பகுதியாக சிங்கராஜவனத்தில் நடைபெறும் இயற்கை இயலாய்வு பயிற்சி முகாமில் இதுவரை நான்கு பாடசாலைகள் பங்கேற்றுள்ளன.

ஐந்தாவது தடவையாக யா/திருக்குடும்பக் கன்னியர்மடம், யா/சென் ஜோன்ஸ் கல்லூரி, கொழும்பு ரேஸ்ரன் கல்லூரி, கம்பஹா ரன்நாவலி பாலிகா வித்தியாலயம், எக்கல ஜி.வி.சேனாநாயக்க வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள், ஆசிரியர்கள் நேற்றைய தினம் தமது பயணத்தை ஆரம்பித்துள்ளனர், இவர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதி புதன்கிழமை மீண்டும் தமது நிகழ்ச்சித் திட்டத்தை முடித்துக் கொண்டு திரும்பவுள்ளனர்.

இவ்வாய்வு முகாமினை கொழும்பு பல்கலைக்கழகத்தின் கள பறவையியல் குழுவின் காப்பாளரும் இலங்கை விஞ்ஞான சங்கத் தலைவரும் விலங்கியல் துறை பேராசிரியருமான சரத் கொட்டகம நெறிப்படுத்துவார் என இணைப்பாளர் ஸ்ரீ.கஜன் அறிவித்துள்ளார். (ந-2)

## பாதிக்கப்பட்டுள்ள வன்னி விவசாயிகளுக்கு அரசாங்கம் நட்டஈட்டை வழங்க வேண்டும்

## செல்வம் எம்.பி. கோரிக்கை

(கொழும்பு)

அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஏற்றுமதி விவசாய நெற்பயிர்ச் செய்கை வன்னி மாவட்டத்திலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள போதும் வன்னி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கடும் வரட்சியின் காரணத்தினால் நீருக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் வன்னி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள பல ஏக்கர் கணக்கான நெற்பயிர்ச் செய்கை அழிவடையும் நிலை ஏற்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் விவசாய அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வரும் வகையில் நேற்று முன்தினம் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,


அரசாங்கத்தினால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஏற்றுமதிக்கான நெற் பயிர்ச்செய்கை திட்டத்தின் கீழ் வன்னி மாவட்டமும் தெரிவு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் வன்னி மாவட்டத்தில் பல ஏக்கர் கணக்கில் குறித்த நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனினும் வன்னி மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள கடும் வரட்சியின் காரணமாக நீருக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக பல ஏக்கர் கணக்கில் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிர்ச்செய்கை அழிவடையும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் பல்வேறு துயரங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

அரசாங்கத்தை நம்பி வன்னி மாவட்ட விவசாயிகள் பல ஏக்கர் கணக்கில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

எனவே, பாதிக்கப்பட்டுள்ள வன்னி மாவட்ட விவசாயிகளுக்கு உடன் அரசாங்கம் நட்டஈட்டை வழங்க வேண்டும் எனவும் எஞ்சியுள்ள நெற்பயிர்ச் செய்கையினை காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-2)



யுத்த காலத்தின் போது பல்வேறு காரணங்களால் வலுவிழந்தோர்களுக்கு தகவல் தொழில்நுட்ப பயிற்சிகளை வழங்குவதற்கு வவுனியா, தவசிகுளம் பிரதேசத்தில் அமைந்துள்ள வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிலையம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்நிலையில் குறித்த நிலையத்தில் தகவல் தொழில்நுட்ப பயிற்சிகளை பெறுபவர்களை படத்தில் காணலாம்.

## "காலணிகளை வெளியில் கழற்றவும்" இந்த வாசகம் இங்கு வேண்டாமே!

(றெட்பானா)

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட சிகை அலங்கார நிலையங்களில் காலணிகளை வெளியில் கழற்றவும் என ஒட்டப்பட்டு வரும் வாசகங்கள் ஏற்புடையதாக இல்லை என சிகை அலங்கார நிலையங்களுக்கு செல்வோர் விசனம் அடைந்து வருகின்றனர்.

அத்துடன் சிகை அலங்கார நிலையங்களுக்கு செல்பவர்கள் இவ்வாறு காலணிகளைக் கழற்றுவது அவர்களின் சுகாதாரத்திற்கு நன்மை பயக்குமா என கேள்வி எழுப்பி வருகின்றார்கள்.

இந்நிலையங்களில் பாவிக்கப்படும் துணிகள் பழைய துணிகளாகவும் தூய்மையற்றதாகவும் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, உரிய தரப்பினர் சிகை அலங்கார நிலையங்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டு அனைத்து நிலையங்களும் பொதுவான சுகாதார கொள்கைகளுக்கு அமைவாக செயற்படு[illegible] அலங்கார நிலையங்களுக்கு செல்வோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ந-3-260)

## தனியார் பேருந்துகளில்

## ஆசனப் பயணிகளிடம் அதிக பணம் அறவிடப்படுகிறதா?

(மிருசுவில்)


தனியார் பேருந்துகளில் ஆசனத்தில் அமர்ந்த பயணிகளிடம் இடத்துக்குரிய பணத்தை அறவிடாது மேலதிகமாக அறவிடுவதாக பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிவரும் தனியார் பேருந்துகளில் ஆசனத்தில் அமர்ந்த பயணிகள் இடையில் உள்ள இடங்களில் இறங்கியபோதிலும் யாழ்ப்பாணம் வரை செல்வதற்கேற்ற பணத்தையே அறவிடுகின்றனர்.

இதனால் தனியார் பேருந்து நடத்துநர்களுக்கும் பயணிகளுக்குமிடையே தினசரி வாய்த்தர்க்கம் ஏற்படுகின்றமையால் பல விபரீதங்களை எதிர்கொள்ள வேண்டிய அவல நிலை உள்ளது. எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு அந்தந்த இடத்திற்கேற்ற பணத்தை பயணிகளிடம் இருந்து பெறுவதற்கு ஆவன செய்யுமாறு பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ந-3-85)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மும்பையில் பயங்கர கலவரம்! 2 இளைஞர்கள் பலி; 55 பேர் படுகாயம்





அசாம் மாநிலத்தில் நடைபெறும் வன்முறையை கண்டித்து மும்பையில் முஸ்லிம்கள் நடத்திய போராட்டமும் கலவரமாக மாறியதில் 2 பேர் உயிரிழந்தனர். மேலும் 55 பேர் படுகாயமடைந்தனர்.

முஸ்லிம்கள் மீதான தாக்குதலைக் கண்டித்து மும்பை ஆசாத் மைதானத்தில் நேற்று முன்தினம் பிற்பகலில் ரசா அக்டமி என்ற அமைப்பினர் போராட்டம் நடத்தினர்.

இந்த போராட்டத்தில் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர். அமைதியான முறையில் நடைபெற்ற போராட்டத்தில் திடீரென வன்முறை வெடித்தபோது போராட்டக்காரர்களில் சிலர் பாதுகாப்பிற்கு வந்திருந்த பொலிஸார் மீது கற்களை வீசி தாக்கியதோடு அங்கிருந்த வாகனங்களைத் தீயிட்டும் கொளுத்தினர்.

நிலைமையை கட்டுப்பாட்டினுள் கொண்டுவர தடியடி நடத்திய பொலிஸார் பின்னர் வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டு எச்சரித்தனர். கலவரக்காரர்கள் அப்போதும் கலைந்து செல்லாததால் பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் 2 இளைஞர்கள் உயிரிழந்தனர். 55 பேர் படுகாயம் அடைந்தனர்.

இதனிடையே இந்த வன்முறைக்கும் தங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று ரசா அகடமியின் பொதுச் செயலாளர் முகமது சயீத் கூறினார்.

போராட்டம் நடைபெற்றபோது யாரோ சிலர் திடீரென உள்ளே புகுந்து வன்முறையில் ஈடுபட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை அசாம் மாநிலத்திற்கு இன்று மீண்டும் சோனியா செல்ல உள்ளார். கலவரத்தில் பாதிக்கப்பட்ட கோக்ராஜ்கர் மாவட்டத்திற்கு சென்று பார்வையிடவுள்ளார். இம்மாநிலத்தில் தற்போது முதல்வர் தருண்கோபொய் தலைமையிலான காங்கிரஸ் ஆட்சி நடக்கிறது. ஆட்சியின் மீது மக்கள் அதிருப்தியுடன் உள்ளதாக கூறப்படுகிறது. அசாமில் ஏற்பட்டுள்ள பல்வேறு சிக்கல்களுக்கு தீர்வு காணவும் நிலைமையை கட்டுப்படுத்தவும் மீண்டும் சோனியா செல்ல உள்ளதாக காங்கிரஸ்வட்டாரங்கள்தெரிவிக்கின்றன. (ந-2)

# சிரியாவின் போராட்டம் குறித்து துருக்கியுடன் ஹிலாரி ஆலோசனை



சிரிய பிரச்சினை குறித்து துருக்கி அரசுடன் ஆலோசனை நடத்த அமெரிக்க வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் துருக்கி சென்றுள்ளார்.

ஆபிரிக்காவில் 9 நாடுகளில் 11 நாட்கள் சுற்றுப் பயணம் மேற்கொண்ட பின் ஹிலாரி நேற்று முன்தினம் துருக்கி சென்றடைந்துள்ளார்.

துருக்கி ஜனாதிபதி அப்துல்லா குல் பிரதமர் ரிசெப் டாயிப் எர்டோகன் வெளிவிவகாரத்துறை அமைச்சர் அஹ்மத் தாவுடோக்லு ஆகியோருடன் ஹிலாரி ஆலோசனை நடத்துவார். இந்த ஆலோசனைக் கூட்டத்தில் சிரிய எதிர்க்கட்சியினர் மற்றும் அகதிகளும் பங்கேற்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சிரியாவுக்கு எதிராக ஐ.நாவில் கொண்டுவரப்பட்ட 3 தீர்மானங்களை ரஷ்யாவும் சீனாவும் வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தித் தடுத்து விட்டதால் அடுத்த கட்ட ஆலோசனையில்அமெரிக்காஇறங்கியுள்ளது.

மூன்று வியூகங்கள் குறித்து விவாதிக்கப்படவுள்ளதாக அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார். சிரியா ஜனாதிபதியின் எதிர்த்தரப்பை ஆதரிப்பதால் ஏற்படும் பயன்கள் குறித்து மதிப்பீடு செய்வது, சிரியா அரசை தனிமைப்படுத்தி அழுத்தம் தருவது, சிரியாவில் இருந்து வெளியேறும் அகதிகள் துருக்கியில் தஞ்சமடைவதால் துருக்கிக்கான மனிதாபிமான உதவிகளை அதிகரிப்பது குறித்தும் விவாதிக்கப்படவுள்ளது.

50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிரிய அகதிகள் துருக்கியில் தஞ்சமடைந்துள்ளனர். துருக்கிக்கு கூடுதலாக 55 இலட்சம் அமெரிக்க டொலர் நிதியுதவியை ஹிலாரி அறிவிப்பார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (ந-2)

# ஈரானில் கடுமையான நிலநடுக்கம்; நான்கு கிராமங்கள் தரைமட்டமாகின



ஈரானில் 11 நிமிட இடைவெளியில் 2 முறை ஏற்பட்ட நிலநடுக்கத்துக்கு 250 இற்கும் மேற்பட்டார் உயிரிழந்தனர். ஈரானின் கிழக்கு அஜர்பைஜான் மாகாணத்தில் உள்ள ஆஹறார், ஹாரிஸ், வர்சாகான் ஆகிய நகரங்களை நேற்று முன்தினம் மாலை 4.53 மணிக்கு நிலநடுக்கம் உலுக்கியது.

இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.2 புள்ளிகளுக்கும் மேல் பதிவானதாக தெஹ்ரான் பல்கலைக்கழகத்தின் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நிலநடுக்கத்தால் 250 பேர் வரை இறந்ததாகவும் ஆயிரத்து 500 பேர் காயமடைந்ததாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். இந் நிலநடுக்கங்களால் 60 கிராமங்கள் பலத்த சேதமடைந்தன. 4 கிராமங்கள் ஒட்டுமொத்தமாகத் தரைமட்டமானதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. நிலநடுக்கத்தைத் தொடர்ந்து மேற்கண்ட நகரங்களில் 5 முறை சிறிய அளவில் நில அதிர்வுகள் உணரப்பட்டன.

இதனால் பீதியில் உறைந்த மக்கள் வீடுகளை விட்டு அலறி அடித்த படி வெளியில் ஓடிவந்தனர். நில அதிர்வுகள் அதிகம் உணரப்பட்ட டப்ரிஸ் நகரத்தில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. மின் விநியோகம் தடைப்பட்டுள்ளது. உலங்குவானூர்திகள் மூலம் மீட்புப் பணி முடுக்கிவிடப்பட்டுள்ளது. (ந-2)

# பிலிப்பைன்ஸில் அதிகளவு வெள்ளம்; 20 இலட்சத்திற்கும் அதிகமானோர் பாதிப்பு



பிலிப்பைன்ஸ் நாட்டில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 66 ஆக உயர்ந்துள்ளது. 20 இலட்சத்துக்கும் அதிகமானோர் வீடுகளை இழந்து பாதிக்கப்பட்டுள்ளனர்.

பிலிப்பைன்ஸில் கடந்த 2 வாரங்களாகப் பெய்து வரும் தொடர் மழையால் நாடு முழுவதும் பெருவெள்ளம் பெருக்கெடுத்துள்ளது.

தலைநகர் மணிலாவின் 80 சதவீத பகுதிகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு காணப்பட்டிருந்தது.

இந்நிலையில் வெள்ளத்தை தொடர்ந்து முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்த மக்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்ப ஆரம்பித்துள்ளனர். இதற்கிடையே வெள்ளத்தால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 66 ஆக உயர்ந்துள்ளது.

நிவாரண முகாம்களில் 4 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்ப இன்னும் 7 நாட்களாவது ஆகும் என கருதப்படுகிறது. (ந-2)

# சுதந்திர தினத்தை சீர்குலைக்க தீவிரவாதிகள் சதித் திட்டம்

## பொலிஸார் உசார்நிலை

(அகமதாபாத்)

இந்தியாவின் சுதந்திரதினக் கொண்டாட்டங்கள் நாளை மறுதினம் புதன்கிழமை கோலாகலமாக நடைபெறவுள்ளது. சுதந்திர தின கொண்டாட்டத்தை சீர் குலைக்கும் வகையில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் நாசவேலையில் ஈடுபடலாம் என்று மத்திய உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதையடுத்து நாடு முழுவதும் மாநில அரசுகள் உஷார்படுத்தப்பட்டு உள்ளன. இதற்கிடையே குஜராத் மாநிலத்தில் நாசவேலை சதித் திட்டத்துடன் பாகிஸ்தானைச் சேர்ந்த லக்ஷர்-இ-தொய்பா தீவிரவாதிகள் 3 பேர் ஊடுருவி இருப்பதாக உளவுத்துறைக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளது.

இந்தியாவின் ஏதாவது ஒரு பகுதியில் இருந்து விமானத்தை கடத்தி தாக்குதலில் ஈடுபடலாம் என்ற அச்சம் எழுந்துள்ளது. இதைத் தொடர்ந்து நாடு முழுவதும் உள்ள விமான நிலையங்களில் பாதுகாப்பு படையினர் உஷார்படுத்தப்பட்டுள்ளனர்.

விமான பயணிகள் மற்றும் அவர்களது உடைமைகள் கடுமையாக பரிசோதிக்கப்பட்ட பின்னரே அனுமதிக்கப்படுகிறார்கள். பார்வையாளர்களுக்கும் கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது. விமான நிலையத்திற்கு வரும் வாகனங்கள் கடுமையாக சோதனையிடப்படுகிறது.

இதேபோல் அகமதாபாத்தின் முக்கிய இடங்களிலும் வழிபாட்டுத் தலங்களிலும் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களிலும் கூடுதல் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

இதற்கிடையே குஜராத்தில் ஊடுருவிய தீவிரவாதிகள் அங்கிருந்து வெளியேறி டில்லிக்குள் பதுங்கி இருக்கலாம் என்றும் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இதைத்தொடர்ந்து டில்லியிலும் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. (ந-2)

# ஹக்கானிக்கு எதிரான சட்டம்; பராக் ஒபாமா கையெழுத்து

(வோஷிங்டன்)

பாகிஸ்தானிலிருந்து செயற்படும் ஹக்கானி இயக்கத்தை வெளிநாட்டு பயங்கரவாத அமைப்பாக அறிவிப்பது குறித்து வெளியுறவுத்துறை தீர்மானிப்பதற்கு வகை செய்யும் சட்டத்தில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கையெழுத்திட்டார்.

ஹக்கானிக்கு தடை விதிப்பது தொடர்பான சட்டத்துக்கு அமெரிக்க நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் சமீபத்தில் ஒப்புதல் வழங்கின.

அமெரிக்க வீரர்கள் பலியாவதைத் தடுக்கும் பொருட்டு இந்த சட்டத்துக்கு ஒபாமா உடனடியாக ஒப்புதல் வழங்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினரும் புலனாய்வுக்கான நிரந்தர நிலைக்குழு தலைவருமான மைக் ரோஜர்ஸ் கூறியிருந்தார்.

இதையடுத்து இந்த சட்டத்தில் ஒபாமா வெள்ளிக்கிழமை கையெழுத்திட்டதாக தகவல்கள் கூறுகின்றன.

ஹக்கானிக்கு உதவி செய்வதாகக் கூறப்படும் குற்றச்சாட்டை மறுத்து வரும் பாகிஸ்தான் அந்த அமைப்புக்கு எதிராக தாக்குதல் நடத்த வேண்டும் என்ற அமெரிக்காவின் கோரிக்கையைப் புறக்கணித்து வருவது குறிப்பிடத்தக்கது. (ந-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்கள் நமது சிந்தனையின் உடைகள் அவற்றை கந்தல்களாகவும், கிழிசல்களாவும்,அழுக்காகவும் உடுத்தக்கூடாது. *– செஸ்டர் ஃபீல்ட்*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# வேர்விட்ட மண்ணில் வேறுபட்ட கோலம் வேண்டாம்!

புலம்பெயர்ந்து வாழுகின்ற எங்கள் உறவுகளில் கணிசமான அளவினர் தாய்மண்ணுக்கு வந்திருப்பதைக் காண்பது மட்டற்ற மகிழ்ச்சி.

தாய் மண்ணை மறக்காத– யுத்தத்தின்போது எங்கள் உயிர்ப்புக்காகக் குரல் கொடுத்த இரத்த உறவுகளைச் சந்திக்கும்போது ஆனந்தமடையாமல் இருக்க முடியாது.

நல்லூர்க் கந்தனின் மகோற்சவத்தைக் கண்டுகளிக்கும் நோக்கமும், தாய்மண்ணைத் தரிசிக்கும் ஆவலும், பெற்றோரை, சகோதரங்களை, உறவுகளைச் சந்திக்கும் ஆனந்தமுமாக இங்கு வருகின்ற எங்கள் புலம்பெயர் உறவுகள் தங்கள் ஆடைக் கலாசாரத்தை – அலங்காரத்தை எங்கள் மண்ணின் பண்பாட்டிற்கும் – வாழுமிடத்திற்கும் அமைவாக ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது அனைவரதும் விருப்பமாகும்.

வெளிநாடுகளில் இருந்து வருகின்ற எங்கள் உறவுகளின் தாய் தந்தையர்கள் இந்த மண்ணில் வித்தாகி வேர்விட்டவர்களாக இருக்கின்ற அதேநேரம் அவர்களின் பிள்ளைகள் வெளிநாடுகளில் பிறந்தவர்களாக – அந்த நாட்டுக் கலாசாரத்திற்கு பழக்கப்பட்டவர்களாக இருக்கின்றனர் என்பது யதார்த்தமானது.

எனினும் தாய் மண்ணிற்கு வருகின்றபோது எங்கள் இனத்தின்– எங்கள் தமிழ் மண்ணின் பண்பாட்டிற்கு ஏற்புடையதாக ஆடைகளை, அலங்காரங்களைச் செய்து கொள்வதை இந்த மண்ணில் வேர்விட்டவர்கள் மறந்து விடலாகாது.

வெளிநாட்டில் பிறந்து வளர்ந்த பிள்ளைகளை எப்படி இந்த மண்ணின் கலாசாரத்திற்குப் பழக்கப்படுத்துவது என்ற கேள்வி நியாயமானதாயினும், இடம், பொருள், ஏவல் அறிந்து செயற்படுதல் என்பது இன்றைய காலகட்டத்தில் மிகவும் முக்கியமானது என்பதையும் ஏற்றுத்தான் ஆக வேண்டும்.

வெளிநாட்டுக்குச் சென்ற எங்கள் உறவுகளில் சிலர் அந்த நாட்டுப் பெண்களை திருமணம் செய்திருப்பதை காணமுடிகின்றது.

இவர்களில் சிலர் குடும்பமாக இங்கு வந்துள்ளதுடன் நல்லூர் மகோற்சவத்திலும் கலந்து கொண்டுள்ளனர்.

வெளிநாட்டில் பிறந்த வெள்ளைக்காரப் பெண்கள் தமிழ்ப் பண்பாட்டிற்கு ஏற்ப சேலை கட்டி தமிழ்ப் பெண்போல ஆலயத்திற்கு வந்திருப்பதைப் பார்த்தபோது நெஞ்சம் நெகிழ்ந்து கொண்டது.

அவர்களால் இப்படிச் செய்யமுடியும் என்றால், தமிழ்ப் பெற்றோர்களின் பிள்ளைகளால் தமிழ்க் கலாசாரத்தை பின்பற்றுவது முடியாத காரியமா என்ன?

அன்புக்குரிய புலம்பெயர் உறவுகளே!

உங்களின் இருப்பு எந்த நாடாகவும் இருக்கட்டும். ஆனால் உங்கள் பிள்ளைகள், பிள்ளைகளின் பிள்ளைகள் எங்கள் இரத்த உறவுகள்.

உங்களுக்குப் பின் அவர்களின் உறவை வேறறுக்க நாம் ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

ஆகவே, வேர்விட்ட உங்கள் மண்ணுக்கு நீங்கள் வருகின்றபோது வேறுபட்ட கோலத்தை தூக்கி எறியுங்கள். இது எங்கள் அன்புரிமையுடன் கூடிய கோரிக்கை.

# கூட்டமைப்பு மீதான அச்சுறுத்தல்களின் பின்னணியில் சந்திரகாந்தனின் ஆட்கள்

## அரியநேத்திரன் எம்.பி.குற்றச்சாட்டு

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களுக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல்களின் பின்னணியில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் முன்னாள் முதலமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தனின் ஆட்கள் இருக்கின்றனர். இவர்களின் அச்சுறுத்தல் நடவடிக்கைகளுக்கு ஆதரவாக படையினரும் இருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் குற்றஞ்சாட்டினார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் இல்லத்தில் நேற்றையதினம் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

எதிர்வரும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தோல்வியைச் சந்திக்கவுள்ள இவர்கள் எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களுக்கு அச்சுறுத்தல்களை விடுத்து வருகின்றனர். கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்கான வேட்புமனுத்தாக்கல் செய்வதற்கு முதல் நாள் எமது தலைமை வேட்பாளர் துரைராஜசிங்கத்தின் வீட்டுக்கு பூட்டுப் போட்டதிலிருந்து இதுவரைக்கும் 9 வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

எமது கட்சி வேட்பாளர்கள் அச்சுறுத்தப்பட்டுள்ளதுடன் அவர்களின் உடைமைகள் சேதமாக்கப்பட்டுள்ளன. அவர்கள் பிரசார நடவடிக்கையில் ஈடுபடும் போதே அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ளனர். இவர்களின் தேர்தல் பிரசாரத்திற்கான துண்டுப்பிரசுரங்கள் பறிக்கப்பட்டுள்ளன. எமது கட்சியின் ஆதரவாளர் ஒருவர் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இவர்களின் அச்சுறுத்தல் நடவடிக்கைகள் தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளருக்கு நாங்கள் எழுத்துமூலம் அறிவித்துள்ளோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றியை சகிக்கமுடியாத இவர்கள் இதனைச் செய்கின்றனர் என்றார். (ந-2)

# வேட்பாளர் வானின் மீது கல்வீச்சுத் தாக்குதல்

இம்முறை கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு சார்பில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் பயணித்த வாகனம் மீது கல்வீச்சு நடத்தப்பட்டுள்ளது.

குறித்த வேட்பாளர் நேற்று முன்தினம் மாலை வெள்ளாவெளி பகுதியில் வான் ஒன்றில் பயணித்துக் கொண்டிருந்தபோது இனந்தெரியாத இருவர் கல்வீச்சு நடத்தியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதலினால் வானின் கண்ணாடி சேதமடைந்துள்ளதாக தெரிவித்த அவர், சம்பவம்தொடர்பாகவெள்ளாவெளி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஆளும் கட்சி வேட்பாளர் ஒருவரின் ஆதரவாளர்கள் இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கலாம் என சந்தேகிப்பதாக முறைப்பாட்டாளர் பொலிஸ் நிலையத்தில் தெரிவித்துள்ளதாகவும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கூறியுள்ளார். (ந-2)

# உடைமைகளை விற்று வன்னி மக்கள் படகுகளில் ஆஸி செல்கின்றனர்

## வன்னி மாவட்ட எம்.பி.சுட்டிக்காட்டு

இராணுவக் கெடுபிடி, முறையாக மீள்குடியமர்த்தப்படாமை, தொழில் இன்மை காரணமாகவே வன்னி மக்கள் எஞ்சியதமது உடைமைகளை விற்று உயிரையும் பணயம் வைத்து சட்டவிரோதமாகப் படகுகளில் அவுஸ்திரேலியாவுக்குச்செல்ல முயற்சிப்பதாக வன்னி மாவட்ட கூட்டமைப்பின் எம்.பியான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

கடந்த சில வாரங்களாக சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா செல்ல முயன்று மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஐந்நூறுக்கும் அதிகமானோர் கடற்படையினராலும் பொலிஸாராலும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வன்னி உட்பட வடக்கில் இராணுவத்தினரின் கெடுபிடி அதிகரித்து வருகின்றது. வீடுகளில் குடும்ப வைபவங்களை நடத்துவதாக இருந்தால்கூட இராணுவத்தினரின் அனுமதி பெறவேண்டிய அவல நிலை நிலவுகிறது. மேலும் மீள் குடியமர்த்தல் என்ற பெயரில் மக்களைச் சொந்த இடங்களில் குடியமர்த்தாமல் காட்டுப் புறங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளதால் பல குடும்பங்கள் வாழ்வாதாரங்களை இழந்துள்ளன.

லேும் பல குடும்பங்களுக்குச் சொந்தமான உழவு இயந்திரங்கள், வாகனங்கள், மோட்டார் சைக்கிள்களை மீளப்பெற முடியாதுள்ளது. இம்மக்கள் கண்முன்னே இராணுவம் பார்த்திருக்க தென்பகுதி வியாபாரிகள் இந்த வாகனங்களை இரும்புக்காக ஏற்றிச் செல்கின்றனர் வன்னி இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படுவதில்லை.

தொழில்வாய்ப்புக்கள் இன்றி அவர்கள் துன்புறுகின்றனர். மேற்கண்ட காரணங்களாலேயே வன்னி மக்கள் சட்ட விரோதமாகவேனும் வளமான எதிர்காலத்துக்காக உயிரையே பணயம் வைத்துப் படகுகளில் ஏறிப் பெருந்தொகைப் பணத்தைச் செலவிட்டு அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்குச் செல்ல முனைவதாக செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. தெரிவித்துள்ளார். (ந-2)

# இலங்கை உட்பட 8 நாடுகளுக்கு ஐ.நா. அமைப்பிலிருந்து நிதியுதவி

(கொழும்பு)

இலங்கை உட்பட 8 நாடுகளில் மனிதாபி மான நடவடிக்கைகளுக்காக 55 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஒதுக்கியுள்ளதாக ஐ.நா. அறிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தான், கமரூன், கொலம்பியா, கொங்கோ, ஜனநாயக குடியரசு, எத்தியோப்பியா, மடகஸ்கார், இலங்கை, சூடான் ஆகியனவே இந்நாடுகளுக்கு மத்திய அவசரகால பதிலளிப்பு நிதியத்திலிருந்து உணவு, தண்ணீர், சுகாதாரம் மற்றும் அடிப்படை சேவைகளுக்கு உதவுவதற்காக நிதி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அவசரமாக தேவையுள்ள மக்களை உதவி முகவரங்கள் அணுகுவதற்கு உதவுவதன் மூலம் இந்நிதியானது உயிர்களை காக்கும் என மனிதாபிமான விவகாரங்களுக்கான ஐ.நா. உதவிச் செயலாளர் நாயகமும் அவசர கால நிவாரண இணைப்பாளருமான வலேரி அமோஸ் தெரிவித்துள்ளார்.

மேலும் பல மில்லியன் கணக்கான மக்கள் தேவைகளை எதிர் கொண்டுள்ள நிலையில் அவர்களின் நிலை குறித்த கவனத்தை ஈர்ப்பதற்கு இந்த நிதியளிப்பு உதவும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்நிதியுதவியுடன் இவ்வருடத்தில் மத்திய அவசரகால பதிலளிப்பு நிதியத்திலிருந்து ஒதுக்கப்பட்ட மொத்த நிதியின் தொகை 158 மில்லியன் டொலராக அதிகரித்துள்ளது. கடந்த ஜனவரி மாதம் 13 நாடுகளுக்கு 104 மில்லியன் டொலர்கள் வழங்கப்பட்டன. (ந-2)

# சிறுவர் பாதுகாப்பு விழிப்புணர்வு கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் யாழ்.செயலகமும் லீட்ஸ் செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள மாவட்ட சிறுவர் கண்காட்சி எதிர்வரும் 15, 16, 17 ஆகிய திகதிகளில் நல்லூர் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்ட லீட்ஸ் நிறுவன அதிகாரி அறிவித்துள்ளார். (ந-2)

# விவேகானந்தர் விழைந்த மனித குலத்தொண்டு!



இன்னும் சொல்வதாயின் இந்த நாட்டில் மனித வாழ்க்கையை மேம்படுத்துகிற உணர்வு மங்கிப் போயிருந்த நிலையில் விவேகானந்தர் பட்டினி கிடக்கிறவனைப் பார்த்தார், பரதேசியைப் பார்த்தார், நோயாளியைப் பார்த்தார்.

அவர்களது துன்பத்தைக் கண்டு வருந்திய விவேகானந்தர், அவர்கட்கு நாம் ஆற்றவேண்டிய கடமையை உணர்த்துவதற்காகச் சொன்னார்.

பட்டினி கிடக்கிறவனுக்கு முன்னர் ஆண்டவன்கூட ரொட்டித் துண்டு வடிவத்திலேதான் தோன்றுவான். வேறு உருவத்திலேதான் தோன்றுவான். வேறு உருவத்திலே தோன்றமாட்டான் என்று.

அந்த உணர்வு நாட்டு மக்களை மனித உணர்வு கொள்ளத்தூண்டியது. இல்லையானால் பெரும்பாலோர் மனித நேய உணர்விழந்தவர்களாகத்தான் நடமாடியிருக்கிறார்கள்.

தென்னாட்டில் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே பசியினால் வாடும் பரம ஏழைக்குப் படைக்கும் உணவு பரமனுக்கே படைத்தது ஆகும்.

ஆனால் பரமனுக்கு படையல் இட்ட உணவு பசித்தவன் துயர் துடைக்காது என்று திருமூலர் அறிவுறுத்தியுள்ளார். எனினும் அதை மக்கள் உள்ளங் கொள்ளா நிலையே உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் சென். ஜோசெப்பை வீழ்த்தியது கிளிநொச்சி ம.வி.

அகில இலங்கை கிரிக்கெட் சபையினால் நடத்தப்படும் போட்டியில் கிளிநொச்சி ம.வி. எதிர் மன்னார் சென் ஜோசப் ம.வி. மோதின. இதில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற மன்னார் சென். ஜோசப் அணியினர் முதலில் களத் தடுப்பை தீர்மானித்தனர்.

அதன் அடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி ம.வி. 24 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 138 ஓட்டங்களைப் பெற்றனர்.

துடுப்பாட்டத்தில் கிளிநொச்சி ம.வி.சார்பில் ர.ரஜீவன் 27, இ. பேபிசன் 17 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் மன்னார் சென். ஜோசப் அணி சார்பில் சுமித் பிறின்டயஸ் 5, கெரிகிறில்ரஷன் சூசை 2 ; சிகர் குரூஸ் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.



பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மன்னார் சென். ஜோசப் அணியினர் 17.4 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 73 ஓட்டங்களை மாத்திரம் பெற்றனர்.

துடுப்பாட்டத்தில் மன்/ சென். ஜோசப் சார்பாக றொசின்ரன் குரூஸ் 12 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் கிளிநொச்சி ம.வி. சார்பில் ர.ரஜீவன் 4 , ஜெ. விதுஷன் 3 , ஜெ.கஜிவன் 2 , கோ. யதுஷன் ஒரு இலக்குகளையும் வீழ்த்தினர்.

இதன்மூலம் கிளிநொச்சி மகா வித்தியாலய அணி தொடர்ச்சியாக 4 போட்டிகளில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது-.

# கிரிக்கெட் சுற்றுப்போட்டி

வடமாகாண அரச ஊழியர்களுக்கிடையில் நடைபெற்ற 32 அணிகள் கொண்ட எட்டுப் பந்துப் பரிமாற்றம் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டியில் யாழ்.போதனா வைத்தியசாலையின் அரச ஊழியர் அணியினர் சம்பியனாகியுள்ளனர்.

கடந்த 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வவுனியா கலாசாலை மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் சுற்றின் இறுதிப்போட்டியில் யாழ்.போதனா வைத்தியசாலையின் அரச ஊழியர் அணியும் ரி.ரி.பி. அணியும் மோதின. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.போதனா வைத்தியசாலை ஊழியர் அணி எட்டு பந்துப் பரிமாற்றத்தில் 64 ஓட்டங்கள் பெற்றுக்கொண்டது.

65 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய ரி.ரி.பி அணி 26 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுக்களினையும் இழந்து படுதோல்வியடைந்தனர். இதில் வைத்தியர் திலீபன் தலைமையிலான யாழ். போதனா அணி வெற்றிக் கிண்ணத்தினை வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுக்கொண்டார்.




# உதயதாரகையின் உதைபந்தாட்டத்தில் சிவானந்தா, விண்மீன்கள் வெற்றி

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை ஆதரவில் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் பருத்தித்துறை லீக் இற்கு உட்பட்ட கழகங்கள் மோதின.

இப்போட்டிகள் யாவும் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறுகின்றது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை B பிரிவில் 3.30 மணிக்கு நடைபெற்ற போட்டியில் சிவானந்தா A அணியினை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக Bஅணி மோதிக் கொண்டது. இப்போட்டி 1:1 என்ற ரீதியில் சமநிலையில் முடிவடைந்ததையடுத்து பனால்ட்டி உதை கொடுக்கப்பட்டது. இதில் 5:4 என்ற கோல்கணக்கில் சிவானந்தா A அணி வெற்றிபெற்றது.

இரண்டாவதாக 4.30 மணிக்கு நடைபெற்ற போட்டியில் கலட்டி ஐக்கிய விளையாட்டு கழகத்தினை எதிர்த்து விண்மீன்கள் அணி மோதிக் கொண்டது.

இப்போட்டியில் 3:1 என்ற ரீதியில் விண்மீன்கள் அணி வெற்றி பெற்றது.

# உதயதாரகை வி.கழக உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி



பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை ஆதரவில் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் பருத்தித்துறை லீக்கிற்கு உட்பட்ட கழகங்கள் மோதவுள்ளன.

இதில் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் மைதானத்தில் இன்றைய தினம் நடைபெறும் ஆட்டத்தில் பி.ப.3.30 மணிக்கு A பிரிவில் இமையாணன் இளைஞர்களை எதிர்த்து நெடியகாடு அணி மோதவுள்ளது. D பிரிவில் கொலின்ஸ் அணியினை எதிர்த்து திக்கம் அணி மோதவுள்ளது.

# கிளிநொச்சி நாச்சிக்குடா சென்.மேரிஸ் அணி சம்பியன்

(வேலணை)

வடமாகாணத்தில் உதைபந்தாட்டத்துறையை வளர்க்கும் முகமாக யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் உதைபந்தாட்ட விழா 2012 நிகழ்வு கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இவ்விளையாட்டு விழாவிற்கு வடமாகாணத்திலுள்ள அனைத்து லீக்குகளிலிருந்து இரண்டு அணிகள் பங்குபற்றி உதைபந்தாட்டத்தை வடமாகாணத்தில் பிரபல்யமடையச் செய்யும் நோக்கோடு களம் புகுந்தனர்.

வடமாகாணத்திலுள்ள பலம்வாய்ந்த அணிகள் களத்தில் மோதியமையால் ஆட்டங்களில் விறுவிறுப்புக்கு பஞ்சம் இருக்காது என்ற நோக்கில் உதைபந்தாட்ட ரசிகர்கள் போட்டிகளைக் காணவந்தனர்.

யாழ்ப்பாண உதைபந்தாட்ட லீக், பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக், வலிகாமம் உதைபந்தாட்ட லீக், மன்னார் உதைபந்தாட்ட லீக், தீவக உதைபந்தாட்ட லீக், வவுனியா உதைபந்தாட்ட லீக், கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக் ஆகிய லீக்கைச்சேர்ந்த அணிகள் பங்கு கொண்டன.

முதல் சுற்றுப் போட்டிகளிலிருந்து முதலாவது அரையிறுதிப் போட்டிக்கு கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்கைச்சேர்ந்த நாச்சிக்குடா சென். மேரிஸ் அணியும் யாழ். உதைபந்தாட்ட லீக்கைச் சேர்ந்த பாசையூர் சென் அன்ரனிஸ் அணியும் மோதின விறுவிறுப்புக்கு பஞ்சமில்லாத இப்போட்டியில் கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்கைச் சேர்ந்த நாச்சிக்குடா சென்.மேரிஸ் அணி 1:0 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு முதலாவது அணியாக உள்நுழைந்தது.

இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கைச் சேர்ந்த இரு அணிகளான மயிலங்காடு ஞானமுருகன் அணியும் இளவாலை சென்லூட்ஸ் அணியும் மோதியது.

அபாரமாக ஆடி மயிலங்காடு ஞானமுருகன் அணி எளிதான முறையில் 1:0 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதிப் போட்டியில் நாச்சிக்குடா சென் மேரிஸ் அணியை எதிர்கொண்டது.

ஆரம்பத்திலிருந்து இரு அணிகளும் வெற்றி பெறும் நோக்கில் கோல்களைப்பெற முனைந்தன. நாச்சிக்குடா சென்மேரிஸ் அணி வீரர்கள் சிறப்பான முன்நகர்த்தலின் மூலம் 2:0 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றி பெற்று நாச்சிக்குடா சென்மேரிஸ் அணி சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது. மயிலங்காடு ஞானமுருகன் அணி இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லண்டன் ஒலிம்பிக் அமெரிக்கா முதலிடம்

லண்டன் ஒலிம்பிக் முடிபில் பதக்கப் பட்டியலில் சீனாவை விட அமெரிக்கா 8 தங்கம் முன்னிலையில் முதலாவது இடத்தைப் பெற்றது.

தொடர்ந்து சீனாவும் அமெரிக்காவும் முதலிடத்துக்கு வலுவான போட்டியில் ஈடுபட்டன. முடிபில் சீனா 2-வது இடத்துக்கு பின் தங்கியது.

அமெரிக்கா 46 தங்கம், 29 வெள்ளி, 29 வெண்கலங்களோடு 104 மொத்தப் பதக்கங்களைப் பெற்று முதலிடத்தைப் பிடித்தது.

சீனா 38 தங்கம், 27 வெள்ளிகள், 22 வெண்கலம் என 87 மொத்தப் பதக்கங்களோடு இரண்டாவது இடத்தில் காணப்படுகின்றது.

29 தங்கம், 17 வெள்ளி, 19 வெண்கலம் என 65 மொத்தப் பதக்கங்களைப் பெற்று பிரிட்டன் 3-வது இடத்தைப் பெற்ற அதேவேளை,

தொடர்ச்சியாக முன்னேற்றத்தைப் பெற்றுவந்த ரஷ்யா 24 தங்கங்கள், 25 வெள்ளி, 33 வெண்கலம் என 82 மொத்த பதக்கங்களுடன் 4வது இடத்திலும்,

முறையே தென் கொரியா, ஜேர்மனி, பிரான்ஸ் ஆகியன 5, 6மற்றும் 7ஆம் இடங்களைப் பெற்றன.

இத்தாலி மற்றும் ஹங்கேரி ஆகியன தலா 8 தங்கப் பதக்கங்களுடன் முறையே 8 , 9ஆம் இடங்களையும்,

அவுஸ்திரேலியா, ஜப்பான் ;கஜகஸ்தான் ஆகியன தலா 7 தங்கங்களுடன் 10, 11, 12ஆம் இடங்களையும்,

நெதர்லாந்து, உக்ரேன் ஆகியன தலா 6 தங்கங்களுடன் 13, 14ஆம் இடங்களையும்,

5 தங்கங்களுடன் கியூபா மற்றும் நியூசிலாந்து ஆகியன முறையே 15, 16ஆம் இடங்களையும் பெற்றன.

4 தங்கங்களுடன் ஈரான், ஜமேக்கா, செக் குடியரசு, வட கொரியா முறையே 17, 18, 19 மற்றும் 20 ஆவது இடங்களைப் பெற்றன.

## ஒலிம்பிக் போட்டியின் இறுதி நிலைவரப்படி

LONDON 2012

## ஒலிம்பிக் பதக்கப் பட்டியல்

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| அமெரிக்கா | 46 | 29 | 29 | 104 |
| சீனா | 38 | 27 | 22 | 87 |
| பிரிட்டன் | 29 | 17 | 19 | 65 |
| ரஷ்யா | 24 | 25 | 33 | 82 |
| தென்கொரியா | 13 | 8 | 7 | 28 |
| ஜேர்மனி | 11 | 19 | 14 | 44 |
| பிரான்ஸ் | 11 | 11 | 12 | 34 |

# டில்ஷானின் பஸ்னாகிர வெற்றி

சிறிலங்கா பிரிமியர் லீக் தொடரின் 2ஆவது போட்டியில் பஸ்னாகிர அணி வெற்றி பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற 2-வது போட்டியில் பஸ்னாகிர அணி, கந்துரட்ட வாரியர்ஸ் அணியுடன் மோதியது. ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டி மழை காரணமாக 13 ஓவர்கள் கொண்ட போட்டியாக மாற்றப்பட்டு நடைபெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கந்துரட்ட வாரியர்ஸ் அணியின் தலைவர் திலான் சமரவீர களத்தடுப்பை தெரிவு செய்தார்.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பஸ்னாகிர அணி 13 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 129 ஓட்டங்களைக் குவித்தது.

இதனையடுத்து 13 ஓவர்களில் 130 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய கந்துரட்ட வாரியர்ஸ் அணி 7 விக்கெட்டுகளை இழந்து 95 ஓட்டங்களை மட்டுமே பெற்று 34 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

# உத்துர அணிக்கெதிராக வயம்ப அணி இலகு வெற்றி



சிறிலங்கா பிரிமியர் லீக் தொடரின் 3ஆவது போட்டியில் வயம்ப யுனைட்டட் அணி இலகுவான வெற்றியைப் பெற்றுக் கொண்டுள்ளது.

உத்துர ருட்ராஸ் அணிக்கு எதிரான இப் போட்டியில் வயம்ப யுனைட்டட் அணி 9 விக்கெட்டுகளால் இலகுவான வெற்றி பெற்றது.

கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் இடம்பெற்ற இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற வயம்ப யுனைடட் அணியின் தலைவர் மஹேல ஜெயவர்த்தன தங்கள் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடும் எனத் தெரிவித்தார்.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய் உத்துர(வடக்கு) ருட்ராஸ் அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 179 ஓட்டங்களை பெற்றது.

துடுப்பாட்டத்தில் உத்துர ருட்ராஸ் அணி சார்பாக இம்ரான் பர்ஹத் 22 பந்துகளில் 51 ஓட்டங்களையும், சாமர கப்புக்கெதர 38, பர்வீஸ் மஹரூப் 28, மஹேல உடவத்த 28 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் வயம்ப யுனைட்டட் அணி சார்பாக இசுரு உதான 38 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

180 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய வயம்ப யுனைட்டட் அணி 19.2 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் வயம்ப யுனைட்டட் அணி சார்பாக தமிம் இக்பால் ஆட்டமிழக்காமல் 61 பந்துகளில் 93 ஓட்டங்களையும், கம்ரான் அக்மல் 55 பந்துகளில் 79 ஓட்டங்களையும் பெற்றனர்.

இப்போட்டியின் நாயகனாக தமிம் இக்பால் தெரிவானார்.




டெசோ மாநாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பில் இந்திய தூதுவரின் வாசஸ்தலத்திற்கு முன்னால் சம்பந்தன் மற்றும் கருணாநிதியின் கொடும்பாவிகள்...

# தவறான வாக்குறுதியை...

நீதிமன்றம், நேற்று மதியம் அனுமதியளித்தது. அங்கு மாநாட்டை நடத்த அனுமதி மறுத்த, சென்னை மாநகர பொலிஸ் ஆணையரின் உத்தரவிற்கு நீதிபதிகள் இலிபி தர்மாராவ் மற்றும் வேணுகோபால் ஆகியோர் அடங்கிய அமர்வு தடை விதித்தது.

இதையடுத்து மாநாடு ராஜப்பேட்டை வை.எம்.சி.ஏ. அரங்கிலேயே நடக்கும் என்று தி.மு.க. அறிவித்தது. முன்னதாக தமிழ் ஈழ ஆதரவாளர் அமைப்பின் மாநாட்டின் ஒரு பகுதியாக நடந்த ஆய்வரங்கை தி.மு.க. தலைவர் கருணாநிதி தொடக்கி வைத்தார். சென்னை அர்க்கார்டு ஹோட்டலில் காலை 10 மணிக்கு தொடங்கிய இந்த ஆய்வரங்கிற்கு தி.மு.க. தலைவர் கருணாநிதி தலைமை வகித்தார்.

லோக் ஜனசக்தி கட்சியின் தலைவர் ராம் விலாஸ் பஸ்வான், சமாஜ்வாதி கட்சியின் ராம் கோபால் யாதவ், இலங்கையின் மனிதவுரிமை செயற்பாட்டாளர் விக்கிரமபாகு கருணாரட்ண, ஆம்னஷ்டி இண்டர்நஷனல் உள்ளிட்ட மனிதவுரிமைகள் அமைப்பின் சர்வதேச பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர்.

மேலும் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சுப.வீரபாண்டியன், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன், மத்திய அமைச்சர் மு.க.அழகிரி, கனிமொழி எம்.பி. மற்றும் தி.மு.க. மூத்த நிர்வாகிகள் மற்றும் பலரும் இந்த ஆய்வரங்கில் பங்கேற்றனர்.

சென்னையில் டெசோ மாநாட்டை முன்னிட்டு ஈழத்தமிழர் வாழ்வுரிமை பாதுகாப்பு ஆய்வரங்கத்தை நேற்றுக் காலை தொடங்கி வைத்து கருணாநிதி பேசியதாவது,

இலங்கையில் போருக்கு முன்பும், போருக்கு பின்பும் நடைபெற்றுவரும் நிகழ்வுகளைக் கண்டு உலக நாடுகள் மிகவும் கவலையடைந்துள்ளன.

ஈழத்தமிழர்களின் பிரச்சினையானது மனிதாபிமானம், மனிதவுரிமைகள், சுயமரியாதை தொடர்புடையது. பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் அதிகப்படியாக தாமதம் செய்வது, மேலும் பல பாதிப்புக்களை ஏற்படுத்திவிடும். தம் ,மொழி, கலாசாரம் இவற்றின் பெயரால் அடக்குமுறைகள் நடைபெற அனுமதிக்ளகக் கூடாது.

### அன்றைய டெசோ

1986ஆம் ஆண்டு மே மாதம் 4ஆம் திகதி மதுரையில் டெசோ சார்பில் நடைபெற்ற டெசோ மாநாட்டில் வாஜ்பாய், என்.டி.ராமராவ், பகுகுணா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். அனைத்து ஈழத்தமிழ் மற்றும் போராளிக் குழுக்ளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

ஈழத்தமிழர் பிரச்சினையில் 50 ஆண்டுகளுக்கு மேலாக உறுதியான மற்றும் உணர்வு பூர்வமான ஆதரவை தி.மு.க. அளித்து வருகிறது. தொடர்ந்து அவர்களுக்கு எப்போதும் உறுதுணையாக இருப்போம்.

### தி.மு.கவின் தியாகம்

1983இல் ஈழத்தமிழர்கள் படுகொலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நானும், பேராசிரியர் அன்பழகன் உள்ளிட்ட தி.மு.க. எம்.எல்.ஏக்களும் இராஜினாமா செய்தோம். ஈழத்தமிழர்களுக்கு ஆதரவளித்ததற்காக இரண்டு முறை தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டது.

### ஏமாற்றிய இலங்கை

ஈழத்தில் இறுதிப் போரின்போது இரச் ... இந்தியா தலையிட்டு ... யும், அண்ணா நினைவிடத்தில் 27.04.2009 அன்று சாகும்வரை உண்ணாவிரதம் தொடங்கினேன்.

இலங்கை அரசு மற்றும் இந்திய வெளியுறவுத்துறை உத்தரவாதமளித்து அதன் நகல் எனக்கு அனுப்பப்பட்டது. போர் முடிவுக்கு வந்ததாக நினைத்து உண்ணாவிரதத்தை நான் முடித்துக் கொண்டேன். ஆனால் இலங்கை அரசு இந்தியாவை ஏமாற்றிவிட்டது.

### அற்புதமான தியாகங்கள்

இலங்கையில் போருக்கு முன்பும், போருக்குப் பின்பும் தமிழர்கள் இரண்டாம் தர குடிமக்களாக நடத்தப்படுகிறார்கள். அவர்களுக்கு சட்ட உரிமைகள் மறுக்கப்படுகின்றன. ஈழத் தமிழர்கள் புரிந்த தியாகங்கள் அற்புதமானவை. அவர்கள் அனுபவித்த சித்திரவதைகளும், அடக்குமுறைகளும் கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாதவை.

தமிழர்களின் அன்றாட வாழ்வில் திட்டமிட்ட சிங்களமயமாக்கல் எவ்வாறு நடைபெற்று வருகின்றன என்பதையும் தமிழர்கள் மீது ஏவப்படும் சட்டமீறல்களையும், கொடுமையான இடையூறுகளையும் இவை தெளிவுபடுத்துகின்றன.

தமிழர்கள் தங்களின் இயல்பு வாழ்க்கைக்கு திரும்புவதற்கான பாதையில் முட்புதர்களும், புதைகுழிகளும் நிறைந்துள்ளதை இவை காட்டுகின்றன.

### அவசர நிலையும் அடக்குமுறையும்

தமிழர்களின் வசிப்பிடங்களில் அவசர நிலை அமுலில் உள்ளது போன்ற நிலைமையை இலங்கை இராணுவம் உருவாக்கி வருவது வேதனையளிக்கத்தக்கது. ஜெனிவாவில் இயற்றப்பட்ட தீர்மானத்திற்குப் பிறகும் இவை மேலும் அதிகரித்துள்ளது.

### குறுகிய கால - நீண்ட கால தீர்வு

போரினால் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கு மீள்குடியமர்வு, நிவாரணம், புனர்வாழ்வு ஆகியவற்றுக்காக அவசர தீர்வு காணப்படவேண்டும்.

இடைக்காலத் தீர்வாக உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை தேவைகளை நிறைவேற்றி தமிழர்கள் நிம்மதியாக வாழ வழிவகைகள் செய்ய வேண்டும். சொத்துரிமை, கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் இதர ஜனநாயக உரிமைகள் நிலைநாட்டப்பட வேண்டும். அகதிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும் இதில் அடங்கும். நிரந்தர தீர்வாக நீண்டகாலமாக விவாதிக்கப்பட்டு வரும் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்றார். (ஏ-8)

# ஈரானில் நில...

இதுதவிர, 100 கிராமங்கள் வரை நி[...]க்கத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன[...]யிரக்கணக்கானோர் தங்களது வீடு ம[...]ம் உடமைகளை துறந்து வேறு இடங்க[...]த பாதுகாப்புத் தேடி சென்றுள்ளனர். அவர்[...]தற்காலிக கூடாரங்களில் தங்க வைக்கப்[...]ளனர்.

இவ் நில நடுக்கத்[...]யானோரின் எண்ணிக்கை மேலும்[...]க்கக் கூடும் என ஈரான் அதிகாரிகள்[...]த்துள்ளனர்.

இத[...]யே, மீட்புப்பணிகளும் தீவிரமாக மு[...]க்கப்பட்டு வருகின்றன. தப்ரிஸ் [...] அஹர் பகுதிகளில் 6.4 மற்றும் 6.3 [...] ரிச்டர் அளவு கோல்களில் நிலநடுக்கம் [...]றபட்டதுடன், 55 சிறியளவிலான நில அதிர்வுகளும் உணரப்பட்டுள்ளன. (ஏ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச தரத்திலான விசா ஆலோசனை

புதிய நிர்வாகக் கட்டமைப்புடன்
7 நாட்களும்
காலை 7 மணிமுதல் இரவு 7 மணி வரை
ஆஸ்திரேலியா
நியூசிலாந்து
மலேசியா
விசா ஆலோசனைகள்

(C-756)

A. பிரவீணா
நிர்வாக இணை இயக்குனர்
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட (PV82703)
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
37, சிவகுருநாதர் லேன்,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
021 221 9016




# மனித உரிமைகள் மாநா...

சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் பேரவைக்கு அழைப்புகள் விடுக்கப்படிருக்கின்றமை தொடர்பாக வெளியாகியுள்ள ஊடக தகவல்கள் தொடர்பாக ஆராய்ந்து வருகிறோம்.

ஜெனீவாவில் இருக்கின்ற எமது பிரதிநிதிக்கு இது குறித்து ஆராயுமாறும், முழுமையான அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் பணித்திருக்கின்றோம்.

ஜெனீவா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவிடம் இருந்து இதுவரை எமக்கு உத்தியோகபூர்வ அழைப்பு எதுவும் விடுக்கப்படவில்லை. கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படுவதாக எந்த தகவலும் இல்லை.

ஆனால் ஊடகங்களில் தகவல்கள் வெளியாகியிருந்தன. அதனை நான் பார்த்த மாத்திரத்தில் எமது தூதுவருக்கு அறிவித்தேன். அது உண்மையானதா இல்லையா என்பது பற்றி அறிந்து கொள்ளமுன் எந்தக் கருத்தையும் வெளியிட முடியாதுள்ளது என்றார்.

இதனிடையே சென்னையில் இடம்பெறும் டெசோ மாநாடு தொடர்பாக ராஜதந்திர ரீதியாக இலங்கை மற்றும் இந்திய அரசாங்கங்களுக்கு இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றதா எனவும் அந்த செய்தியாளர் சந்திப்பில் வினவப்பட்டது.

அதற்கு பதிலளித்த அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், அது தொடர்பாக சில விடயங்கள் குறித்து இந்திய அரசாங்கத்துடன் கலந்துரையாடல் மேற்கொண்டதாக தெரிவித்தார்.

இது உண்மையில் இந்திய மத்திய அரசாலோ தமிழக அரசாலோ முன்னெடுக்கப்படும் மாநாடு அல்ல. எனவே அதனை இந்திய அரச நிர்வாகத்தால் நடத்தப்படும் நிகழ்வாக கருதமுடியாது. இது குறித்த நிலைப்பாடு இந்தியாவினுள்ளும் இருக்கின்றது.

நாங்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதத்திலேயே இந்தியாவிலும் கொள்கை கடைப்பிடிக்கப்படுகிறது என தெரிவித்தார். (எ-8)

# கருணாநிதி, சம்பந்தனுக்...

இரத்தவெறி பிடித்தவர்கள் எனவும் அவர்கள் கூறினர். ஆர்ப்பாட்டத்தில் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர உட்பட பலர் கலந்து கொண்டனர்.

டெசோ மாநாட்டில் ஈழம் என்ற வார்த்தையை பயன்படுத்தக் கூடாதென தடைவிதித்த இந்திய மத்திய அரசு பின்னர் அந்த வார்த்தையை பயன்படுத்தலாம் என அறிவித்து தமது இரட்டை வேடத்தை வெளிப்படுத்தியுள்ளதாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் வழங்கி தமிழ்மக்களுக்குஈழத்தைப்பெற்றுக்கொடுக்க முனைந்த இந்தியா அது தோல்வியுற்றதால் இன்று இலங்கையில் பொருளாதார ஆக்கிரமிப்பை மேற்கொண்டு இலங்கையை அடிமைப்படுத்தி தனது இலக்கை எட்டிக்கொள்ள முயற்சிக்கிறது.

இலங்கை ஒரு இறைமை கொண்ட நாடு. எனவே இதன் உள் விவகாரங்களில் தலையிட வேண்டாம் என இந்தியாவை கேட்டுக்கொள்கிறோம் என அதன் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொணட வர்கள் தி.மு.க. தலைவர் கருணாநிதி மற்றும் த.தே.கூ. தலைவர் ஆர்.சம்பந்தன் ஆகியோரின் உருவப் பொம்மைகளை புலி வெட்கமில்லையா என்று திட்டி செருப்பால் அடித்துள்ளனர். (எ-8)

# தமிழர் பகுதிகளில் இருந்...

பல்வேறு சிக்கல்களைக் கடந்து சென்னை உயர் நீதிமன்ற உத்தரவின் பேரில் டெசோ மாநாடு ராயப்பேட்டை வை.எம்.சி.ஏ.அரங்கில் நடைபெற்றது. மாநாட்டில் இலங்கைத் தமிழர் நலன்களை மேம்படுத்தும் வகையில் 14 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.


விடுதலைப் புலிகளுடனான மோதல்களின் இறுதிக்கட்டங்களில் பொதுமக்கள் பல்லாயிரக்கணக்கில் கொல்லப்பட்டனர். எனவே இலங்கையில் நிகழ்ந்த போர்க்குற்றங்களுக்கான பன்னாட்டு விசாரணையை இன்னொரு தீர்மானம் கோரியது.

தவிரவும்இலங்கைத் தமிழர் நலனில் இந்திய அரசு போதிய அக்கறை காட்டுவதில்லை என்று குறைகூறிதமிழர் அனைத்து உரிமைகளையும்பெற்று அங்கு வாழ தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இந்தியா மேற்கொள்ளவேண்டும்.

தமிழர் பகுதிகளில் மறுவாழ்வு பணிகளை கண்காணிக்கபன்னாட்டு குழு அமைக்க வேண்டும். தமிழர் பகுதிகளில் இருந்து இலங்கை இராணுவத்தை வெளியேற்றவேண்டும், தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் இலங்கை சிறைகளிலிருந்து விடுதலை செய்யப்பட வேண்டும், இலங்கையில் தமிழ் மொழி அடையாளங்கள் அழிக்கப்படுவதை தடுக்க வேண்டும். இந்தியாவில் உள்ள அனைத்து இலங்கை,அகதிகளுக்கும்இந்தியகுடியுரிமைஅல்லதுஅவர்கள்இந்தியாவில் நிரந்தரமாக வாழ வழிவகை செய்ய வேண்டும் என்று கூறும் தீர்மானங்களும் நேற்றைய மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன. (எ-8)


௩௦ஆம் நாள் நினைவஞ்சலியும்
அந்தியேட்டி அழைப்பிதழும்

அமரர் செல்வி கஜேந்திரன் வைஷ்ணவி (கஸ்தூரி)



அன்புடையீர்!

கடந்த 17.05.2012 அன்றில் இறைபதம் அடைந்த எமது அன்புப்புதல்வி அமரர் செல்வி கஜேந்திரன் வைஷ்ணவி (கஸ்தூரி) அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து ஆறுதல் கூறியவர்களிற்கும் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டவர்களிற்கும் எமது துக்கத்தில் பகிர்ந்து கொண்ட அனைவரிற்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். 14.08.2012 செவ்வாய்க்கிழமை அன்று அன்னாரின் அந்தியேட்டி சபிண்டீகரண கிரியைகளும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பித்துச் செல்லுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஊறணி குடியேற்றம்,
பொலிகண்டி மேற்கு,
வல்வெட்டித்துறை.

கஜேந்திரன் குடும்பத்தினர்

(209)



மணல்
விற்பனைக்குண்டு

கட்டிட வேலைக்கும் பூச்சு வேலைக்கும் சிறந்த மணல் மண் இப்போது உங்கள் இடத்திற்கே கொண்டு வந்து தரப்படும்.

4 டிரக்டர் – 19,500/-

தொடர்புகளுக்கு
ரமேஸ்
0722694462

(210)



நல்லூர் கந்தன் ஆலய திருவிழாவை முன்னிட்டு



உலகப் புகழ்பெற்ற மேஜிக் நிபுணர்கள்
ஒன்றிணைந்து வழங்கும் மாபெரும்

மாயாஜால
காட்சிகள்



- 14.08.2012 மாலை 6.30 மணிக்கு
- 15.08.2012 மாலை 6.30 மணிக்கு (சப்பறத் திருவிழா)
- 16.08.2012 காலை 10.30 மணிக்கு (தேர்த் திருவிழா)
- 16.08.2012 பிற்பகல் 3.00 மணிக்கு (தேர்த் திருவிழா)
- 16.08.2012 மாலை 6.30 மணிக்கு (தேர்த் திருவிழா)

கண்களைத் திறந்து அதிசயம் காண்போம்

நுழைவுச் சீட்டுக்கள் : 200/= 300/= 500/=
மண்டப வாயிலில் சிறுவர் சிறுமிகளுக்கு : 100/=

இடம் : யா/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலய உள்ளரங்கு

பிரதான அனுசரணை
ராம்கோ சீமெந்து


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.08.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org